**ம.அ.4.வ.து.ந.க.எண்.ஆர்1/757/2021**

**தீர்மானஎண்.435/2021** **நாள்:03-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 4, வார்டு–34 முதல் 48 வரை - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி கொரோனா தடுப்பு தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையில் மூன்று மாத காலத்திற்கு மண்டல அலுவலர்–4ன் மூலமாக சிறப்பு அதிகாரி/மன்றத்தின் பின்னேற்பு ஆணையினை எதிர் நோக்கி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID–19) இரண்டாம் அலை பல நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of Internatonal Concern (PHEIC) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது.

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID–19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோவிட் நோய் தடுப்பு பணிகளுக்கென வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை கண்காணிக்கும் திட்டத்தின் கீழ் (Focus Volunteers) (Friend of Covid Citizen under Surveillance) தன்னார்வலர்களை ஐந்து தெருக்களுக்கு ஒருவர் வீதம் 1 முதல் 15 மண்டலங்களில் 4000 நபர்களை கோவிட்–19 நோய் தொற்றின் போது கடந்த ஆண்டு இப்பணிக்கென நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த தன்னார்வலர்கள் நோய் அதிகம் பாதிக்கப்பட்ட தெருக்களில் உள்ள ஒவ்வொரு வீடுகளை கண்காணிப்பதோடு வீட்டில் உள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் பணிகளை மேற்கொண்டு வந்தனர். இதனால் நோய் பாதிக்கப்பட்டவர்கள் வெளியில் செல்லாமல் இருந்த காரணத்தினால் கொரோனா நோயினை வெகுவாக கட்டுப்படுத்த முடிந்தது. மேற்படி தன்னார்வலர்கள் மண்டல உதவி வருவாய் அலுவலர்களின் மேற்பார்வையில் பணிபுரிந்தனர்.

தற்போது கோவிட் இரண்டாம் அலை பணிக்கென முதற்கட்டமாக வார்டு ஒன்றிற்கு பத்து தன்னார்வலர்கள் வீதம் 200 வார்டுகளுக்கு 2000 தன்னார்வலர்கள் பணியமர்த்த ஆணையர் அவர்களால் 12.04.2021 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் மண்டலம் 1 முதல் 5 மண்டலங்களில் உள்ள 63 வார்டுகளுக்கு 630 தன்னார்வலர்களை மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தவும் இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரத்துறையில் 1 முதல் 15 மண்டலங்களில் 3577 கொசு ஒழிப்பு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதில் 2326 தற்காலிக பணியாளர்கள் NULM மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த பணியாளர்கள் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்தபட்ச தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி 2020–2021ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஊதிய நிர்ணயத்தில், கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.391/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒரு மாத கால ஊதியம் 30X391 ஆகும். மாநகராட்சி மூலம் பணியமர்த்தப்படும் கொசு ஒழிப்பு பணியாளர்களும் இந்த சம்பள அடிப்படையிலேயே பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

எனவே, கொரோனா நோய் இரண்டாம் அலை தடுப்பு நடவடிக்கைக்காக ஆணையர் அவர்களின் 15.04.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி வடக்கு வட்டார அலுவலகத்திற்கு உட்பட்ட மண்டலம்–4ல் 34 முதல் 48 வரையிலான கோட்டங்களுக்கு ஒரு கோட்டத்திற்கு 10 நபர்கள் வீதம் 15 கோட்டத்திற்கு 150 தன்னார்வலர்களை மாதம் ரூ.11730/– சம்பளத்தில் ஒப்பந்த அடிப்படையில் 3 மாத காலத்திற்கு பணியமர்த்தி கீழ்கண்ட அளவில் செலவினம் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

**ம.அ.4.வ.து.ந.க.எண்.ஆர்1/757/2021**

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் இரண்டாம் அலை தொற்று தடுப்புப் பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் கருதி மண்டலம்-4ல் கோட்டம் 34 முதல் 48 வரையிலான வார்டுகளுக்கு 150 தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச தினக்கூலி ரூ.391/- என்ற அடிப்படையில் மாத ஊதியம் ரூ.11730/- என நிர்ணயம் செய்ய சிறப்பு அதிகாரி/மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,
2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (H2) துறையின் அரசாணை (Ms) எண்.161 நாள்.27.03.2020ல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-aல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் நேரடியாக 150 கொரோனா நோய் தடுப்பு தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையிலான 3 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக்கொள்ள மண்டல அலுவலருக்கு அனுமதியும்,
3. ஏற்கெனவே இப்பணியில் ஈடுபட்டிருந்த தன்னார்வலர்களை முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்த அனுமதியும்,
4. மாதந்தோறும் சம்பந்தப்பட்ட உதவி வருவாய் அலுவலரிடமிருந்து வருகைச்சான்று பெற்று மண்டல அளவில் பட்டி தீர்வு செய்ய மண்டல அலுவலரை அனுமதிக்கவும் ,
5. இப்பணிக்கான நிர்வாக செலவீனம் ரூ.11730X 150 X 3 மாங்களுக்கு மொத்த செலவீனத்தொகை ரூ. 52,78,500/- (ரூபாய் ஐம்பத்து இரண்டு இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து ஐநூறு மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,
6. இதற்கான செலவீனம் கோவிட்-19 க்கென ஒதுக்கப்பட்டுள்ள கணக்கு குறியீடு எண். 20-21-07, கணக்கு தலைப்பு எண். 70-12-03 கீழ் நிதி ஒதுக்கீடு செய்து செலவு செய்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 30.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.12.ந.க.எண். ADE/2144/2021**

**தீர்மானஎண்.436/2021** **நாள்:03-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12 - கொரோனா பெருந்தொற்று (கோவிட்-19) இரண்டாவது அலை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல் - சென்னை வர்த்தக மையம் Covid Care Hospital ஆக மாற்றுவதற்கு தேவையான மின்சார வசதிகள், தகவல் தொடர்பு அமைப்பு (PA System) மற்றும் CCTV Camera ஏற்படுத்தும் பணிகள் - முன்பணம் பெற்று செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 12, கொரோனா பெருந்தொற்று (COVID 19) இரண்டாவது அலை தீவிரமடைந்து பரவி வரும் நிலையில் வார்டு-158ல் உள்ள சென்னை வர்த்தக மையத்தினை தோராயமாக 1000 படுக்கைகள் கொண்டு Covid Care Hospital ஆக மாற்றுவதற்கு தேவையான மின்சார வசதிகள், தகவல் தொடர்பு அமைப்பு (PA System) ஏற்படுத்துதல் மற்றும் CCTV Camera நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மேற்படி பணிகள் மேற்கொள்வதால் ஏற்படும் செலவின விவரம் இந்நிதியாண்டின் விலை விவரங்களின்படி தயாரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்டுகிறது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

| Sl.No | Description of work | Work Cost | GST 18% | TOTAL |
|---|---|---|---|---|
| 1. | Providing wiring and supply of pedestal fans exhaust fans, tube lights, and plug points with necessary elecltlrical assessories. | 5487684.00 | 987783.12 | 6475467.12 |
| 2. | Supply and installation of Public Address System with necessary asscessories | 1308654.00 | 235557.72 | 1544211.72 |
| 3. | Supply and installation of CCTV cameras with necessary accessories | 451095.00 | 81197.10 | 532292.10 |
| | Total | 7247433.00 | 1304537.94 | 8551970.94 |

எனவே மேற்படி அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ள,

(அ) கொரோனா பெருந்தொற்று (COVID 19) இரண்டாவது அலை தீவிரமடைந்து பரவி வரும் நிலையில் வார்டு-158ல் உள்ள சென்னை வர்த்தக மையம் தோராயமாக 1000 படுக்கைகள் கொண்டு Covid Care Hospital ஆக மாற்றுவதற்கு தேவையான மின்சார வசதிகள், தகவல் தொடர்பு அமைப்பு (PA System) ஏற்படுத்துதல் மற்றும் CCTV Camera நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஏற்படும் செலவினம் ரூ.85,51,971 /- (வரிகள் உட்பட) முன்பணமாக பெற்று பணிகள் மேற்கொள்ள நிர்வாகஅனுமதியும்,

(ஆ) மேற்படி தொகை ரூ.85,51,971 /.ஐ 20-21-07 பிரிவு குறியீடில் கணக்குத் தலைப்பு எண்.230-70-12-05 (மின் ஏற்பாடு)ல் நிதி ஒதுக்கீடு செய்ய நிதி ஆலோசகர் அவர்களைக் கேட்டுக் கொள்வதற்கும்,

(இ) மேற்படி தொகை ரூ.85,51,971 /.ஐ உதவி மின் கோட்ட பொறியாளர், மண்டலம்-12 அவர்கள் பெயரில் காசோலையாக வழங்குவதற்கும்,

(ஈ) மேற்படி பணிக்கான செலவினம் மேற்கொண்டபின் பெறப்படும் பட்டிகளின் அடிப்படையில் உரிய கணக்குத் தலைப்பில் நேர்செய்வதற்கும்

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

**********

**ம.அ.12ந.க.எண்.இ1/ 1879/ 2021/ 05**

**தீர்மானஎண்.437/2021** **நாள்:03-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12, வார்டு - 158ல் சென்னை வர்த்தக மையத்தில் அமைக்கப்படவுள்ள Covid Care Centre ல் தனியார் நிறுவனம் மூலம் உணவு வழங்குதல் - 31 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.350/- வீதம் உத்தேச செலவீனம் ரூ. 1,08,50,000/- க்கு செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் முன்பணம் பெறஅனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12க்குட்பட்ட பகுதிகளில் மீண்டும் கொரோனா வைரஸ் நோய் தொற்று அதிக அளவில் ஏற்படுவதால் நோய் தொற்று கண்டறியப்பட்டவர்களை, சிகிச்சை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வார்டு – 158ல் சென்னை வர்த்தக மையத்தில் அமைக்கபடவுள்ள Covid Care Centre-ல் 950 நோயாளிகள் சிகிச்சை அளித்து தங்க வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தங்க வைக்கப்படும் நோயாளிகளுக்கு காலை, மதியம் மற்றும் இரவு என மூன்று வேளைக்கு உணவு வழங்குவதற்கு உத்தேசமாக நாள் ஒன்றுக்கு ரூ.350/-என நிர்ணையம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மருத்துவ குழுவினர், பணியாளர்கள் மற்றும் நோயாளிகளுக்கும் நாள் ஒன்றுக்கு தோராயமாக 1000 என்ற கணக்கிற்கு ரூ.350/- வீதம் மொத்தம் 31 நாட்களுக்கு ரூ. 1,08,50,000/- வரை ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, வார்டு-158ல் சென்னை வர்த்தகமையத்தில் அமைக்கப்படவுள்ள Covid Care Centre-ல் பணிபுரியும் மருத்துவ குழுவினர், பணியாளர்கள் மற்றும் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு காலை, மதியம் மற்றும் இரவு உணவு வழங்கும் பணியினை 31 நாட்களுக்கு முன்பணம் பெற்று பணி மேற்கொள்வதற்கு ரூ.1,08,50,000/- (ரூபாய் ஒரு கோடியே எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2) மேற்படி பெறப்படும் முன்பணத் தொகை ரூ1,08,50,000/- (ரூபாய் ஒரு கோடியே எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) உதவி செயற் பொறியாளர்-தி.க.மே, மண்டலம்-12 அவர்களின் பெயரில் வழங்கவும்,
3) மேற்படி முன்பணத் தொகையை நேர் செய்ய 20-21-07 பிரிவு குறியிடு கணக்கு எண். **230-70-12-00**-ல் (Food Expenses) நிதி ஒதுக்கிடு செய்ய நிதி ஆலோசகர் அவர்களை கேட்டுக்கொள்ளவும்,
4) மேற்படி செலவீனம் மேற்கொண்டபின் பெறப்படும் உரிய பட்டிகளின் அடிப்படையில் தீர்வு செய்து நேர் செய்வதற்கும்,
5) அவசரம் மற்றும் அவசியம் கருதி பணியினை மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

************

**ம.அ.12.ந.க.எண்.இ1/ 1879/2021 / 06**

**தீர்மானஎண்.438/2021** **நாள்:03-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12, கொரோனா வைரஸ் நோய் தொற்று அதிக அளவில் ஏற்படுவதால் நோய் தொற்று கண்டறியப்பட்டவர்களை, சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக வார்டு-158ற்குட்பட்ட சென்னை வர்த்தக மையத்தில் அமைக்கப்படவுள்ள Covid Care Centreல் தங்க வைக்கப்படவுள்ள 950 கொரோனா நோயாளிகள் மற்றும் வார்டு - 166ற்குட்பட்ட A.M.Jain College-ல் அமைக்கப்படவுள்ள Screening Center மற்றும் Covid Care Ccnter-ல் தங்க வைக்கப்படவுள்ள 210 நோயாளிகளுக்கும் இரண்டு மாதத்திற்கு குடிநீர் வழங்க (water bottle) ஆகும் செலவினத் தொகை 50,08,800/-க்கு முன்பணம் பெற்று பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12க்குட்பட்ட பகுதிகளில் மீண்டும் கொரோனா வைரஸ் நோய் தொற்று அதிக அளவில் ஏற்படுவதால் நோய் தொற்று கண்டறியப்பட்டவர்களை, சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக வார்டு – 158ற்குட்பட்ட சென்னை வர்த்தக மையத்தில் அமைக்கப்படவுள்ள *Covid Care Hospital*-ல் 950 நோயாளிகளும் மற்றும் வார்டு – 166ற்குட்பட்ட *A.M.Jain College*-ல் அமைக்கப்படவுள்ள *Screening center* மற்றும் *Covid Care Center*ல் 210 நோயாளிகளும் தங்க வைத்து சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி மையங்களில் பணிபுரியும் மருத்துவ குழுவினர் மற்றும் பணியாளர்களுக்கும், சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கும், இரண்டு மாதங்களுக்கு (60 நாட்கள்) குடிநீர் (*Water bottle*) வழங்க நாளொன்றிற்கு தோராயமாக 2 லிட்டர் வீதம் (ரூ.40/-விலையில்) 1210 நபர்களுக்கு வழங்குவதற்கு ஏற்படும் செலவினம் ரூ.58,08,000/- (1210 எண்ணிக்கை x 2 லிட்டர் x ரூ.40/– x 60 நாட்கள்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 12 வார்டு – 158ற்குட்பட்ட சென்னை வர்த்தக மையத்தில் அமைக்கப்படவுள்ள *Covid Care Hospital*ல் 950 நோயாளிகள் மற்றும் வார்டு–166ற்குட்பட்ட *A.M.Jain College*-ல் அமைக்கப்படவுள்ள *Screening center* மற்றும் *Covid Care Center*ல் 210 நோயாளிகள் தங்க வைத்து சிகிச்சை அளிக்கப்படுவதால் அவர்களுக்கு ஒரு நபருக்கு 2 *Water bottle* என்ற கணக்கில் 60 நாட்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ..58,08,000/- (1210 எண்ணிக்கை x 2லிட்டர் x ரூ.40/– x60நாட்கள்)ற்கு முன்பணம் பெற்று பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும்,

2) மேற்படி பெறப்படும் முன்பணத் தொகை ரூ..58,08,000/- னை உதவி செயற் பொறியாளர் (தி.க.மே) அவர்களின் பெயரில் காசோலையாக வழங்குவதற்கும்,

3) மேற்படி பணிகளுக்காக பெறப்படும் முன்பணத் தொகை ரூ..58,08,000/- னை நேர் செய்ய 20-21-07 பிரிவு குறியீட்டில், கணக்கு தலைப்பு எண்.**230-70-12-06** (மற்றவை)ல் நிதி ஒதுக்கீடு செய்வதற்கும்,

4) அவசரம் அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்வதற்கும்,

**ம.அ.12.ந.க.எண்.இ1/ 1879/2021 / 06**

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ.12நக.எண்.இ1/ 1879/ 2021/ 9**

**தீர்மானஎண்.439/2021** **நாள்:03-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12 - கொரோனா பெருந்தொற்று (கோவிட்-19) இரண்டாவது அலை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல் - வார்டு-158ல் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் Covid Care Centre-ல் தற்காலிக அறை மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணி - முன்பணம் பெற்று செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 12, கொரோனா பெருந்தொற்று (COVID-19) இரண்டாவது அலை தீவிரமடைந்து பரவி வரும் நிலையில் வார்டு-158ல் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் Covid Care Centre-ல் தற்காலிக அறை மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மேற்படி பணிகள் மேற்கொள்வதால் ஏற்படும் செலவின விவரம் இந்நிதியாண்டின் விலை விவரங்களின்படி தயாரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| Sl. No | Description of work | Work Cost | GST | TOTAL |
|---|---|---|---|---|
| 1. | Providing basic Infra Facilities for Covid Care Centre at Chennai Trade Centre(Roofing with iron Sheet, Providing shed, Shamina and Chairs arrangements) | 679930.40 | 81591.64 (GST 12%) | 761522.01 |
| | | | Round Off | 761530.00 |

எனவே,

1. கொரோனா பெருந்தொற்று (COVID 19) இரண்டாவது அலை தீவிரமடைந்து பரவி வரும் நிலையில் வார்டு-158ல் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் Covid Care Centre-ல் தற்காலிக அறை மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள ஏற்படும் செலவினம் ரூ.7,61,530/- (வரிகள் உட்பட) முன்பணமாக பெற்று பணிகள் மேற்கொள்ள அனுமதியும்,

2. மேற்படி தொகை ரூ.7,61,530/- (வரிகள் உட்பட) ஐ 20-21-07 பிரிவு குறியீடில் கணக்குத் தலைப்பு எண்.230-70-12-06 (மற்றவை)ல் நிதி ஒதுக்கீடு செய்ய நிதி ஆலோசகர் அவர்களைக் கேட்டுக் கொள்வதற்கும்,

3. மேற்படி தொகை ரூ.7,61,530 /- (வரிகள் உட்பட) ஐ உதவி செயற்பொறியாளர்-பகுதி-35, மண்டலம்-12 அவர்கள் பெயரில் வழங்குவதற்கும்,

4. மேற்படி பணிக்கான செலவினம் மேற்கொண்டபின் பெறப்படும் பட்டிகளின் அடிப்படையில் உரிய கணக்குத் தலைப்பில் நேர்செய்வதற்கும்

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**ம.அ.12ந.க.எண்.இ1/ 1879/2021 /10**

**தீர்மானஎண்.440/2021** **நாள்:03-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12 - பகுதி- 35, வார்டு - 158ல் சென்னை வர்த்தக மையத்தில் அமைக்கப்படவுள்ள Covid Care Centre ல் உணவு வழங்குதல், தூய்மை பணி மேற்கொள்ளுதல், கழிவறை சுத்தம் செய்தல், கிருமி நாசினி தெளித்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் பணிகளை தனியார் நிறுவனம் மூலம் 31 நாட்களுக்கு பணியில் ஈடுபடுத்த ஏற்படும் செலவின தொகை 17,01,900/-க்கு நிர்வாக அனுமதியும், முன்பணம் பெறுவதற்கும் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12க்குட்பட்ட பகுதிகளில் மீண்டும் கொரோனா வைரஸ் நோய் தொற்று அதிக அளவில் ஏற்படுவதால் நோய் தொற்று கண்டறியப்பட்டவர்களை, சிகிச்சை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வார்டு – 158ல் சென்னை வர்த்தக மையத்தில் அமைக்கப்படவுள்ள Covid Care Centre ல் உணவு வழங்குதல், தூய்மை பணி மேற்கொள்ளுதல், 28 வாஷ் பேசின், 80 கழிவறை மற்றும் 28 சிறுநீர் கழிக்கும் அமைப்பு சுத்தம் செய்தல், கிருமி நாசினி தெளித்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் பணிகளை தனியார் நிறுவனம் மூலம் பணி தொடங்கும் நாளிலிருந்து 31 நாட்களுக்கு பணி மேற்கொள்வதற்கு கீழ்கண்டவாறு தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

**Zone-12 (Covid Care Centre at Chennai Trade Centre -31 days)**

| S.No | Chennai Trade Centre (950 Beds) | Shift – I | Shift – II | Shift – III | Total No. of persons | Rate per shift Per person | Total Amount for 31 days |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Toilet Cleaning & Disinfection (one person for 30 toilets and bath rooms) | 12 | 12 | 8 | 32 | 450 | 4,46,400 |
| 2 | Food distributor attendant (One person for 50 beds) | 16 | 16 | 5 | 37 | 450 | 5,16,150 |
| 3 | Ward cleaning & disinfection (One person for 50 beds) | 12 | 12 | 3 | 27 | 450 | 3,76,650 |
| 4 | Supervisors (One person per block ) | 3 | 3 | 3 | 9 | 450 | 1,25,550 |
| 5 | Disposal of COVID-19 waste to Gummidipoondi | 3 | - | - | 3 | 450 | 41,850 |
| 6 | Electrician | 2 | 2 | 0 | 4 | 450 | 55,800 |
| 7 | Plumber | 2 | 2 | 0 | 4 | 450 | 55,800 |
| 8 | Data Entry Operator | 2 | 2 | 2 | 6 | 450 | 83,700 |
| | | | | | | **மொத்தம்** | **17,01,900** |

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, பகுதி-35, வார்டு – 158ல் சென்னை வர்த்தக மையத்தில் அமைக்கப்படவுள்ள Covid Care Centre ல் உணவு வழங்குதல், தூய்மை பணி மேற்கொள்ளுதல், கழிவறை சுத்தம் செய்தல், கிருமி நாசினி தெளித்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் பணிகளை தற்காலிக பணியாளர்களை கொண்டு 31 நாட்களுக்கு பணியில் ஈடுபடுத்த ஏற்படும் செலவினத் தொகை ரூ 17,01,900/- முன்பணம் பெற்று பணி மேற்கொள்ள (ரூபாய் பதினேழு இலட்சத்து ஆயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)க்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கும்,

2) மேற்படி பெறப்படும் முன்பணத் தொகை 17,01,900/- (ரூபாய் பதினேழு இலட்சத்து ஆயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) உதவி செயற் பொறியாளர்-(தி.க.மே), மண்டலம்-12 அவர்களின் பெயரில் வழங்கவும்,

3) மேற்கண்ட பணிக்கான செலவுத் தொகைக்குத் தேவையான நிதியை வருவாய் நிதி பிரிவு எண். 20-21-07 கணக்கு எண். 230-701-203 மனித வளம் *(Man power)* நிதி ஒதுக்கீடு செய்ய நிதி ஆலோசகர் அவர்களை கேட்டுக்கொள்ளவும்,

4) மேற்படி செலவீனம் மேற்கொண்டபின் பெறப்படும் உரிய பட்டிகளின் அடிப்படையில் தீர்வு செய்து நேர் செய்வதற்க்கும்,

5) இப்பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.12ந.க.எண்.இ1/1879/2021/11**

**தீர்மானஎண்.441/2021** **நாள்:03-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12 - கொரோனா பெருந்தொற்று (கோவிட்-19) இரண்டாவது அலை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல் - வார்டு-166ல் உள்ள A.M.Jain College-ல் Screening centre அமைப்பதற்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் மின்சார வசதிகள் ஏற்படுத்தும் பணிகள் - முன்பணம் பெற்று செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 12, கொரோனா பெருந்தொற்று (COVID 19) இரண்டாவது அலை தீவிரமடைந்து பரவி வரும் நிலையில் வார்டு-166ல் உள்ள A.M.Jain Collegeல் Screening Centre அமைப்பதற்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் மின்சார வசதிகள் போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மேற்படி பணிகள் மேற்கொள்வதால் ஏற்படும் செலவின விவரம் இந்நிதியாண்டின் விலை விவரங்களின்படி தயாரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்டுகிறது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

| Sl.No | Description of work | Work Cost | GST | TOTAL |
|---|---|---|---|---|
| 1. | Providing basic Infra Facilities for Screening Centre at A.M.Jain College | 264958.71 | 31795.05 (GST 12%) | 296753.76 |
| 2. | Providing Electrical Facilities for Screening Centre at A.M.Jain College | 185605.00 | 33408.90 (GST 18%) | 219013.90 |
| | Total | 450563.71 | 65203.95 | 515767.66 |
| Round Off | | | | 516000.00 |

எனவே, மேற்படி அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ள,

1. கொரோனா பெருந்தொற்று (COVID 19) இரண்டாவது அலை தீவிரமடைந்து பரவி வரும் நிலையில் வார்டு-166ல் உள்ள A.M.Jain College-ல் Screening Centre அமைப்பதற்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் மின்சார வசதிகள் பணிகள் மேற்கொள்ள ஏற்படும் செலவினம் ரூ.5,16,000 /- (வரிகள் உட்பட) முன்பணமாக பெற்று பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்படி தொகை ரூ.5,16,000 /- (வரிகள் உட்பட) ஐ 20-21-07 பிரிவு குறியீடு கணக்கு தலைப்பு எண்.230-70-12-06 (மற்றவை)ல் நிதி ஒதுக்கீடு செய்ய நிதி ஆலோசகர் அவர்களைக் கேட்டுக் கொள்வதற்கும்,
3. மேற்படி தொகை ரூ.5,16,000 /- (வரிகள் உட்பட) ஐ உதவி செயற்பொறியாளர்-பகுதி-37, மண்டலம்-12 அவர்கள் பெயரில் வழங்குவதற்கும்,
4. மேற்படி பணிக்கான செலவினம் மேற்கொண்டபின் பெறப்படும் பட்டிகளின் அடிப்படையில் உரிய கணக்கு தலைப்பில் நேர்செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

************

ம.அ.14.பொ.சு.து.ந.க.எண்.எச்1/2345/2021

தீர்மானஎண்.442/2021 நாள்:04-05-2021

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -14ல் - கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட 574 களப்பணியாளர்களின் பணிக்காலம் 31.01.2021 முடைவடைந்தது - மீண்டும் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் அறிவுறுத்தலின் படி 08.04.2021 முதல் 90 நாட்களுக்கு 620 களப்பணியாளர்களை பணியமர்வு செய்தமைக்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 168, 169, 183 முதல் 191 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் கோவிட் தடுப்பூசி விவரங்கள் கணக்கெடுத்து தடுப்பூசி வழங்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட களப்பணியாளர்கள் மூலம் 04.04.2020 முதல் மகளிர் சுய உதவிக்குழுக்கள் (SHG) மற்றும் தன்னார்வலர்கள் கொண்டு மேற்கொண்ட பணியானது கடந்த 31.01..2021 அன்று முடைவடைந்தது. மீண்டும் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின் படி மகிளர் சுய உதவிக்குழுக்கள் (SHG) மற்றும் தன்னார்வலர்கள் மூலம் 620 களப்பணியாளர்களை (Survey Worker) கொண்டு கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டு கொரோனா வைரஸ் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்யும் களப் பணியாளர்களுக்கு (Survey Workers) நாளொன்றிக்கு ஊதியமாக சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ட தினக்கூலி அடிப்படையில் ரூ.391/- வீதம் 31 நாட்களுக்கு 31 x 391=ரூ.12,121/- வீதம் பணியமர்த்தி பணிமேற்கொள்ள ஆணையர் அவர்களின்08.04.2021 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 13.04.2021 நாளிட்ட ஆய்வுக்கூட்ட அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில், கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்ய களப் பணியாளர்களை (Survey Workers) நாளொன்றிக்கு ஊதியமாக தினக்கூலி அடிப்படையில் ரூ.391/. என்ற அடிப்படையில் கடந்த 2020 ஆம் ஆண்டு கொரோனா தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட களப்பணியாளர்களை கொண்டு கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில் மண்டலம்-14ல் வார்டு – 168,169,183 முதல் 191 வரை கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்கவும் 08.04.2021 முதல் 90 நாட்களுக்கு மகிளர் சுய உதவிக்குழுக்கள் (SHG) மற்றும் தன்னார்வலர்கள் கொண்டு தற்காலிகமாக களப்பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு மேற்கண்ட பணியானது நடைபெற்று வருகிறது. அதன் விவரம் கீழ்கண்டவாறு.

| S. No | Division | Total |
|---|---|---|
| 1 | 168 | **27** |
| 2 | 169 | **66** |
| 3 | 183 | **49** |
| 4 | 184 | **93** |
| 5 | 185 | **51** |
| 6 | 186 | **43** |
| 7 | 187 | **23** |
| 8 | 188 | **87** |
| 9 | 189 | **57** |
| 10 | 190 | **57** |
| 11 | 191 | **67** |
| **மொத்தம்** | | **620** |

**ம.அ.14.பொ.சு.து.ந.க.எண்.எச்1/2345/2021**

மேற்கண்ட அட்டவணையின்படி, இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுறுத்தலின்படி, அவசியம் மற்றும் அவசரம் கருதி மகிளர் சுய உதவிக்குழுக்கள் (SHG) மற்றும் தன்னார்வலர்கள் என 620 களப் பணியாளர்களை 08.04.2021 முதல் 90 நாட்களுக்கு தற்காலிகமாக ஒரு நாளைக்கு ரூ.391/- வீதம் (ரூபாய் முந்நூற்றி தொண்ணூற்றி ஒன்று மட்டும்) பணியமர்த்தி பணி மேற்கொண்டதற்கு சிறப்பு அதிகாரி அவர்களின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-14ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 168, 169, 183 முதல் 191 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்க 620 களப் பணியாளர்களை (Survey Worker) 08.04.2021 முதல் 07.07..2021 வரை மேலும் 90 நாட்களுக்கு பணியமர்த்தி பணி மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட 620 களப் பணியாளர்களுக்கு (Survey Workers) ஊதியமாக சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்தபட்ட தினக்கூலியாக ஒரு நபருக்கு நாளொன்றிக்கு ரூ.391/ வீதம், 620 பணியாளர்களுக்கு 90 நாட்களுக்கு 620xரூ.391/- x 90 நாட்கள் = ரூ.2,18,17,800/- (ரூபாய் இரண்டு கோடியே பதினெட்டு இலட்சத்தி பதினேழாயிரத்தி எண்ணூறு மட்டும்) ஊதியம் வழங்க அனுமதி வேண்டியும்,
3. இப்பணிக்கான செலவீனத்தை கணக்கு குறியீட்டு எண்.20-21-07, கணக்கு தலைப்பு எண். 230-70-12-03 என்ற தலைப்பில் 2021-2022 ம் நிதியாண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஊதியம் வழங்க நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 27.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

மஅ.1//ந.க.எண்.ஆர்1/2535/2020

**தீர்மானஎண்.443/2021** **நாள்:04-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1, கோட்டம் 1 முதல் 14 வரை கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் - அவசர அவசியம் கருதி கொரோனா தொற்று நோய் ஏற்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட (QUARANTINE) வீடுகளை கண்காணிக்க சமூக பரவலை தடுக்கும் பணிகளை கண்காணிப்பு செய்ய 140 தன்னார்வள பணியாளர்களை(Focus Volunteers) தற்காலிகமாக 16.04.2021 முதல் 15.07.2021 வரையில் மூன்று மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மண்டல அலுவலர் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதி.**

கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID 19) இரண்டாம் அலை பல நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை(எம்.எஸ்) எண். 95 நாள் 13.03.2020ல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்டப்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தாக்கம் அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் கரணமாக பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோவிட் நோய் தடுப்பு பணிகளுக்கென வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை கண்காணிக்கும் திட்டத்தின் கீழ் (Focus Volunteers) (Friend of Covid Citizen under Surveillance) தன்னார்வலர்களை ஐந்து தெருக்களுக்கு ஒருவர் வீதம் இம்மண்டலத்தில் 14 கோட்டங்களுக்கு 200 நபர்களை கோவிட் 19 நோய் தொற்றின் போது கடந்த ஆண்டு இப்பணிக்கென நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த தன்னார்வலர்கள் நோய் அதிகம் பாதிக்கப்பட்ட தெருக்களில் உள்ள ஒவ்வொரு வீடுகளை கண்காணிப்பதோடு வீட்டில் உள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் பணிகளை மேற்கொண்டு வந்தனர். இதனால் நோய் பாதிக்கப்பட்டவர்கள் வெளியில் செல்லமால் இருந்த காரணத்தினால் கொரோனா நோயினை வெகுவாக கட்டுப்படுத்த முடிந்தது. மேற்படி தன்னார்வலர்கள் மண்டல உதவி வருவாய் அலுவலர்களின் மேற்பார்வையில் பணிபுரிந்தனர்.

தற்போது கோவிட் இரண்டாம் அலை பணிக்கென முதற்கட்டமாக வார்டு ஒன்றிக்கு பத்து தன்னார்வலர்கள் வீதம் 200 வார்டுகளுக்கு 2000 தன்னார்வலர்கள் பணியமர்த்த ஆணையர் அவர்களால் 12.04.2021 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் மண்டலம் 1ல் உள்ள 14 வார்டுகளுக்கு 140 தன்னார்வலர்களை மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தலாம்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுசுகாதாரத்துறையில் 1 முதல் 15 மண்டலங்களில் 3577 கொசு ஒழிப்பு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதில் 2326 தற்காலிக பணியாளர்கள் (NULM மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த பணியாளர்கள் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்தபட்ச தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி 2020-2021ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஊதிய நிர்ணயத்தில் கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ391/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே ஒரு மாத கால ஊதியம் 30x391= ரூ11,730 ஆகும். மாநகராட்சி மூலம் பணியமர்த்தப்படும் கொசு ஒழிப்பு பணியாளர்களும் இந்த சம்பள அடிப்படையிலேயே பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

எனவே கொரோனாநோய் இரண்டாம் அலை தடுப்பு நடவடிக்கைக்காக வடக்கு வட்டாரத்திக்குட்டப்பட்ட மண்டலம் 1க்குட்ப்பட்ட 14 வார்டுகளுக்கு 140 தன்னார்வலர்களை மாதம் ரூ11,730/- சம்பளத்தில் ஒப்பந்த அடிப்படையில் 3 மாத காலத்திற்கு பணியமர்த்தி கொள்ளவும், அதற்கான செலவினம் 140x11730x3= 49,26,600/- சிறப்பு அதிகாரி மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் அவர்களின்15.04.2021 நாளிட்ட செயல்முறை ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

<u>மஅ.1//ந.க.எண்.ஆர்1/2535/2020</u>

எனவே, கோவிட் தொற்று நோயின் இரண்டாம் அலை தாக்கம் அதிகரித்து வரும் நிலையில்,

1. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் இரண்டாம் அலை தொற்று தடுப்பு பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் கருதி மண்டலம்-1ல் கோட்டம் 1 முதல் 14 வரையிலான 14 வார்டுகளுக்கு 140 தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச தினக்கூலி ரூ391/- என்ற அடிப்படையில் மாத ஊதியம் ரூ11,730/. என நிர்ணயம் செய்யப்பட்டதற்கும்,
2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (H2) துறையின் அரசாணை(எம்.எஸ்) எண். 161 நாள் 27.03.2020ல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (Covid 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16a அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் நேரடியாக 140 கொரோனா நோய் தடுப்பு தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையிலான 3 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மண்டல அலுவலர்கள் பணியமர்த்திக் கொண்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
3. இப்பணியில் ஈடுபட்டிருந்த தன்னார்வலர்களை முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தியதற்கும்,
4. மாதந்தோறும் உதவி வருவாய் அலுவலர்களிடமிருந்து வருகை சான்று பெற்று மண்டல அளவில் பட்டி தீர்வு செய்ய அனுமதியும்,
5. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ49,26,600 (ரூபாய் நாற்பத்தி ஒன்பது இலட்சத்து இருபத்தி ஆறாயிரத்து ஆறு நூறு மட்டும் ) மண்டல அளவில் மேற்கொள்ள அனுமதியும் (A.C.code No.230-70-12-03),
6. அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட மேற்கண்ட இனங்கள் 1 முதல் 5 வரையுள்ள ஆணைகளுக்கும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 29.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.2.வ.து. ந.க.எண்.ஆர்1/0207/2021**

**தீர்மான எண்.444/2021** **நாள்:04-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-2, மணலி, கோட்டம் - 15 முதல் 21 வரை - கொரோனா தொற்று நோயின் இரண்டாம் அலை ஏற்பட்டிருப்பதால் கொரோனா தொற்று நோய் ஏற்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட (Quarantine) வீடுகளை கண்காணிக்கவும்- சமூகபரவலை தடுக்கும் பணிகளை கண்காணிப்பு செய்ய 70 தன்னார்வலர்களை மூன்று மாதங்களுக்கு 16.04.2021 முதல் 15.07.2021 வரை பணி நியமனம் செய்யப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

தமிழகத்தில் கொரோனா தொற்று நோயின் இரண்டாம் அலை ஏற்பட்டிருப்பதால் அதனை கட்டுப்படுத்தும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் வார்டு ஒன்றிற்கு 10 எண்ணிக்கையிலான தன்னார்வலர்களை தற்காலிக பணிநியமனம் செய்து அவர்களை தனிமைப்படுத்துதல் (Quarantine) செய்யப்பட்ட வீடுகளை கண்டறிந்து அவர்களை கண்காணிக்கவும் அவர்கள் வெளியில் வந்து சமூக பரவல் செய்யாமல் தடுக்கவும் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிகளை கண்காணிப்பு செய்யும் பணியினை மேற்கொள்ளுமாறு ஆணையர் அவர்கள் 12.04.2021 அன்று வாய்மொழி உத்தரவில் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1996 பிரிவு 16a-ன் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் நேரடியாக 630 கொரோனா நோய் தடுப்பு தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மண்டலம் வாரியாக தன்னார்வலர்களை நியமனம் செய்யவும், மேலும், ஒரு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 391/- எனவும் ஒரு மாதத்திற்கு ரூபாய். 11730/ ஊதியமாக நிர்ணயம் செய்து ஆணையர் அவர்களின் 15.04.2021 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது அதன்படி மண்டலம்-2க்கு 70 தன்னார்வலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது

அதன் அடிப்படையில் மண்டலம்-2 மணலி, கோட்டம் 15 முதல் கோட்டம் 21 வரைக்குட்பட்ட ஏழு வார்டுகளில் கொரோனா தொற்று நோயின் இரண்டாம் அலை ஏற்பட்டிருப்பதை கட்டுப்படுத்தும் வகையில் நபர் ஒருவருக்கு தலா 10 முதல் 20 உட்புற சாலைகளை கணக்கெடுக்கும் வகையில் மண்டலத்தில் உள்ள, 1045 உட்புற சாலைகளை தினசரி ஒவ்வொரு சாலைக்கும் சென்று தனிமைப்படுத்துதல் (Quarantine) செய்யப்பட்ட வீடுகளை கண்டறிந்து கண்காணிக்கவும் அவர்கள் வெளியில் வந்து சமூக பரவல் செய்யாமல் தடுக்கவும் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிகளை கண்காணிப்பு செய்ய வார்டு ஒன்றிற்கு 10 எண்ணிக்கையிலான தன்னார்வலர்கள் வீதம் 70 பணியாளர்களை கீழ்கண்டுள்ள அட்டவணையின்படி தன்னார்வலர்களை தற்காலிகமாக நியமிக்கவும் மேலும், ஒரு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 391/- எனவும், ஒரு மாதத்திற்கு ரூபாய். 11730/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 70 பணியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 8,21,100/- என்ற அளவில் 3 மாதங்களுக்கு அதாவது 16.04.2021 முதல் 15.07.2021 வரை ரூ.24,63,300/- என்று மதிப்பிடப்பட்டுள்ள விவரம் கீழ்கண்டுள்ளவாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ. எ ண். | கோட்ட ம் எண். | மொத்த வீடுகளின் எண்ணிக் கை | மொத்த சாலைகளி ன் எண்ணிக் கை | தேவைப்ப டும் பணியாளர் கள் | கோட்டம் வாரியாக 5% (Buffer) பணியாளர் கள் | மொத்த புதிய பணியாளர் களின் எண்ணிக் கை | ஒரு மாத ஊதியம் ரு. | மூன்று மாத - ஊதியம் ரு. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | 3320 | 126 | 10 | 0 | 10 | 1,17,300 | 3,51,900 |
| 2 | 16 | 4471 | 248 | 10 | 0 | 10 | 1,17,300 | 3,51,900 |
| 3 | 17 | 2124 | 102 | 10 | 0 | 10 | 1,17,300 | 3,51,900 |
| 4 | 18 | 2153 | 126 | 10 | 0 | 10 | 1,17,300 | 3,51,900 |
| 5 | 19 | 8868 | 315 | 10 | 0 | 10 | 1,17,300 | 3,51,900 |
| 6 | 20 | 2443 | 78 | 10 | 0 | 10 | 1,17,300 | 3,51,900 |
| 7 | 21 | 2161 | 50 | 10 | 0 | 10 | 1,17,300 | 3,51,900 |
| **மொத்தம்** | | **25540** | **1045** | **70** | **0** | **70** | **8,21,100/-** | **24,63,300** |

**ம.அ.2.வது. ந.க.எண்.ஆர்1/0207/2021**

எனவே, மண்டலம் 2, மணலி, கோட்டம் 15 முதல் கோட்டம் 21 வரை உள்ள பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளை கண்காணிப்பு செய்ய ஒரு வார்டுக்கு ஒரு நபருக்கு தலா 10 முதல் 20 வரையுள்ள உட்புற சாலைகள் என்ற வகையில் மண்டலத்தில் உள்ள 1045 உட்புற சாலைகளில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட (Quarantine) பகுதிகளுக்கு வாகனம் மற்றும் கைபேசி (Smart Phone) உடன் சென்று கண்காணிக்கவும் உடனுக்குடன் தகவல்களை உரிய அலுவலர்களுக்கு தெரிவிக்கவும் மற்றும் உள்ளூர் காவலர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுடன் சேர்ந்து களப்பணி ஆற்றவும் அலுவலக அதிகாரியின் உத்தரவின் படி கொரோனா தடுப்புப்பணிகளை மேற்கொள்ளவும், கண்காணிப்பு செய்யும் பணிக்கு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1996 பிரிவு 16 a-ன் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் நேரடியாக 70 பணியாளர்களை தற்காலிகமாக கொரோனா நோய் தடுப்பு தன்னார்வலர்களை (Focus Volunteers) நியமிக்க சிறப்பு அலுவலர் (மன்றம்) அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்2, கோட்டம் 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் கண்டறிந்து தனிமைப்படுத்தப்பட்ட (Quarantine) வீடுகள் மற்றும் அதன் சுற்றுப்புற தெருக்கள் மற்றும் வீடு வீடாக சென்று கணக்கு எடுத்து பணியாளர்களை தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பணிகளை கண்காணிப்பு செய்ய தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1996 பிரிவு 16 a-ன் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட 70 பணியாளர்களை மூன்று மாதத்திற்கு அதாவது 16.04.2021 முதல் 15.07.2021 வரை இப்பணியினை மேற்கொள்ள நியமித்ததற்கு பின்னேற்பு அனுமதியும்,
2. மேற்கண்ட பணிகளுக்கு ஒரு பணியாளருக்கு ஒரு மாத ஊதியம் ரூ. 11730/- வீதம் 70 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.8,21,100/- என்ற அளவில் 3 மாதங்களுக்கு அதாவது 16.04.2021 முதல் 15.07.2021 வரை ரூ.24,63,300/- (எழுத்தால் இருபத்து நான்கு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து முன்னூறு மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவீனம் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்
3. மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண் 20-21-07 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-70-12-03ல் நிதி ஒதுக்கீடு செய்து மண்டல அளவில் செலவு செய்ய ஆணை வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 29.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**ம.அ.9. ந.க.எண் எச்.2/ 0740 /2021**

**தீர்மானஎண்.445 / 2021** **நாள்:04-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, கோட்டம்-109 முதல் கோட்டம்-126 வரை கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை - கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பகுதி மற்றும் அனைத்து வீடுகளுக்கும் சென்று மக்களின் உடல் நல குறித்த காய்ச்சல், இருமல் மற்றும் சளி ஆகிய அறிகுறிகள் இருக்கும் நபர்களை கண்டறிந்து பதிவு மேற்கொள்ளும் பணிக்காக 920 எண்ணிக்கையிலான தற்காலிக பணியாளர்களை மேலும் ஆறு மாதத்திற்கு ஏப்ரல்-2021 முதல் செப்டம்பர்-2021 வரை (01.04.2021 முதல் 30.09.2021 வரை) பணியமர்த்த ஆணையும் - தேவையான நிதியினை கணக்கு குறியீட்டு எண்.20-21-07, தலைப்பு கணக்கு எண். 230-701-203 என்ற கணக்கு கீழ் ஒதுக்கீடு செய்யவும், செலவினங்கள் மேற்கொள்ளவும் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, கோட்டம்-109 முதல் கோட்டம்-126 வரையிலான பகுதிகளில் ஏப்ரல் முதல் செப்டம்பர் -2020 வரை 6 மாதங்களுக்கு கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக, அனைத்து வீடுகளுக்கும் சென்று மக்களின் உடல் நலன் குறித்த காய்ச்சல், இருமல், சளி ஆகிய அறிகுறிகள் இருக்கும் நபர்களை கண்டறிந்து கணக்கீடு ஆய்வு மேற்கொள்ளவும் தினமும் மக்களிடம் ஆய்வு மேற்கொண்டு பெரும் தகவல்களை இணையதளம் மூலம் பதிவேற்றும் செய்யும் பணிகளை மேற்கொள்ள மொத்தம்-975 தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தவும், இப்பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.15000/- வீதம் ஆறு மாதங்களுக்கு ஆகும் செலவுத்தொகை ரூ.8,77,50,000/- முன்பணமாக பெற்று செலவினங்கள் மேற்கொள்ளவும் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 333/2020, நாள்.12.05.2020 மற்றும் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 426/2020, நாள்.30.06.2020ன் மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 883/2020, நாள்.03.11.2020ன்படி 01.10.2020 முதல் 31.12.2020 (அக்டோபர்-2020 முதல் டிசம்பர் -2020 வரை) மேற்கண்ட பணிகளுக்காக தற்காலிக 798 பணியாளர்களை பணிமர்த்தியதற்கு ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இப்பணியாளர்கள் தங்களுடைய பணியினை ஏப்ரல்-2020 முதல் தொடர்ந்து சிறப்பான முறையில் பணிபுரிந்து வந்தனர். தற்போது இப்பணியின் அவசியம் கருதி மேலும் 1 மாதம் அதாவது ஜனவரி-2021 வரை (01.01.2021 முதல் 31.01.2021 வரை) தொடர்ந்து இப்பணியினை மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு பணிகள் சிறப்பாக நடைபெற்றது.

ஆணையர் அவர்களின் 23.03.2021 நாளிட்ட அறிவுறுத்தலின்படி வரும் ஏப்ரல்-2021 முதல் செப்டம்பர்-2021 வரை (01.04.2021 முதல் 30.09.2021 வரை) ஆறு மாதங்களுக்கு கொரோனா நோய் மேலும் பரவாமல் தடுக்க மக்களின் உடல் நலன் குறித்த ஆய்வின் தகவல்களை கண்டறியவும் இணையதளம் மூலம் பதிவேற்றம் மேற்கொள்ளவும் மண்டலம்-9ல் உள்ள வீடுகளின் தொகுப்பின் அடிப்படையில் தற்போது 920 எண்ணிக்கையிலான பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்ள சிறப்பு அதிகாரி அவர்களின் ஒப்பம் வேண்டப்படுகிறது.

எனவே,

அ மண்டலம்-9, கோட்டம்-109 முதல் கோட்டம்-126 வரையிலான பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக, அனைத்து வீடுகளுக்கும் சென்று மக்களின் உடல் நலன் குறித்த காய்ச்சல், இருமல், சளி ஆகிய அறிகுறிகள் இருக்கும் நபர்களை கண்டறிந்து கணக்கீடு ஆய்வு மேற்கொள்ளவும் தினமும் மக்களிடம் ஆய்வு மேற்கொண்டு பெரும் தகவல்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் பணிகளை மேற்கொள்ள மொத்தம்-920 எண்ணிக்கையிலான பணியாளர்களை ஏப்ரல்-2021 முதல் செப்டம்பர்-2021 வரை (01.04.2021 முதல் 30.09.2021 வரை) தற்காலிகமாக 6 மாதம் பணியமர்த்துவதற்கும் அனுமதியும்,

ஆ மேற்கண்ட பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு ஒரு மாதம் ரூ.12000/- வீதம் 920 எண்ணிக்கையிலான பணியாளர்களை 6 மாதத்திற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.6,62,40,000/- (920X12000X6=6,62,40,000) நிர்வாக அனுமதியும்,

<u>ம.அ.9. ந.க.எண் எச்.2/ 0740 /2021</u>

இ  மேற்கண்ட பணிக்காக ஏற்படும் செலவினத்தொகை கொரோனா தடுப்பு பணிகளுக்கான நிதியினை கணக்கு குறியீட்டு எண்.20-21-07, தலைப்பு கணக்கு எண்.230-701-203 என்ற கணக்கு தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யவும் பின்னர் உரிய பட்டிகளுடன் தீர்வு செய்ய அனுமதியும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.7ந.க.எண். எச்2/1552/2021**

**தீர்மானஎண்.446/2021** **நாள்: 04-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7 கொரோனா தொற்று இரண்டாம் அலை தடுப்பு நடவடிக்கையில் 922 பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 08.04.2021 முதல் 30.06.2021 வரை 84 நாட்களுக்கு தற்காலிமாக நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7 ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு 79 முதல் 93 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் கோவிட் தடுப்பூசி விவரங்கள் கணக்கெடுத்து தடுப்பூசி வழங்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய தற்காலிகமாக ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 922 பணியாளர்களை (SURVEY WORKER) 08.04.2021 முதல் 30.06.2021 வரை 84 நாட்களுக்கு மட்டும் தற்காலிகமாக பணியமத்தப்பட்டது. அதன் விவரம் கீழ்கண்டவாறு.

| Sl.No | Division | Total |
|---|---|---|
| 1 | 79 | 67 |
| 2 | 80 | 65 |
| 3 | 81 | 48 |
| 4 | 82 | 88 |
| 5 | 83 | 82 |
| 6 | 84 | 45 |
| 7 | 85 | 42 |
| 8 | 86 | 91 |
| 9 | 86 athipet covid care center | 15 |
| 10 | 87 | 49 |
| 11 | 88 | 48 |
| 12 | 89 | 38 |
| 13 | 90 | 54 |
| 14 | 91 | 81 |
| 15 | 92 | 62 |
| 16 | 93 | 47 |
| Total | | 922 |

ஆணையர் அவர்களின் வாய்மொழி உத்தரவின்பிடி 08.04.2021 முதல் 30.06.2021 வரை 84 நாட்களுக்கு மட்டும் தற்காலிகமாக ஒரு நாளைக்கு ரூ.391 வீதம் நிர்வாக அனுமதியின் பேரில் பணியமர்த்தப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம் -7 ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு 79 முதல் 93 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளில் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்க 922 பணியாளர்களை (SURVEY WORKER) FSW 08.04.2021 முதல் 30.06.2021 வரை 84 நாட்களுக்கு பணியமர்த்தி பணி மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,

**ம.அ.7ந.க.எண். எச்2/1552/2021**

2. மேற்கண்ட 922 பணியாளர்களுக்கு *(SURVEY WORKERS) FSW* ஊதியமாக ஒரு நபருக்கு நாளொன்றிக்கு ரூ.391 வீதம் 922பணியாளர்களுக்கு 84 நாட்களுக்கு ரூ. *3,02,82,168/- (922* நபர்கள் *X* ரூ.391 *X* 84 நாட்களுக்கு=3,*02,82,168/-*) வழங்கவும்,

3. இப்பணிக்கான செலவினத்தை கணக்கு குறி'யீட்டு எண் 20-*21*-07 கணக்கு தலைப்பு எண் 230-*70-12-03 (Man Power)* என்ற தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஊதியமாக வழங்க அனுமதியும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ.8. சு.து.ந.க.எண்.எச்1/1471/2020**

**தீர்மானஎண்.447/2021** **நாள்:04-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 8 - கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் விதமாக கொரோனா சம்பந்தமான பணிகளை மேற்கொள்ள கொரோனா தடுப்பு களப்பணியாளர்களை - கணக்கெடுப்பு பணியில் ஈடுபடுத்த 1000 தற்காலிக பணியாளர்களை மூன்று மாத காலத்திற்கு (07.04.2021 முதல் 06.07.2021 வரை) பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 08.04.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, மண்டலம்-8 கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 94 முதல் 108 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 1000 பணியாளர்களை (Survey Worker) 07.04.2021 முதல் 06.07.2021 வரை மூன்று மாத காலத்திற்கு நியமித்து பணிபுரிய ஆணை வழங்கப்பட்டது.

தற்போது கோவிட் தொற்று நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், கோவிட் நோய் தடுப்பு பணிக்கென இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 13.04.2021 நாளிட்ட கூட்ட அறிக்கை (Minutes of the Meeting)யின்படி, களப்பணியாளர்களின் எண்ணிக்கையை தேவைக்கேற்ப அதிகரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 500 களப்பணியாளர்களுடன் கூடுதலாக 500 களப்பணியாளர்கள் என மொத்தம் 1000 களப்பணியாளர்களை மண்டலம்-8, கோட்டம்-94 முதல் 108 வரை மூன்று மாத காலத்திற்கு 07.04.2021 முதல் 06.07.2021 வரை பணி நியமனம் செய்யவும், ஏற்கனவே வழங்கப்பட்ட மாத ஊதியம் ரூ.15,000/-ற்கு பதில் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச தினக்கூலி அடிப்படையில் ரூ.12,121/- மாத ஊதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி கொரோனா தடுப்பு பணிகளை மேற்கொள்ள சிறப்பு அதிகாரி அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-8ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கோட்டம் – 94 முதல் 108 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா எனவும், பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ள 1000 தற்காலிக பணியாளர்களை (Survey Worker) 07.04.2021 முதல் 06.07.2021 வரை மட்டும் தற்காலிகமாக பணியமர்த்தவும்,

2. மூன்று மாத காலத்திற்கு 07.04.2021 முதல் 06.07.2021 வரை பணியமர்த்தி ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ரூ.391/- வீதமும் ஒரு மாதத்திற்கு ரூ.12,121/- வீதம் 1000 பணியாளர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ரூ.12121x1000x3= ரூ.3,63,63,000/- (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம் மட்டும்)ஐ வழங்க நிர்வாக அனுமதியும்,

*3.* **இப்பணிக்கான செலவினத்தை மேற்கொள்ள கணக்கு குறியீட்டு எண்.**20-21-07, **கணக்கு தலைப்பு எண்.**230-70-12-03 **என்ற தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,**

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ.3.பொ.சு.து.ந.க.எண்.எச்1/ 399/2021**

**தீர்மானஎண்.448/2021** **நாள்:04-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 - பொது சுகாதாரத்துறை - கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளை தீவிர படுத்தும் விதமாக வீடுகள் தோறும் காய்ச்சல் கண்டவர்கள் குறித்து கணக்கு எடுக்கும் பணிக்காக சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த பட்ச தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 08.04.2021 முதல் 07.07.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு தேவைபடும் 525 தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்ள அனுமதி.**

ஆணையர் அவர்களின் 08.04.2021 நாளிட்ட கலந்தாய்வு கூட்டத்தில் அளிக்கப்பட்ட வாய்மொழி உத்தரவின் அடிப்படையில் மண்டலம்-3, கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளை தீவிரப்படுத்தும் விதமாக வீடுகள் தோறும் காய்ச்சல் கண்டவர்கள் குறித்து கணக்கு எடுக்கும் பணிக்காக சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த பட்ச தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் நபர் ஒன்றுக்கு 100 முதல் 120 வரையிலான வீடுகளில் தினந்தோறும் கொரோனா நோய் தடுப்பு பணி மேற்கொள்ள கோட்டம் வாரியாக கீழ்கண்ட அட்டவணையில் கண்டுள்ளபடி 525 தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகிறது.

இந்த மேற்கண்ட தற்காலிக பணியாளர்களை 08.04.2021 முதல் 07.07.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ12,121/- வீதம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி பணி மேற்கொள்ள ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | கோட்டம் | மொத்தம் வீடுகளின் எண்ணிக்கை | செக்டர்களின் எண்ணிக்கை | தேவைப்படும் தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு மாத ஊதியம் | மூன்று மாத காலத்திற்கு ஊதியம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 22 | 5456 | 11 | 55 | 12121 | 1999965 |
| 2 | 23 | 2796 | 6 | 30 | 12121 | 1090890 |
| 3 | 24 | 8872 | 18 | 90 | 12121 | 3272670 |
| 4 | 25 | 2369 | 6 | 30 | 12121 | 1090890 |
| 5 | 26 | 7136 | 12 | 60 | 12121 | 2181780 |
| 6 | 27 | 4260 | 8 | 40 | 12121 | 1454520 |
| 7 | 28 | 4094 | 8 | 40 | 12121 | 1454520 |
| 8 | 29 | 2178 | 5 | 25 | 12121 | 909075 |
| 9 | 30 | 2296 | 6 | 30 | 12121 | 1090890 |
| 10 | 31 | 2576 | 7 | 35 | 12121 | 1272705 |
| 11 | 32 | 4164 | 6 | 30 | 12121 | 1090890 |
| 12 | 33 | 5609 | 12 | 60 | 12121 | 2181780 |
| மொத்தம் | | 51806 | 105 | 525 | 145452 | 19090575 |

எனவே, மண்டலம்-3 (மாதவரம்) கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் கொரோன நோய் தடுப்பு பணி மேற்கொள்ள ஒரு நபருக்கு தலா 100 முதல் 120 வரையிலான வீடுகளில் தினந்தோறும் கொரோனா நோய் தடுப்பு பணி மேற்கொள்ள கோட்டம் வாரியாக கீழ்கண்ட அட்டவணையில் கண்டுள்ளபடி 525 தற்காலிக பணியாளர்களை நியமிக்க சிறப்பு அதிகாரி அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

அ) மண்டலம்-3, கோட்டம்-22 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிக்கும் மற்றும் நோய் தொற்று பராமவல் தடுக்கும் பணிக்கும் 525 தற்காலிக பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கும்,

ஆ) மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த பட்ச தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் ஒரு மாத காலத்திற்கான ஊதியம் ரூ.12,121/- வீதம் 525 நபர்களுக்கு மூன்று மாத காலத்திற்கு வழங்க வேண்டி தொகை (12121 X 525 X 3 = ரூ.1,90,90,575/-) (ரூபாய். ஒரு கோடியே தொண்ணூறு லட்சத்து தொண்ணூறு ஆயிரத்து ஐநூற்று எழுபத்தைந்து மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவினம் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

இ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீட்டு எண். 230-70-12-03 லிருந்து செலவு செய்வதற்கும்,

ஈ) மேற்கண்ட செலவினத்திற்கான நிதியினை நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுவதற்கும்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**<u>மஅ.2/சு.து.ந.க.எண்.எச்1/ 1101/2021</u>**

**தீர்மானஎண்.449/2021** **நாள்:04-05-2021**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-2 - சுகாதாரத் துறை - கோட்டம் -15 முதல் 21 வரை கொரோனா வைரஸ் நோய் அறிகுறிகள் கண்டறிய கணக்கு எடுக்கும் பணி மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு தேவையான பணியாளர்கள் மகளிர் சுய உதவி குழுவின் மூலமாக 215 நபர்களை தற்காலிக பணியாளர்களாக மூன்று மாதங்களுக்கு நியமிக்கவும் மற்றும் ஊதியம் வழங்கவும் அனுமதி.</u>**

ஆணையர் அவர்களின் 08.04.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, மண்டலம்-2, சுகாதாரத் துறை, மணலி, கோட்டம் 15 முதல் கோட்டம் 21 வரை உள்ள கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 26671 வீடுகளை 250 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு முதற்கட்டமாக மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் நியமிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மண்டலம் 2, சுகாதாரத் துறை, மணலி (கோட்டம் 15 முதல் 21 வரை ) 7 கோட்டங்களில் 26671 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு 250 செக்டரான கொரோனா நோய் தடுப்பு கணக்கெடுக்கும் பணிகளுக்கு தற்போது கூடுதலாக 215 நபர்களை 01-04-2021 முதல் 30-06-2021 மூன்று மாதங்களுக்கு தற்காலிகப் பணியாளர்களாக நியமனம் செய்யப்பட வேண்டி உள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.12,121/- வீதம் 215 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.26,06,015/- என்ற அளவில் 3 மாதங்களுக்கு ரூ.78,18,045/- (ரூபாய் எழுபத்தி எட்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து நாற்பத்தி ஐந்து மட்டும்) என்று மதிப்பிடப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ.எண். | கோட்டம் எண். | மொத்த வீடுகளின் எண்ணிக்கை | மொத்த செக்டார் எண்ணிக்கை | ஏற்கனவே உள்ள பணியாளர்கள் | தேவைப்படும் பணியாளர்கள் | கோட்டம் வாரியாக 5 % (BUFFER) பணியாளர்கள் | மொத்த புதிய பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு மாத ஊதியம் ரூ. | மூன்று மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | 5967 | 32 | 4 | 28 | 0 | 28 | 339388 | 1018164 |
| 2 | 16 | 3863 | 38 | 7 | 30 | 0 | 30 | 363630 | 1090890 |
| 3 | 17 | 1810 | 21 | 5 | 16 | 0 | 16 | 193936 | 581808 |
| 4 | 18 | 2610 | 26 | 4 | 22 | 0 | 22 | 266662 | 799986 |
| 5 | 19 | 7975 | 97 | 13 | 85 | 0 | 85 | 1030285 | 3090855 |
| 6 | 20 | 2343 | 18 | 4 | 16 | 0 | 16 | 193936 | 581808 |
| 7 | 21 | 2106 | 18 | 2 | 18 | 0 | 18 | 218178 | 654534 |
| **மொத்தம்** | | **26671** | **250** | **39** | **215** | **0** | **215** | **2606015** | 7818045/- |

எனவே, மண்டலம் 2, மணலி, கோட்டம் 15 முதல் கோட்டம் 21 வரை உள்ள குறுவட்டப் பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 26671 வீடுகளை 250 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரானா நொய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் 215 நபர்களை தற்காலிக பணியாளர்கள் நியமிக்க சிறப்பு அதிகாரி அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

**மஅ.2/சு.து.ந.க.எண்.எச்1/ 1101 / 2021**

எனவே,

(அ) மண்டலம்2, கோட்டம் 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகளுக்கும், நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பணிகளுக்கும் தேவையான மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் இதர மூலங்கள் மூலம் 215 தற்காலிக பணியாளர்களாக நியமிக்கவும்,

(ஆ) மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.12,121/- வீதம் 215 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.26,06,015/- என்ற அளவில் 3 மாதங்களுக்கு ரூ.78,18,045/- (ரூபாய் எழுபத்தி எட்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து நாற்பத்தி ஐந்து மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவினம் செய்ய நிர்வாக அனுமதியும்,

(இ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-70-12-03-லிருந்து செலவு செய்யவும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண். இ5/12332/2021**

**தீர்மானஎண்.450/2021** **நாள்:05-05-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு Y.J. விஜய சுதாகர் தாஸ், கண்காணிப்பாளர், இயந்திர பொறியியல் துறை அவர்கள் 08.05.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வரும் திரு. Y.J. விஜயசுதாகர் தாஸ், அவர்கள் தான் 28.01.1987 அன்று சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்து 15.11.2020 அன்று பக்கவாதம் வந்து அதிலிருந்து மிகவும் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும், பல நாட்கள் மருத்துவம் பார்த்தும் சரி செய்ய இயலாததால் தன்னுடைய பணியினை மேற்கொண்டு செய்ய இயலாத நிலையில் உள்ளதால் தன்னை பெருநகர சென்னை மாநகராட்சி பணியிலிருந்து தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு (Voluntary Retirement) 08.02.2021 நாளிட்ட கடிதத்தினை சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களுக்கு அளித்துள்ளார்.

திரு. Y.J.விஜயசுதாகர் தாஸ், கண்காணிப்பாளர், இயந்திர பொறியியல் துறை அவர்கள் 28.01.1987 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் அலுவலக உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார். அதனைத் தொடர்ந்து இளநிலை உதவியாளராக 29.05.2000 அன்று பணியில் சேர்ந்து அப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டு 29.05.2002 அன்று தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தனியர் 07.06.2006 முதல் உதவியாளராகவும், பின்பு 11.08.2014 முதல் கண்காணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்று அப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. தனியரின் பணிவிவரங்கள் கீழ்வருமாறு அளிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | தனியரின் பணி விவரங்கள் | |
|---|---|---|
| 01 | பிறந்த தேதி | 13.06.1966 |
| 02 | தனியர் முதன் முதலில் பணியில் சேர்ந்த பதவி மற்றும் நாள் | அலுவலக உதவியாளர் , நாள் 28.01.1987 |
| 03 | தனியர் பணிபுரிந்த துறைகள் மற்றும் பணிபுரிந்த காலம் | 28.01.1987 முதல் 07.12.1988 வரை - பழைய மண்டலம் 2, புதிய மண்டலம்5<br><br>08.12.1988 முதல் 15.05.1997 வரை பழைய மண்டலம் 4, புதிய மண்டலம் 6<br><br>துப்புரவு ஆய்வாளர்<br>16.05.1997 முதல் 23.04.1998 வரை பழைய மண்டலம் 7, புதிய மண்டலம் 9,<br><br>24.04.1998 முதல் 29.07.1998 வரை பழைய மண்டலம் 3, புதிய மண்டலம் 6<br><br>30.07.1998 முதல் 28.05.2000 வரை பழைய மண்டலம் 4, புதிய மண்டலம் 6<br><br>பதவி மாற்றம் - இளநிலை உதவியாளர்<br>29.05.2000 முதல் 02.10.2002 வரை மத்திய கணக்கு குழுமம்<br><br>03.10.2002 முதல் 06.06.2006 வரை பழைய மண்டலம் 4, புதிய மண்டலம் 6<br><br>உதவியாளர்<br>07.06.2006 முதல் 30.07.2006 வரை வருவாய் துறை (தலைமையிடம்) |

| | | |
|---|---|---|
| | | 31.07.2006 முதல் 10.08.2014 வரை பழைய மண்டலம் 4, புதிய மண்டலம் 6<br><br>கண்காணிப்பாளர்<br>11.08.2014 முதல் 23.08.2016 வரை சிறப்பு திட்டங்கள்<br><br>24.08.2016 முதல் 23.08.2017 வரை - பேருந்து சாலைகள் துறை<br>24.08.2017 முதல் 29.10.2019 வரை பூங்காத் துறை<br><br>30.10.2019 முதல் இதுநாள் வரை - இயந்திர பொறியியல் துறை |
| 04 | தனியர் பெற்ற பதவி உயர்வு மற்றும் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் - 29.05.2000<br>உதவியாளர் - 07.06.2006<br>கண்காணிப்பாளர் – 11.08.2014 |
| 05 | கண்காணிப்பாளர் பதவியில் சேர்ந்த நாள் மற்றும் பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் | 11.08.2014<br>பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் 11.08.2014 |
| 06 | தனியர் தன்விருப்ப ஓய்வு கடிதத்தினை சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு அளித்த நாள் | 08.02.2021 |
| 07 | தன்விருப்ப ஓய்வு பெறும் நாள் | 08.05.2021 பிற்பகல் |
| 08 | தன்விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த அன்று தனியரின் வயது | 54 வயது |
| 09 | தனியர் பணி நிறைவு செய்த ஆண்டுகள் | 34 வருடங்கள் |
| 10 | தனியர் உள்ளபடியாக ஓய்வு பெறும் நாள் மற்றும் வருடம் | அரசாணை நிலை எண் 29, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை நாள் 25.02.2021ன்படி 30.06.2026 |

தனியர் பணிபுரிந்த துறைகள் / மண்டல அலுவலகங்களிலிருந்து தனியர் மீது தணிக்கைத் தடைகள், முன்பண தீர்வு செய்தல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்து அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் சான்று பெறப்படவில்லை.

செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கம் 02.03.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் 07.10.2020 தேதியில் ரூ.10,60,000/- கடனாக பெற்றுள்ளார் என்றும், தனியர் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகை அசலும் வட்டியுமாக சேர்த்து ரூ.8,95,500/- (ரூபாய் எட்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்து ஆயிரத்து ஐநூறு மட்டும்) பிடித்தம் செய்து சங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறை அவர்களின் 05.03.2021 நாளிட்ட கடிதத்தில் திரு.Y.J. விஜயசுதாகர் தாஸ், கண்காணிப்பாளர், வட சென்னை வாகன பணிமனை அவர்கள் மீது *As on date, no enquiry or investigation is pending against the official* என சான்று பெறப்பட்டுள்ளது.

காவல்துறை துணை கண்காணிப்பாளர்/விழிப்பு அலுவலர் அவர்களின் 27.04.2021 நாளிட்ட கடிதத்தில், இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் அன்னார் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்பார்வை பொறியாளர் (இ/பா), இயந்திர பொறியியல் துறை அவர்களின் 28.04.2021 நாளிட்ட கடிதத்தில், திரு.Y.J. விஜயசுதாகர் தாஸ், கண்காணிப்பாளர், வட சென்னை வாகன பணிமனை அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருந்து நிலுவைத்தொகை ரூ.8,95,500/- செலுத்தப்பட வேண்டும் என்றும், தனியருக்கு பொங்கல்

முன்பணம் ரூ.10,000/- வழங்கப்பட்ட தொகை நிலுவையில் உள்ளதால் மேற்கண்டுள்ள தொகைகள் பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்றும் தனியர் உடல் நிலைமையை கருதி 08.05.2021 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களின் அனுமதி பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாணை நிலை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள்:11.12.1995ன்படி, திரு.Y.J. விஜயசுதாகர் தாஸ், கண்காணிப்பாளர், இயந்திர பொறியியல் துறை அவர்கள் 34 ஆண்டுகள் பணிக்காலம் நிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதால், தனியரின் உடல் நலமின்மையை கருத்தில் கொண்டு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதிக்குட்பட்டு தன்விருப்ப ஓய்வில் (Voluntary retirement) செல்ல அனுமதிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, திரு.Y.J. விஜயசுதாகர் தாஸ், கண்காணிப்பாளர், இயந்திர பொறியியல் துறை அவர்கள் விருப்பார்ந்த ஓய்வு (Voluntary retirement) அளிக்க கோரி 90 நாட்கள் முன்னறிவிப்புடன் 08.02.2021 நாளிட்ட கடிதத்தினை சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ரூ. 8,95,500/- மற்றும் பொங்கல் பண்டிகை முன்பணம் ரூ.10,000/- ஆகியவை தனியரின் பணிக்கொடையில் இருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும். மேலும், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திரு.Y.J. விஜயசுதாகர் தாஸ் கண்காணிப்பாளர், இயந்திர பொறியியல் துறை அவர்களை 08.05.2021 அன்று பிற்பகல் முதல் விருப்பார்ந்த ஓய்வில் (Voluntary Retirement) செல்ல அனுமதிக்க சிறப்பு அதிகாரி -மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.3.வ.து.ந.க.எண்.ஆர்.2/1757/2020**

**தீர்மானஎண்.451/2021** **நாள்:06-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 - கோட்டம்-22 முதல் 33 வரை கொரோனா தொற்று நோய் ஏற்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட (Quarantine) வீடுகளை கண்காணித்து சமூகபரவலை தடுக்கும் பணிகளை செய்ய 1 வார்டிற்கு 10 பணியாளர்கள் வீதம் 120 தன்னார்வல பணியாளர்களை 16/04/2021 முதல் 15/07/2021 வரை 3 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளமைக்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3ல் (மாதவரம்) கோட்டம்-22 முதல் 33 வரைக்குட்பட்ட 12 வார்டுகள் உள்ளன. இதில் மொத்தம் 2623 சாலைகள்/தெருக்கள் உள்ளன. இந்த 12 வார்டுகளை 180 பகுதிகளாக பிரித்து ஒரு பகுதிக்கு ஒரு பணியாளர் (Focus Volunteers) வீதம் மொத்தம் 180 பணியாளர்களைக் தற்காலிகமாக நியமித்து அவர்களைக் கொண்டு தினசரி ஒவ்வொரு சாலை / தெருக்களுக்கும் சென்று நோய் தொற்று உள்ளவர்களை கண்டறிந்து தனிமைப்படுத்துதல் (Quarantine) செய்யப்பட்ட வீடுகளை கண்காணிக்கவும் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் வெளியில் வந்து சமூக பரவல் செய்யாமல் தடுக்கும் பொருட்டும், மேலும், கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிகளை கண்காணிப்பு செய்யவும் முதற்கட்டமாக 15.06.2020 முதல் 15.10.2020 வரையில் ( நான்கு மாதங்கள் ) பணிபுரிய சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் தீர்மானம் 591/2020, நாள். 03.09.2020 நிறைவேற்றப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

கொரோனா தொற்று முழுவதும் நீங்காத சூழ்நிலையை கருத்தில் கொண்டும், மேலும் தொற்று சற்று குறைந்து வந்த நிலையிலும் மண்டலம்-3ல் மேற்படி பணிகள் தொடரும் பொருட்டு, **16/10/2020 முதல் 15/11/2020 வரையில் (ஒரு மாதம்)** 1 வார்டிற்கு 7 பணியாளர்கள் வீதம் 84 பணியாளர்களையும், **16/11/2020 முதல் 15/01/2021 வரையில் ( இரண்டு மாதங்கள்)** 1 வார்டிற்கு 4 பணியாளர்கள் வீதம் 48 பணியாளர்களையும் , **16/01/2021 முதல் 15/02/2021 வரையில் ( ஒரு மாதம்)** 1 வார்டிற்கு 2 பணியாளர்கள் வீதம் 24 பணியாளர்களையும் மட்டும் தற்காலிகமாக பணியமர்த்தி முறையே சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் தீர்மானம் எண்.806/2020 நாள். 20.10.2020, சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் தீர்மானம் எண்.950/2020 நாள். 20.11.2020, சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் தீர்மான எண்.1051/2020, நாள்,19.12.2020, சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் தீர்மான எண்.041/2021, நாள்.19.01.2021 ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதனை தொடர்ந்து, தொற்று குறைந்து வந்த நிலையிலும் 15/02/2021 முதல் மேற்படி தற்காலிக பணியாளர்கள் (Focus Volunteers) பணிக்காலம் முடிவடைந்த நிலையிலும் மேற்படி பணியாளர்களின் பணிகள் நிறுத்தி திரும்ப பெறப்பட்டது.

தற்போது கோவிட் இரண்டாம் அலை பணிக்கென முதற்கட்டமாக வார்டு ஒன்றிற்கு பத்து தன்னார்வலர்கள் வீதம் பணியமர்த்த ஆணையர் அவர்களின் 12.04.2021 நாளிட்ட கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு அதனடிப்படையில் மண்டலம்-1 முதல் 5 வரை உள்ள 63 வார்டுகளுக்கு 630 தன்னார்வலர்கள் மூன்று மாத காலத்திற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி பணியமர்த்தவும் ஆணையர் அவர்களின் 15.04.2021 நாளிட்ட ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

| S.No | Zone | Number of Focus Volunteers | Salary per month (Rs) | Salary for 3 month (Rs) |
|---|---|---|---|---|
| 1 | 1 | 140 | 11730 | 49,26,600 |
| 2 | 2 | 70 | 11730 | 24,63,300 |
| 3 | 3 | 120 | 11730 | 42,22,800 |
| 4 | 4 | 150 | 11730 | 52,78,500 |
| 5 | 5 | 150 | 11730 | 52,78,500 |
| | **Total** | **630** | | **2,21,69,700** |

இதன் அடிப்படையில் கோவிட் இரண்டாம் அலை பணிக்கென பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-3ல் பின்வருமாறு 120 தன்னார்வலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | கோட்டம் எண் | மொத்த வீடுகளின் எண்ணிக்கை | மொத்த சாலைகளின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட தன்னார்வலர்கள் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட தன்னார்வலர்கள் X 1 மாத ஊதியம் = 1 மாதத்திற்கான மொத்த செலவினம் | மூன்று மாத ஊதியத்திற்கான செலவினம் (மொத்த நபர்களுக்கு) ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 22 | 5456 | 319 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/- | ரூ.3,51,000/- |
| 2 | 23 | 2796 | 97 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/ | ரூ.3,51,000/ |
| 3 | 24 | 8872 | 571 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/ | ரூ.3,51,000/ |
| 4 | 25 | 2369 | 189 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/ | ரூ.3,51,000/ |
| 5 | 26 | 7136 | 256 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/ | ரூ.3,51,000/ |
| 6 | 27 | 4260 | 202 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/ | ரூ.3,51,000/ |
| 7 | 28 | 4094 | 247 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/ | ரூ.3,51,000/ |
| 8 | 29 | 2178 | 109 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/ | ரூ.3,51,000/ |
| 9 | 30 | 2296 | 112 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/ | ரூ.3,51,000/ |
| 10 | 31 | 2576 | 129 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/ | ரூ.3,51,000/ |
| 11 | 32 | 4164 | 87 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/ | ரூ.4,50,000/- |
| 12 | 33 | 5609 | 305 | 10 | 10 X 11730 = ரூ.1,17,300/ | ரூ.4,50,000/- |
| **மொத்தம்** | | **51806** | **2623** | **30** | **ரூ.14,07,600** | **ரூ.42,22,800** |

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3ல் கோவிட் இரண்டாம் அலை பணிக்கென 120 தன்னார்வலர்களை, ஆணையர் அவர்களின் 15.04.2021 நாளிட்ட ஆணையின் படி, பணியமர்த்தப்பட்டமைக்கு சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3-ன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் இரண்டாம் அலை தொற்று தடுப்பு பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் கருதி மண்டலம்-3ல் உள்ள 12 வார்டுகளுக்கு 120 தன்னார்வலர்களை (Focus Volunteers) 16-04-2021 முதல் 15-07-2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச தினக்கூலி ரூ.391/- என்ற அடிப்படையில் மாத ஊதியம் ரூ.11,730/- என நிர்ணயம் செய்து பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,

2) அரசாணை எண்.161, நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறை நாள் 27/03/2020-ல், கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified Disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16aல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் நேரடியாக 120 கொரோனா நோய் தடுப்பு தன்னார்வலர்களை (Focus Volunteers) 16-04-2021 முதல் 15-07-2021 வரையிலான 3 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக்கொண்டமைக்கு மண்டல அலுவலர்-3 அவர்களுக்கு பின்னேற்பு அனுமதியும்,

3) ஏற்கனவே இப்பணியில் ஈடுபட்டிருந்த தன்னார்வலர்களை முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தி கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதியும்,

4) மாதந்தோறும் சம்பந்தப்பட்ட மண்டல உதவி வருவாய் அலுவலர்களிடம் இருந்து வருகை சான்று பெற்று மண்டல அளவில் பட்டி தீர்வு செய்ய மண்டல அலுவலர்-3 அவர்களை அனுமதித்தமைக்கு பின்னேற்பு அனுமதியும் ,

<u>ம.அ.3.வ.து.ந.க.எண்.ஆர்.2/1757/2020</u>

5) இப்பணிக்கான மண்டலம்-3-ற்கான நிர்வாக செலவினம் ரூ.42,22,800/- (ரூபாய் நாற்பத்தி இரண்டு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்.) மேற்கொள்ள அனுமதித்தமைக்கு பின்னேற்பு அனுமதியும் , (A.C.code No: 230-70-12-03)

6) இதற்கான செலவினம் கோவிட்-19-க்கென ஒதுக்கப்பட்ட நிதியில் மண்டல அளவில் மேற்கொள்ள அனுமதித்தமைக்கும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும் பின்னேற்பு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 04.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ.5சு.து/சு2/ந.க.எண். 1127/2021**

**தீர்மானஎண்.452/2021** **நாள்:06-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5 சுகாதாரப் பிரிவு - கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 744 தற்காலிக பணியாளர்கள் நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

24.03.2021 அன்று நடைபெற்ற ஆணையர் அவர்களின் கலந்தாய்வு கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை (FEVER SURVEY WORKERS) மாத ஊதிய அடிப்படையில் ரூ.12,121/- என நிர்ணயம் செய்து இரண்டு மாதத்திற்கு 01.04.2021 முதல் 31.05.2021 வரை பணியமர்த்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மண்டலம்-5க்குட்பட்ட கோட்டம்- 49 முதல் 63 முடிய அனைத்து தெருக்களிலும் வீடு வீடாக சென்று காய்ச்சல் இருமல் சளி தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும், மேலும், கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளிலுள்ள வீடுகளில் பொருளாதாரம் சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய, 744 பணியாளர்களை (FEVER SURVEY WORKERS) இரண்டு மாத காலம் 01.04.2021 முதல் 31.05.2021 வரை நியமிக்கப்பட்டனர். அதன் விவரம் கோட்ட வாரியாக கீழ்கண்டவாறு

| வ.எண். | கோட்டம் | தற்போது தேவைப்படும் SHW பணியாளர்கள் 01.04.2021 முதல் 31.05.2021 வரை |
|---|---|---|
| 1 | 49 | **41** |
| 2 | 50 | **62** |
| 3 | 51 | **35** |
| 4 | 52 | **42** |
| 5 | 53 | **49** |
| 6 | 54 | **48** |
| 7 | 55 | **50** |
| 8 | 56 | **45** |
| 9 | 57 | **58** |
| 10 | 58 | **85** |
| 11 | 59 | **44** |
| 12 | 60 | **48** |
| 13 | 61 | **60** |
| 14 | 62 | **37** |
| 15 | 63 | **40** |
| | **மொத்தம்** | **744** |

இவர்களது பணி காலம் ஏப்ரல் 2021 முதல் மே 2021 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது

எனவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில்,

1. மண்டலம் – 5 ல் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக கோட்டம் – 49 முதல் 63 முடிய அனைத்து தெருக்களுக்கும் வீடு வீடாக சென்று காய்ச்சல், இருமல், சளி தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மேலும், கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளிலும் வீடுகளில் பொருளாதாரம் சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 744 பணியாளர்களை (FEVER SURVEY WORKERS), ஏப்ரல் 2021 முதல் மே 2021 வரை இரண்டு மாத காலத்திற்கு பணியமர்த்த அனுமதி வேண்டியும்,

<u>**ம.அ.5.சு.து/சு2/ந.க.எண். 1127/2021**</u>

2. பணியாளர்களுக்கு *(FEVER SURVEY WORKERS)* ஊதியமாக ஒரு நபருக்கு நாளொன்றுக்கு *391 X 744 X 61* = ரூ.*1,77,45,144/-* (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஏழு லட்சத்து நற்பத்தி ஐந்தாயிரத்து நூற்று நாற்பத்து நான்கு மட்டும்) வழங்கவும்,
3. இச்செலவின தொகையினை கணக்கு தலைப்பு *20-21-07*, கணக்கு குறியீடு எண்.*230-71-203*ல் ***391*x*744*x*61*** = ரூ. *1,77,45,144/-* நிதி ஒதுக்கவும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“*1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.10/சு.து/ந.க.எண்.எச்2/2230/2021**

**தீர்மானஎண்.453/2021** **நாள்:06-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10 சுகாதாரத்துறை- கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக கள ஆய்வு மூலமாக கணக்கெடுக்கும் பணியினை மேற்கொள்வதற்கு தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தி ஊதியம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 12.04.2021 நாளிட்ட உத்தரவின் படி மண்டலம்-10குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கள ஆய்வு மேற்கொள்ளும் பணியினை செய்வதற்கு தேவையான தற்காலிக பணியாளர்களை அரசின் விதிகளுக்கு உட்பட்டு மாத ஊதியம் ரூ.12,121/- வீதத்தில் ஒரு மாத காலத்திற்கு பணியமர்த்தல் அவசியமாகிறது.

அதன் அடிப்படையில் மண்டலம்-10ல் கோட்டம் 127 முதல் 142 வரையில் உள்ள கோட்டங்களில் பணிபுரிய 971 தற்காலிக களப்பணியாளர்கள் சுய உதவி குழுக்கள் மற்றும் நகர்புற வேலை வாய்ப்பு குழு உறுப்பினர்கள் மூலமாக பணியமர்த்தி மண்டலம் 10ல் உள்ள பகுதியில் வாழும் மக்களின் கொரோனா நோய் அறிகுறி உள்ளவர்களின் விவரம் சேகரிப்பது மற்றும் பாதிக்கப்பட்ட பகுதியில் கிருமிநாசினி தெளிப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு மேற்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு 08.04.2021 முதல் 30.06.2021 வரை மூன்று மாதத்திற்கு பணியமர்த்த அதன் விவரம் கோட்டம் வாரியாக பின்வருமாறு

| வ. எண் | கோட்டம் | ஏற்கனவே தற்காலிபமாக பணியமர்த்தப்பட்ட மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் | தற்போது தற்காலிபமாக பணியமர்த்தப்பட்ட மகளீர் சுய உதவி குழு உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| 1. | 127 | 39 | 88 |
| 2. | 128 | 39 | 82 |
| 3. | 129 | 35 | 62 |
| 4. | 130 | 23 | 44 |
| 5. | 131 | 30 | 63 |
| 6. | 132 | 31 | 63 |
| 7. | 133 | 26 | 50 |
| 8. | 134 | 25 | 44 |
| 9. | 135 | 23 | 44 |
| 10. | 136 | 20 | 38 |
| 11. | 137 | 45 | 94 |
| 12. | 138 | 39 | 69 |
| 13. | 139 | 29 | 63 |
| 14. | 140 | 22 | 44 |
| 15. | 141 | 19 | 44 |
| 16. | 142 | 35 | 69 |
| கோயம்பேடு வணிக வளாகம் | | 10 | 10 |
| மொத்தம் | | 490 | 971 |

மேற்காணும் பட்டியலின் படி கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக ஏற்கனவே 490 தற்காலிக பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்தனர். தற்போது 971 நபர்கள் தற்காரிகமாக பணியமர்த்தப்பட்டு சுய உதவி குழு உறுப்பினர்கள் மூலம் மூன்று மாத காலத்திற்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

<u>ம.அ.10/சு.து/ந.க.எண்.எச்2/2230/2021</u>

எனவே,

1. மண்டலம்-10குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு கிருமிநாசினி தெளிப்பது கள ஆய்வு மேற்கொண்டு நோய் அறிகுறி உள்ளவர்களை கண்டறிந்து விவரம் சேகரிப்பது மற்றம் அப்பகுதி மக்களின் பொருளதார நிலை சேகரிப்பது போன்ற பணிகளுக்கு சுய உதவி மூலம் 971 தற்காலிக பணியாளர்களை மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்த அனுமதியும்,
2. மேற்கண்ட சுய உதவி குழுக்கள் மூலம் 971 தற்காலிக பணியாளர்களுக்கு மாத ஊதியமாக ஒரு பணியாளருக்கு ரூ.12,121/- வீதம் 971 பணியாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு 3,53,08,473/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து மூன்று லட்சத்து எட்டாயிரத்து நானூற்று எழுபத்தி மூன்று மட்டும் ) வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ.12ந.க.எண்.இ1/1879/2021/08**

**தீர்மானஎண்.454/2021** **நாள்:06-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 12, வார்டு - 158ல் சென்னை வர்த்தக மையத்தில் அமைக்கப்பட்டுள்ள Covid Care Centre - அலுவலக மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்குத் தேவையான தளவாட பொருட்கள் வாங்குவதற்கு - செலவீனத் தொகை ரூ. 9,49,610/- க்கு- முன்பணம் பெற்று பணியை மேற்கொள்ள நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, பகுதி-35, வார்டு - 158ல் சென்னை வர்த்தக மையத்தில் கொரோனா வைரஸ் (Covid-19) தடுப்பு நடவடிக்கைக்காக நோயாளிகள் தற்போது தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி மொத்தம் Centreல் 950 கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து தங்க வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அப்பகுதியில் துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணிக்கு 31 நாட்களுக்கு தேவையான தளவாட பொருட்களை கொள்முதல் செய்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

| S.No | Description of work for Chennai Trade Centre | Nos | unit | Rate Per Unit | Amount |
|---|---|---|---|---|---|
| 1 | Floor Cleaning Mop | 50 | No’s | 110 | 5,500 |
| 2 | Long Stick Broom | 50 | No’s | 150 | 7,500 |
| 3 | Toilet Cleaning Liquid | 500 | ltr | 110 | 55,000 |
| 4 | Toilet Cleaning Brush | 100 | nos | 80 | 8,000 |
| 5 | Floor Cleaning Liquid | 500 | ltr | 110 | 55,000 |
| 6 | Black Plastic Cover | 10000 | No’s | 9.5 | 95,000 |
| 7 | Blue Bag (Medical waste) | 3000 | No’s | 15 | 45,000 |
| 8 | Plastic Tag | 500 | pack | 45 | 22,500 |
| 9 | Plastic Spray bottle | 30 | No’s | 55 | 1,650 |
| 10 | Sanitary Liquid 20 litre Can | 40 | No’s | 5000 | 2,00,000 |
| 11 | Hand Wash Liquid [200 ml] | 20 | No’s | 110 | 2,200 |
| 12 | N95 Mask | 3750 | No’s | 100 | 3,75,000 |
| 13 | Triple Layer Mask | 700 | No’s | 6 | 4,200 |
| 14 | Whitener | 10 | No’s | 25 | 250 |
| 15 | Table Cleaning Cloth (Blue) | 40 | meters | 70 | 2,800 |
| 16 | Stapler | 10 | No’s | 60 | 600 |
| 17 | Stapler Bin Box | 2 | No’s | 380 | 760 |
| 18 | Pen | 10 | pocket | 100 | 1,000 |
| 19 | Un ruled Long Size Note | 20 | No’s | 65 | 1,300 |
| 20 | Ruled Long Size Note | 10 | No’s | 65 | 650 |
| 21 | AA Battery | 100 | No’s | 16 | 1,600 |
| 22 | Marker (Blue) | 10 | No’s | 10 | 100 |
| 23 | A4 Bundle | 20 | No’s | 320 | 6,400 |
| 24 | Punching Machine (double Hole) | 10 | No’s | 185 | 1,850 |
| 25 | File Pad (Legal Size) | 10 | No’s | 25 | 250 |
| 26 | Napkins | 500 | No’s | 60 | 30,000 |
| 27 | Surgical Hand Gloves | 1500 | Pair | 17 | 25,500 |
| | | | | **Total** | **9,49,610** |

**ம.அ.12ந.க.எண்.இ1/1879/ 2021/08**

மேற்குறிப்பிட்டுள்ளபடி, அலுவலக மற்றும் துப்புரவு பணிக்கு 31 நாட்களுக்கு தேவையான தளவாட பொருட்களை கொள்முதல் செய்ய ரூ. **9,49,610/-** (ரூபாய் ஒன்பது இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து அறுநூற்று பத்து மட்டும்) வரை ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, பகுதி-35, வார்டு - 158ல் சென்னை வர்த்தக மையத்தில் அமைக்கப்பட்டுள்ள 950 கோவிட் நோயாளிகளுக்கான Covid Care Centre-ல் அலுவலக பணி மற்றும் தனியார் துப்புரவு பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் துப்புரவுப்பணிக்கு 31 நாட்களுக்கு தேவையான தளவாட பொருட்கள் வாங்குவதற்கு ரூ. 9,49,610/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து அறுநூற்று பத்து மட்டும்) யை முன்பணமாக பெற்று பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,
2) மேற்கண்ட இப்பணிக்கான செலவுத் தொகைக்குத் தேவையான நிதியை வருவாய் நிதி பிரிவு எண். 20-21-07 கணக்கு எண். 230-701-206 (Other Expenses) நிதி ஒதுக்கீடு செய்ய நிதி ஆலோசகர் அவர்களை கேட்டுக் கொள்வதற்கும்,
3) பெறப்படும் முன்பணத் தொகையை உதவி செயற் பொறியாளர்-தி.க.மே அவர்களின் பெயரில் காசோலையாக வழங்கவும்,
4) மேற்படி பணிக்கான செலவினம் மேற்கொண்டபின் பெறப்படும் பட்டிகளின் அடிப்படையில் உரிய கணக்குத் தலைப்பில் நேர் செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**S.W.M.C.No.A7/0898/2020**

**Resolution No.455/2021** **Date:06-05-2021**

**Greater Chennai Corporation – Solid Waste Management Department - Primary Collection, Secondary Transportation of Construction & Demolition Waste from Zones 1 to 8 to the Processing Facility at Kodungaiyur Site of Greater Chennai Corporation- LoA issued to M/s. The Premier Precision Surface - Concession Agreement signed between Greater Chennai Corporation and M/s. Seermigu Smart North Chennai Private Limited (SPV)- request to handover of skid steer loaders from Mechanical department of Greater Chennai Corporation to M/s. Seermigu Smart North Chennai Private Limited – For orders.**

The Letter of Award has been issued to M/s. The Premier Precision Surface on 21.10.2020 and the Concessionaire has also signed the Concession Agreement on 22.01.2021.

As per the terms mentioned in volume II B Schedule 3 of the Concession Agreement which states that the Greater Chennai Corporation shall handover 07 (seven) nos of Skid steer loaders to the Concessinaire for collection and transportation activities related to Construction and demolition waste. Further the Agreement also states that the Concessionaire is required to deploy manpower for operation of the transferred assets including necessary Operation and maintenance as per the terms and conditions of the Concession Agreement till the end of the Concession Period. After the end of the Concession period the Concessionaire will hand over the skid steer loaders to Greater Chennai Corporation.

The following are the skid steer loaders that needs to be handed over to the Concessionaire as per the Concession Agreement along with the details are listed below

| S.No | Registration Number | Type of Vehicle | Year of Purchase | Manufacturer | Vehicle Specification/ Model | Engine Number | Chassis Number |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | TN 04 AV 4434 | SKID STEER LOADER | 2018 | Bobcat | S130 | 7JK4482 | B1E619663 |
| 2 | TN 04 AV 4411 | SKID STEER LOADER | 2018 | Bobcat | S450 | 7JK5171 | V1E61659 |
| 3 | TN 04 AV 4416 | SKID STEER LOADER | 2018 | Bobcat | S450 | 7JK3061 | V1E61698 |
| 4 | TN04 AV 4442 | SKID STEER LOADER | 2018 | Bobcat | S 450 | 0007JK3657 | B1E619658 |
| 5 | TN04 AV 4457 | SKID STEER LOADER | 2018 | Bobcat | S 450 | 0007JK4769 | B1E619684 |
| 6 | TN04 AV 4448 | SKID STEER LOADER | 2018 | Bobcat | S 450 | 0007JL3437 | B1E619610 |
| 7 | TN04 AV 4447 | SKID STEER LOADER | 2018 | Bobcat | S 450 | 0007JK4208 | B1E619666 |

Hence,

(1) for directing the Mechanical department of Greater Chennai Corporation to handover the skid steer loaders to the Concessionaire M/s. Seermigu Smart North Chennai Private Limited for performing the activities related to Collection and transportation of Construction and Demolition Waste as per the concessionaire agreement.

**S.W.M.C.No.A7/0898/2020**

(2) To hand over the skid steer loaders (seven nos) to the Concessionaire through the Mechanical department of Greater Chennai Corporation.

Sl.No 1 & 2 above, orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.04.05.2021 is read.

**"Sl.No. 1 & 2 are approved by Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."**

********

**S.W.M.C.No.A7/0899/2020**

**Resolution No.456/2021** **Date:06-05-2021**

**Greater Chennai Corporation – Solid Waste Management Department - Primary Collection, Secondary Transportation of Construction & Demolition Waste from Zones 9 to 15 to the Processing Facility at Perungudi Site of Greater Chennai Corporation- LoA issued to M/s. The Premier Precision Surface - Concession Agreement signed between Greater Chennai Corporation and M/s. Seermigu Smart South Chennai Private Limited (SPV)- request to handover of skid steer loaders from Mechanical department of Greater Chennai Corporation to M/s. Seermigu Smart South Chennai Private Limited – For orders.**

The Letter of Award has been issued to M/s. The Premier Precision Surface on 21.10.2020 and the Concessionaire has also signed the Concession Agreement on 22.01.2021

As per the terms mentioned in volume II B Schedule 3 of the Concession Agreement which states that the Greater Chennai Corporation shall handover 07 (seven) nos of Skid steer loaders to the Concessionaire for collection and transportation activities related to Construction and demolition waste. Further the Agreement also states that the Concessionaire is required to deploy manpower for operation of the transferred assets including necessary Operation and maintenance as per the terms and conditions of the Concession Agreement till the end of the Concession Period. After the end of the Concession period the Concessionaire will hand over the skid steer loaders to Greater Chennai Corporation.

The following are the skid steer loaders that needs to be handed over to the Concessionaire as per the Concession Agreement along with the details are listed below

| S.No | Registration Number | Type of Vehicle | Year of Purchase | Manufacturer | Vehicle Specification/ Model | Engine Number | Chassis Number |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | TN04 AV 4497 | Skid Steer Loader | 2018 | BOBCAT | | | B1E619699 |
| 2 | TN 04 AV 4489 | Skid Steer Loader | 2018 | DOOSAN | Doosan | 7JK4598 | B1E619598 |
| 3 | TN 04 AU 4483 | Skid Steer Loader | 2018 | DOOSAN | | 7JE1025 | B1E6194249 |
| 4 | TN04 AV 4460 | Skid Steer Loader | 2018 | BOBCAT | S 450 | 0007JK4355 | B1E619603 |
| 5 | TN04 AV 4465 | Skid Steer Loader | 2018 | BOBCAT | S 450 | 0007JJ5578 | B1E619626 |
| 6 | TN 04 AV 4423 | Skid Steer Loader | 2018 | BOBCAT | S130 | 7JL9297 | B1E619700 |
| 7 | TN 04 AV 4403 | Skid Steer Loader | 2018 | BOBCAT | S130 | 7JK4745 | B1E619685 |

Hence,

(1) for directing the Mechanical department of Greater Chennai Corporation to handover the skid steer loaders to the Concessionaire M/s. Seermigu Smart South Chennai Private Limited for performing the activities related to Collection and transportation of Construction and Demolition Waste as per the concessionaire agreement.

**S.W.M.C.No.A7/0899/2020**

(2) To hand over the skid steer loaders (seven nos) to the Concessionaire through the Mechanical department of Greater Chennai Corporation.

Sl.No 1 & 2 above, orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.04.05.2021 is read.

**"Sl.No. 1 & 2 are approved by Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."**

********

**ப.து.ந.க.எண்.A5/PPA/WDCN05/ 0017/2021**

**தீர்மானஎண்.457/2021** **நாள்:06-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பணித்துறை - நகரமைப்பு பிரிவு - திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி - புதிய கதவு எண்.126, 122, 122/F1, 122/F2, 122/S1, 122/S2 பழைய கதவு எண். 143/GF-1, 143/GF-2, 143/FF-1, 143/FF-2, 143/SF, 143/SF-2, Gollavar Agharam Road, P.A.N. ராஜரத்தினம் சாலை, பழைய வண்ணாரபேட்டை, சென்னை 600021 R.S.No.3713/67, பிளாக் எண்.55, தண்டையார்பேட்டை கிராமம் - பொது வழி பாதை - சாலை விரிவாக்கத்திற்கு 1/3 பிரிக்கப்படாத நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ள மன்ற தீர்மானம் பெறப்பட்டது - மன்ற தீர்மானத்தில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி.**

மண்டலம்-5, கோட்டம்-49ல் திரு. S.V. Balasubramani & திருமதி. B. Amutha அவர்கள் புதிய கதவு எண்.126, 122, 122/F1, 122/F2, 122/S1, 122/S2 பழைய கதவு எண். 143/GF-1, 143/GF-2, 143/FF-1, 143/FF-2, 143/SF, 143/SF-2, Gollavar Agharam Road, P.A.N. ராஜரத்தினம் சாலை, பழைய வண்ணாரபேட்டை, சென்னை 600021 R.S.No.3713/67, பிளாக் எண்.55, தண்டையார்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் PPA/WDCN05/00017/2021 நாள். 03.01.2021ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக P.A.N. ராஜரத்தினம் சாலை அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி P.A.N. ராஜரத்தினம் சாலை 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 18.30 பரப்பளவில் 1/3 பிரிக்கப்படாத நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார். மீதமுள்ள 1/3 பிரிக்கப்படாத நிலத்தினை, மற்ற உரிமையாளர்கள் மேம்படுத்தும் பொழுது அவர்களிடமிருந்து சாலை விரிவாக்கத்திற்கான நிலம் தானப்பத்திரத்தின் மூலம் பெற்ற பின்னர் இந்த நிலத்தினை சாலையாக மேம்படுத்தலாம்.

எனவே, திரு. S.V. Balasubramani & திருமதி. B. Amutha அவர்களின் புதிய கதவு எண்.126, 122, 122/F1, 122/F2, 122/S1, 122/S2 பழைய கதவு எண். 143/GF-1, 143/GF-2, 143/FF-1, 143/FF-2, 143/SF, 143/SF-2, Gollavar Agharam Road, P.A.N. ராஜரத்தினம் சாலை, பழைய வண்ணாரபேட்டை, சென்னை 600021 R.S.No.3713/67, பிளாக் எண்.55, தண்டையார்பேட்டை கிராமத்தில் அமைய பெற்றுள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய 18.00 ச.மீ பரப்பளவு (1/3 பிரிக்கப்படாத) நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்ள மன்ற தீர்மானம் பெறப்பட்டது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.406/2021, நாள் 29.03.2021ல் R.S.No.3713/67 ல் (1/3 பிரிக்கப்படாத) 18.00 ச.மீ நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ள தவறுதலாக தீர்மானம் பெறப்பட்டுள்ளது. ஆனால் பொது பாதையில் 1/3 பிரிக்கப்படாத நிலம் R.S.No.3713/68 ல் அமைந்துள்ளதால் தானமாக சாலை விரிவாக்கத்திற்கு பெறபட வேண்டிய நிலம் R.S.No.3713/68 ல் 18.30 பரப்பளவு ஆகும்.

எனவே,

(1) திரு. S.V. Balasubramani & திருமதி. B. Amutha அவர்களின் புதிய கதவு எண்.126, 122, 122/F1, 122/F2, 122/S1, 122/S2 பழைய கதவு எண். 143/GF-1, 143/GF-2, 143/FF-1, 143/FF-2, 143/SF, 143/SF-2, Gollavar Agharam Road, P.A.N. ராஜரத்தினம் சாலை, பழைய வண்ணாரபேட்டை, சென்னை 600021 R.S.No.3713/67, பிளாக் எண்.55, தண்டையார்பேட்டை கிராமத்தில் அமைய பெற்றுள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய R.S.No.3713/68 ல் 18.30 ச.மீ பரப்பளவு (1/3 பிரிக்கப்படாத) நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.406/2021 நாள் 29.03.2021 ல் சாலை விரிவாக்கம் செய்ய தானமாக பெறபட வேண்டிய நிலம் R.S.No.3713/67ல் 18.00ச.மீ நிலம் என குறிப்பிட்டதற்கு பதிலாக **(தானமாக பெறப்பட வேண்டிய பரப்பளவு R.S.No.3713/68ல் (1/3 பிரிக்கப்படாத) 18.30 ச.மீ நிலம் என திருத்தம் செய்வதற்கும்**),

(3) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) விண்ணப்பதாரரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்.

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ப.து.ந.க.எண்.டி1/067/2021**

**தீர்மான எண்.458/2021** **நாள்:06-05-2021**

# தானப்பத்திரம்

மண்டலம்-6, கோட்டம்-77ல் திரு. A. Uttamchand அவர்கள் கதவு எண்.32 & 33/1 புளியந்தோப்பு நெடுஞ்சாலை, புளியந்தோப்பு, சென்னை – 600012 R.S.No.1736/53, 1736/261, பிளாக் எண்.39, வேப்பேரி கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06 ல் PPA/WDCN06/01237/2021 நாள்.12.02.2021ன்படி விண்ணப்பித்துள்ளார். திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக புளியந்தோப்பு நெடுஞ்சாலை, அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி புளியந்தோப்பு நெடுஞ்சாலை 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 10.05ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு. A. Uttamchand, அவர்கள் கதவு எண்.32 & 33/1 புளியந்தோப்பு நெடுஞ்சாலை, புளியந்தோப்பு, சென்னை – 600012, R.S.No.1736/53, 1736/261, பிளாக் எண்.39, வேப்பேரி கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய 10.05 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.19,400/- ஐ (ரூபாய் பத்தொன்பதாயிரத்து நானூறு மட்டும்) மனை உரிமையாளர் திரு. A.Uttamchand அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தானப்பத்திரம், 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**<u>பொ.து.ந.க.எண். இ5/21631/2020 &</u>**
**<u>ச.கு.ந.க.எண்.சகு1/1351/2009</u>**

**தீர்மானஎண்.459/2021** **நாள்:06-05-2021**

**<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - சட்டக்குழுமம் - திரு.ஆர்.பாஸ்கர், உதவியாளர், (தற்காலிக பணிநீக்கம்) சட்டக்குழுமம் - மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் பயனாளிக்கு காசோலை வழங்கியது - கையூட்டு பெற்றது - விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையினரால் கைது செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது - துறை ரீதியாக பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3ம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983 துணை விதி 9(2) ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விசாரணை செய்யப்பட்டது - விசாரணை அறிக்கை பெறப்பட்டது - விசாரணை அலுவலர் அறிக்கை மீது தனியரின் கூடுதல் விளக்கம் பெறப்பட்டது - ஒழுங்கு நடவடிக்கையில் தண்டனையாக கட்டாய ஓய்வு அளித்து (Compulsory Retirement) ஆணையிடப்பட்டது. - தனியர் மேல் முறையிட்டு மனு அளித்தது - தனியரின் மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, சட்டக்குழுமத்தில் உதவியாளராக பணிபுரிந்த (கட்டாய ஓய்வு) திரு.ஆர்.பாஸ்கர், அவர்கள் பழைய மண்டலம் 8 (புதிய மண்டலம் 10) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பயனாளியான திருமதி.ஆர்.அல்போன்சா என்கிற நிர்மலா அவர்களுக்கு திருமண நிதியுதவு ரூ.15,000/-க்கான காசோலையினை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதி இல்லாமல் முறைகேடாக காசோலையினை பெற்று அலுவலக விதிகளுக்கு மாறாக தனியரிடம் வழங்குவதற்கு ரூ.5000/- கையூட்டு பெற்றதற்காக விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையினரால் கைது செய்யப்பட்டு ஆணையர் அவர்களின் 10.03.2009 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி 04.03.2009 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார்.

திரு.ஆர்.பாஸ்கர், உதவியாளர், சட்டக்குழுமம் அவர்கள் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையினரால் கைது செய்யப்பட்டு தொடரப்பட்ட குற்றவியல் நடவடிக்கையில் குற்றவியல் சிறப்பு நீதிமன்றம் 30.10.2018 நாளிட்ட தீர்ப்பில் தனியரை குற்றமற்றவர் என தீர்ப்பு வழங்கியது.

அரசு கடித எண். Letter (Ms) No.91/N/2012-1 நாளிட்ட 19.06.2012ல் குற்றவியல் வழக்கில் நிரபராதி என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால், அன்னார் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை தொடர வேண்டும்மென கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

*7. "Similarly, immediately after the criminal case ended in acquittal in the trial court or in the criminal appeal or revision, immediate action may be taken to initiate departmental action against the public servant, if the acquittal is either on technical ground or on benefit of doubt by following the instructions issued in G.O.Ms.No.251, Personnel and Administrative Reforms (N) Department, dated 21/4/1988 which is as follows:-*

*(i) that, in the case of an accused official acquitted by the Courts of Law, whether on merits or on technical grounds or otherwise, it is open to the competent disciplinary authority to institute or to continue the disciplinary proceedings against the accused official for the same charges from which he was acquitted by the Court, if the competent disciplinary authority is of the view that there are good grounds and sufficient evidence to proceed with the departmental disciplinary proceedings"*

மேற்படி அரசு கடிதத்தின் தொடர்ச்சியாக தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983 துணை விதி 9(2)ன் கீழ் துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விசாரணை அலுவலர் திரு.எஸ்.பாபு, தலைமை கணக்கு அலுவலர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (தெற்கு) அவர்களை விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை அலுவலர் அறிக்கை தனியருக்கு சார்வு செய்யப்பட்டு அதன் மீது தனியரின் கூடுதல் விளக்கம் பெறப்பட்டது.

**பொ.து.ந.க.எண். இ5/21631/2020 &**

**ச.கு.ந.க.எண்.சகு1/1351/2009**

தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், தனியர் சமர்ப்பித்த விளக்கங்கள், விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் விசாரணை அறிக்கையின் மீது தனியர் சமர்ப்பித்த கூடுதல் விளக்கம் கீழ்வருமாறு அளிக்கப்படுகிறது.

**குற்றச்சாட்டு -1**

சென்னை மாநகராட்சி வருவாய் துறை, மண்டலம்-8ல் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு காசோலை வழங்க கையூட்டு பெற்றதனால், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார். இது குறித்து நாளிதழில் பிரசுரிக்கப்பட்டுள்து. இதனால் சென்னை மாநகராட்சி நற்பெயருக்கு களங்கமும், அவப்பெயரும் ஏற்பட காரணமாக இருந்துள்ளீர்கள். இச்செயலானது சென்னை மாநகராட்சி நன்னடத்தை விதி 20ஐ மீறிய செயலாகும்.

**குற்றச்சாட்டு-1க்காக தனியரின் விளக்கம்**

நான் மண்டலம் 8ல் பணிபுரிந்து உதவியாளராக பதவி உயர்வு பெற்று சட்டக்குழுமத்தில் 24.11.2008 அன்று பணியமர்வு செய்யப்பட்டேன். எனவே, மண்டலம் 8ல் நடந்த அலுவலக முறைகேடுகளுக்கு நான் பொறுப்பாளியல்ல என்று தெரிவித்து குற்ற எண்.1ஐ நான் மறுக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு 1க்கான விசாரணை அலுவலர் அறிக்கை**

திரு.ஆர்,பாஸ்கர், உதவியாளர் , (தற்காலிக பணிநீக்கம்) அவர்கள் 04.03.2009 அன்று இரவு 7.50 மணிக்கு திருமதி. ஆர். அல்போன்ஸா (A) நிர்மலா க/பெ. வர்கீஸ்ராஜ் அவர்களிடம் இருந்து ரூ.5000/- மேற்படி திட்டத்தின் கீழ் வங்கி கேட்பு வரைவு ரூ.15,000/-க்கு வழங்கிட கையூட்டு கோரியுள்ளார். அதன் அடிப்படையில் திருமதி. ஆர். அல்போன்ஸ் (A) நிர்மலா க/பெ. வர்கீஸ்ராஜ் அவர்களால் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையில் புகார் தெரிவித்துள்ளதின் அடிப்படையில் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையினரால் திரு.ஆர். பாஸ்கர், உதவியாளர், அவர்களை கைது செய்ய சரியான வியூகம் அமைக்கப்பட்டு திரு.ஆர். பாஸ்கர், உதவியாளர், திரு. டி. நாகநாதன் (தனிநபர்) என்பவரின் மூலமாக கையூட்டு ரூ.5000/- பெறும் சமயம் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையினர் மறைந்திருந்து திரு.ஆர். பாஸ்கர், அவர்களை சென்னை – 28, ராயப்பேட்டை, விற்பனை வரி அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஜி.பாரதி அவர்கள் முன்னிலையிலும் திரு.சி. ராஜேந்திரன், கண்காணிப்பாளர், சென்னை – 28, கலை மற்றும் பண்பாட்டு துறை இயக்கத்தில் பணிபுரியும் அவர்கள் இருவர் முன்னிலையிலும் சாட்சியாக வைத்து திருமதி. ஆர்.அல்போன்ஸ் (A) நிர்மலா க/பெ வர்கீஸ்ராஜ் அவர்களால் திரு.டி. நாகநாதன் (தனிநபர்) அவர்களின் மூலமாக திரு. ஆர். பாஸ்கர் அவர்களிடம் கையூட்டு பெறும் சமயம் கையும் களவுமாக விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு பிரிவினரால் திரு.ஆர்.பாஸ்கர் உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது இப்பொருள் சம்மந்தமான அனைத்து பதிவுருக்களை நன்கு ஆராய்ந்ததன் அடிப்படையிலும் (Forensic Science Department) அறிக்கையின் அடிப்படையிலும் (அறிவியல்) திரு.ஆர்.பாஸ்கர், உதவியாளர் (தற்காலிக பணிநீக்கம்) அவர்கள் கையூட்டு ரூ.5000/- பெற்றுள்ளார் என்பது நன்கு புலப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, திரு.ஆர்.பாஸ்கர், உதவியாளர் (தற்காலிக பணிநீக்கம்) சட்டக்குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எண்.1 முற்றிலும் நிருபணமாகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு -2**

சென்னை மாநகராட்சி, சட்டக்குழுமத்தில் பணிபுரிந்து கொண்டு உரிய அலுவலரின் அனுமதியின்றி மண்டலம்-8, வருவாய்த்துறை தொடர்புடைய பணியை மேற்கொண்டது அலுவலக நடைமுறைக்கு முரணானதாகும்.

**குற்றச்சாட்டு-2க்கான தனியரின் விளக்கம்:**

கடந்த 04.03.2009 அன்று முழுவதும் நான் சட்டக்குழுமத்தில் எனது பணியினை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றேன் எனவே, நான் சட்டக்குழுமத்தில் பணிபுரிந்து கொண்டு உரிய அலுவலரின் அனுமதியின்றி மண்டலம் 8ல் வருவாய் துறையில் பணிபுரிந்ததாக குற்றம்

சுமத்தியது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்பதால் குற்ற எண். 2ஐ மறுக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு-2க்கான விசாரணை அலுவலர் அறிக்கை</u>

திரு.ஆர்.பாஸ்கர், உதவியாளர் (தற்காலிக பணிநீக்கம்) சட்டக்குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்கள் சட்டக்குழுமத்தில் பணிபுரிந்துக் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8ல் வருவாய் துறை தொடர்புடைய பணியை திரு.ஜே.கே.பாலாஜி, உதவியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -8 அவர்களின் உதவியுடன் மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கும் பணியை மேற்கொண்டது அலுவலக நடைமுறைக்கு முற்றிலும் முரணானது என்பது தெரியவருகிறது. எனவே, இக்குற்றச்சாட்டு 2வும் <u>நிருபணமாகிறது</u> என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>குற்றச்சாட்டு-3</u>

சென்னை மாநகராட்சியின் நற்பெயருக்கு குந்தகம் விளைவித்தது

<u>குற்றச்சாட்டு-3க்கான தனியரின் விளக்கம்</u>

நான் சென்னை மாநகராட்சியின் நற்பெயருக்கு குந்தகம் விளைவிக்கும் எவ்வித செயலினை செய்யவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 03.09.1987 முதல் நான் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து வருகிறேன். இந்த 22 ஆண்டுகள் பணிக்காலத்தில் என்மீது எந்தவித ஒழுங்கு நடவடிக்கையும் இல்லாமல் எனது பணியினை செவ்வனே செய்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு 3க்கான விசாரணை அலுவலர் அறிக்கை</u>

திரு. ஆர். பாஸ்கர், உதவியாளர் (தற்காலிக பணிநீக்கம்) சட்டக்குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்கள் கையூட்டு பெற்றது ஊழல் மற்றும் விழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டது நாளிதழில் செய்தியாக வெளிவந்துள்ளதாலும், மேற்காணும் இரண்டு குற்றச்சாட்டுகளும் நிருபணமானதால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பெரும் களங்கம் திரு.ஆர்.பாஸ்கர், உதவியாளர் ஏற்படுத்தியுள்ளார். எனவே, குற்றச்சாட்டு எண்.3ம் முற்றிலும் <u>நிருபணமாகிறது</u> என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

விசாரணை அலுவலரின் அறிக்கை தனியருக்கு சார்வு செய்யப்பட்டு தனியரின் கூடுதல் விளக்கம் பெறப்பட்டது அதன் விவரம் கீழ்வருமாறு அளிக்கப்படுகிறது.

<u>விசாரணை அலுவலர் அறிக்கையின் மீது தனியரின் கூடுதல் விளக்கம்</u>

விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கையில் குற்றச்சாட்டு 1 முற்றிலும் நிருபணமாகிறது என தெரிவித்துள்ளார். இந்த குற்றச்சாட்டு பி.என்.டி.சி. போலிசாரால் சுமத்தப்பட்ட பொய் வழக்காகும். நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்ற குறுக்கு விசாரணையில் புகார்தாரார் அல்போன்சா சாட்சி அளித்ததின் படி பாஸ்கர் ஆகிய என்னை சம்பவத்தன்று (04.03.2009) என்னை சந்திக்கவில்லை என்றும், நான் பணம் கேட்கவில்லை என்றும் எந்த காலக்கட்டத்திலும் கையூட்டு பணம் கேட்கவில்லை என்பதையும் நீதிபதி முன்பு கூறியுள்ளார். தங்களுக்கு தேவைப்படும் பட்சத்தில் அந்த குறுக்கு விசாரணை நகலை தங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்க தயாராக உள்ளேன் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மண்டலம்-8ல் பணிபுரியும் திரு.ஜே.கே. பாலாஜி, உதவியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 8 அவர்களின் உதவியுடன் மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கும் பணியை நான் மேற்கொள்ளவில்லை என்று ஏற்கனவே தெரிவித்து இருந்தேன் இதற்கும் எனக்கும் எந்தவித ஈடுபாடும் கிடையாது என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தற்போது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் நீதிவிசாரணைக்கு குந்தகம் விளைவிக்கும் என்பதால் மேலும் விவரிக்க இயலாது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாணை எண். 105, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் 01.08.2019 நாளிட்ட அரசாணையில் அரசு பணியாளர் ஒருவர் மீது கையூட்டு பெற்றதாக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் குற்றங்கள் நிரூபணமாகும் பட்சத்தில் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி சம்பந்தப்பட்ட அலுவலரை பணியறவு அல்லது பணிநீக்கம் வழங்கலாம் எனவும் மற்ற தண்டனைகள் வழங்கும் பட்சத்தில் அதற்கான குறிப்பிட்ட காரணங்களை தெரிவித்து இறுதி ஆணை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.ஆர்.பாஸ்கர், உதவியாளர், சட்டக்குழுமம் அவர்கள் மீது துறை ரீதியாக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அவற்றிற்கு தனியர் அளித்த விளக்கங்கள், விசாரணை அலுவலர் அறிக்கை மற்றும் தனியரின் கூடுதல் விளக்கம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. தனியர் சமர்ப்பித்த விளக்கங்கள் ஏற்கதக்கதாக இல்லை. மேலும், விசாரணை அலுவலர் தனது விசாரணை அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபணமாகிறது என்ற அறிக்கையை ஏற்று தனியர் 21 ஆண்டுகள் சென்னை மாநகராட்சியில் பணியாற்றியுள்ளதை கருத்தில் கொண்டும், தனியர் ஓய்வு பெற இன்னும் ஐந்து மாதங்களே உள்ள நிலையில் தனியர் மீது தொடரப்பட்டுள்ள துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையில் தண்டனையாக தனியரை பெருநகர சென்னை மாநகராட்சி பணியிலிருந்து கட்டாய ஓய்வு (Compulsory Retirement) அளித்தும், மற்றும் தமிழ்நாடு ஓய்வூதிய விதி 39ன்படி Gratuity at the rate not less than 2/3rds and not more than full compensation gratuity என வழங்கவும், தற்காலிக பணிநீக்க காலத்தினை ஊதியமில்லா விடுப்பாக பாவித்தும் ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை தனியருக்கு 04.03.2020 அன்று சார்வு செய்யப்பட்டது. தனியர் தனக்கு வழங்கப்பட்ட அதிகபட்ச தண்டனையிலிருந்து விலக்கு அளிக்க கோரி சிறப்பு அதிகாரி, / ஆணையர் அவர்களுக்கு 04.05.2020 நாளிட்ட மனுவினை அளித்துள்ளார். அதன்விவரம் கீழ்வருமாறு அளிக்கப்படுகிறது.

தன் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினால் யூகத்தின் அடிப்படையில் உண்மைத்தன்மை ஆராயாமல் தொடரப்பட்ட பொய் வழக்கின் காரணமாக கடந்த 04.03.2009 முதல் பணிநீக்கத்தில் வைக்கப்பட்டிருந்தேன் . தனது வழக்கின் உண்மைத் தன்மை பற்றிய விவரமறிய தன் மீது ஊழல் தடுப்பு பிரிவினரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அடிப்படையில் வழக்கு தொடர உயர்திரு ஆணையர் அவர்களால் Prosecution அனுமதிக்கப்பட்டு நீதிமன்றத்தில் உரிய சாட்சிகளிடம் விசாரணை நடந்து வந்தது. நீதி பேராணையின் மூலம் சிறப்பு நீதிமன்றத்தில் தான் நிரபராதி என நிரூபிக்கப்பட்டதாகவும், நீதிபேராணை வழங்கப்பட்டு ஓராண்டிற்கு மேலாகியும் தன்னை பணியில் சேர்க்கவில்லை. தன் மீது நிர்வாக ரீதியாக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் காவல் துறையால் சுமத்தப்பட்ட அதே குற்றச்சாட்டின் அடிப்படையில் விசாரணை அலுவலர் நீதிக்கு மாறாக தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிருபணமாகிறது என தெரிவித்து உயர்திரு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி தனக்கு வழக்கு நடைப்பெற்ற காலத்திற்கான நாட்களை ஊதியமில்லா விடுப்பாக பாவித்து தனக்கு வருகின்ற 31.07.2020 முதல் வரவேண்டிய ஓய்வு பெற வேண்டிய நிலையில் இருந்த என்னை நீதிபேராண்மைக்கு மாறாக 04.03.2020 முதல் கட்டாய ஓய்வில் செல்ல ஆணையரால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதனால் தானும் தன் குடும்பமும் மிகுந்த மனவேதனைக்கு உள்ளாகி எவ்வித பணப்பயன்களும் பெற இயலாமல் மிகவும் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண். இ5/21631/2020 &**
**ச.கு.ந.க.எண்.சகு1/1351/2009**

தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட நாள் 04.03.2009 முதல் 04.03.2020 வரைஊதியமில்லா விடுப்பாகவும் கட்டாய ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்ட நான், 10 ஆண்டிற்கும் மேலாக உண்மைத்தன்மை அறியும் நிலை ஏற்பட்டது. இதுவே தனக்கு நீதிக்காக அளிக்கப்பட்ட மிகப்பெரிய தண்டனையாகும்.

பணி நீக்கம் செய்யப்பட்ட காலத்தின் அடிப்படையில் சம்பளம் ஊதியமில்லா விடுப்பாக ஆணையிடப்பட்டது தனக்கு மிகவும் இழப்பாகும். வருடாந்திர ஊதிய உயர்வு கிடைக்கப்பெறாததால் நான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். மேலும் தனது பணிக்கொடையில் மூன்றில் 1 பாகம் பிடித்தம் செய்ய ஆணையிடப்பட்டது தனக்கு மிகவும் பேரிழப்பாகும்.

எனவே, ஐயா அவர்கள் தன்னுடைய மேல்முறையீட்டு விளக்கத்தினை பரிசீலித்து/ ஆராய்ந்து நீதிமன்ற பேராணையின்படி, உண்மைத்தன்மை அடிப்படையில் அதன் மீது தொடரப்பட்ட தண்டனைகளிலிருந்து தன்னை விடுவித்தும் தனக்கு வழங்கப்பட்ட மிக அதிகபட்ச தண்டனையிலிருந்து விலக்கு அளிக்க ஆவண செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்வலுவலக 06.08.2020 மற்றும் 29.08.2020 நாளிட்ட கடிதங்களில், தனியர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையிலிருந்து விலக்கு அளிக்க கோரி ஆணையர் / சிறப்பு அதிகாரி அவர்களுக்கு அளித்த மேல்முறையீட்டு மனு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு பிறகு (61 நாட்கள் ) அளித்துள்ளதால், காலதாமதத்திற்கான காரணம் தனியரிடம் இருந்து பெற்று தனியர் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பின் அவற்றை சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 17 (iii) ன்படி தனியரின் விளக்கத்தினை ஏற்று அவற்றினை சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் குறிப்பில் விதிகளின்படி உட்படுத்தி திருத்திய குறிப்பினை சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

முதுநிலை சட்ட அலுவலர் அவர்கள் சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த 30.09.2020 நாளிட்ட குறிப்பில், சென்னையில் கொரோனா COVID 19 காரணமாக ஊரடங்கு அமலில் இருந்ததால் தனியர் பலமுறை முயற்சித்தும் அலுவலகத்திற்கு வர இயலவில்லை எனவும், அதனால் மேல்முறையீட்டு கடிதம் ஒருநாள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டதாகவும், இந்த காலதாமதத்தின் காரணத்தை ஏற்றுக்கொண்டு தனது மேல்முறையீட்டு மனுவினை ஏற்று தனக்கு வழங்கப்பட்ட தண்டனையிலிருந்து விலக்கு அளிக்க தனியர் தன்னுடைய 16.09.2020 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளதால் சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 17 (iii)ல் *It is not preferred within two months after the date on which the appellant was informed of the order appealed against and no reasonable cause is shown for delay* என குறிப்பிட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் தனியர் காலதாமதத்திற்கான மேற்கண்ட விளக்கம் அளித்துள்ளதாக முதுநிலை சட்ட அலுவலர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, திரு.ஆர்.பாஸ்கர், உதவியாளர், சட்டக்குழுமம் (கட்டாய ஓய்வு) அவர்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பயனாளியான திருமதி.ஆர்.அல்போன்சா என்கிற நிர்மலா அவர்களுக்கு திருமண நிதியுதவி ரூ.15000/க்கான காசோலையினை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதி இல்லாமல் முறைகேடாக காசோலையினை பெற்று அலுவலக விதிகளுக்கு மாறாக தனியரிடம் வழங்குவதற்கு ரூ.5000/- கையூட்டு பெற்றது தொடர்பான குற்றவியல் நடவடிக்கையில் சிறப்பு நீதிமன்றம் 30.10.2018 நாளிட்ட தீர்ப்பில் தனியரை குற்றமற்றவர் என தீர்ப்பு வழங்கியதை தொடர்ந்து துறை ரீதியாக தனியர் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகியதை தொடர்ந்து ஆணையர் அவர்கள் தனியருக்கு தண்டனையாக பெருநகர சென்னை மாநகராட்சி

<u>பொ.து.ந.க.எண். இ5 /21631 / 2020 &</u>

<u>ச.கு.ந.க.எண்.சகு1/1351/2009</u>

பணியிலிருந்து கட்டாய ஓய்வு *(Compulsory Retirement)* அளித்து மற்றும் தமிழ்நாடு ஓய்வூதிய விதி *39*ன்படி *Gratuity at the rate not less than 2/3rds and not more than full compensation gratuity* என வழங்கவும் தற்காலிக பணிநீக்க காலத்தினை ஊதியமில்லா விடுப்பாக பாவித்தும் வழங்கப்பட்ட ஆணையிலிருந்து விலக்கு அளிக்க கோரி சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு அளித்த மேல்முறையீட்டு மனுவின் மீது சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் உரிய ஆணை வேண்டி சமர்ப்பித்த ஆணையரது 05.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"The earlier order is confirmed as there are no new grounds" என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணைவழங்கப்பட்டது".**

********

**பொ.து.து.ந.க.எண். *B1 /3370/2021***

**தீர்மானஎண்.460/2021** **நாள்: 06-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகதாரத்துறை - கொரோனா 2ம் அலை தீவீரமாகிவரும் நிலையில் - ஆக்ஸிஜன் பற்றாக்குறை காரணமாக தனியார் நிறுவனமான Spice Health Care Pvt.Ltd நிறுவனத்திடமிருந்து 975 யூனிட் Oxygen Concentrators (10 LPM Flow capacity) கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி மற்றும் கொள்முதல் செய்ய அனுமதி.**

கடந்த மார்ச் *2020* முதல் உலகம் முழுவதும் கொரோனா தொற்று வைரஸ் தொற்றால் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், மத்திய அரசும் தமிழக அரசும் கொரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க போதிய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியும், நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அன்றாடம் கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்க வேண்டி *Screening Center* மற்றும் *Covid Care Center* -கள் ஆகியவை செயல்படுத்தி வரப்படுகின்றது.

தமிழகத்தில், தற்போது கொரோனா தொற்றின் *2*ம் அலை மிக வேகமாக பரவி வருகிறது. இந் நோய் தொற்று கடுமையாக பாதிப்பவர்களுக்கு ஆக்ஸிஜன் வழங்குவது மிகவும் அவசியமாகிறது. கொரோனா வைரஸ் தொற்றின் அதிக அளவிலான மக்களை பாதித்துள்ள நிலையில் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் கொரோனா சிகிச்சை மையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் வசதிகளுடன் கூடிய படுக்கைகள் கூடுதலாக தேவைப்படுகின்றது.. தற்போது இதர மாநிலங்களில் கொரோனா நோயாளிகளுக்கு ஆக்ஸிஜன் வழங்குவதில் குறைபாடு ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தொற்று பாதிப்புள்ளானவர்களுக்கு தேவைப்படும் சமயத்தில், உடனுக்குடன் ஆக்ஸிஜன் வசதி தரும் பொருட்டு போதுமான அளவில் ஆக்ஸிஜன் கையிருப்பு வைத்திருப்பது அவசியமாகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள *Covid Care Center* மற்றும் மருத்துவமனைகளில் தற்போதுள்ள ஆக்ஸிஜன் கட்டமைப்புடன் கூடிய படுக்கை வசதிகள், எதிர்வரும் நாட்களில் கொரோனா தொற்று பரவலின் வீரியம் அதிகரிக்கும் பட்சத்தில் அதனை எதிர் கொள்ள போதுமான அளவிற்கு கட்டமைப்பு வசதிகள் அதிகப்படுத்தப்படல் வேண்டும். தற்போதுள்ள காலகட்டத்தில் இவ்விதமான கட்டமைப்புடன் கூடிய படுக்கை வசதிகள் ஏற்படுத்திட காலதாமதம் ஏற்படும். ஆகவே, கொரோனா பாதித்த ஆக்ஸிஜன் தேவைப்படுகின்ற முதல் நிலை நோயாளிகளுக்கு *Oxygen Concentrators* கருவி மூலம் போதுமான அளவிற்கு ஆக்ஸிஜன் வசதி ஏற்படுத்தி தரலாம். இதன் மூலம் நோயின் தாக்கத்தினை குறைத்து தீவிர சிகிச்சைக்கு செல்வதை தவிர்க்கலாம்.

இந்நிலையில், அரசு முதன்மை செயலர், தொழில் துறை அவர்களிடமிருந்து ஆணையர் அவர்களுக்கு பெறப்பட்ட *03.05.2021* நாளிட்ட மின்னஞ்சலில், திருவாளர்கள் *Spice Health Care Pvt. Ltd.*, நிறுவனத்தார் தோராயமாக *2000* எண்ணிக்கையில் *Oxygen Concentrators* வழங்க முன் வந்துள்ளதாகவும், அதன் ஒன்றின் தோராய மதிப்பீடு ரூ.*91,500 + GST* எனவும், இதில் *50* சதவீதம் தொகை முன்பணமாக வழங்க வேண்டும் எனவும் தெரிவித்து உடனடியாக *2000* அல்லது கூடுதலாக *Oxygen Concentrators* கொள்முதல் செய்ய பணியாணை வழங்குமாறும், அதற்கு தேவையான தொகையினை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்துள்ளார். மேற்கண்ட நிகழ்வுகளின் அரசு முதன்மை செயலர், தொழில் துறை அவர்களின் கருத்து ஏற்புடையதாக உள்ளது.

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி *1998*ல் *16(a)*ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும் இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதால், கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக்கென விலைப்புள்ளி கோராமல் நேரடியாக திருவாளர்கள் *Spice Health Care Pvt. Ltd.*, நிறுவனத்தாரிடமிருந்து தேவையான அளவிற்கு *Oxygen Concentrators* கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**பொ.து.து.ந.க.எண். B1 /3370/2021**

இதனை தொடர்ந்து திருவாளர்கள் *Spice Health Care Pvt. Ltd.*, நிறுவனத்தார் *Oxygen Concentrators (10LPM Flow capacity)* வழங்க அளித்துள்ள விலைப்புள்ளி அடிப்படையில் *975* எண்ணிக்கையில் *Oxygen Concentrators (10LPM Flow capacity)* கொள்முதல் செய்ய தோராய மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| Sl. No. | Product Name | Quantity Nos. | Unit Base Price Rs. | GST 12%Rs. | Unit price (Incl. GST.)Rs. | Total Amount (Incl. GST) Rs. |
|---|---|---|---|---|---|---|
| 01. | Oxygen Concentrators (10 Lt.) | 975 | 91,500 | 10,980 | 102480 | 9,99,18,000 |

மேற்கண்ட அட்டவணையின் படி ஒரு எண்ணிக்கையிலான *Oxygen Concentrators (10LPM Flow capacity)* கொள்முதல் செய்ய ரூ.*1,02,480/- (Incl. GST @ 12%)* வீதம் *975* எண்ணிக்கையிலான *Oxygen Concentrators (10LPM Flow capacity)* வழங்க தெரிவித்துள்ள விலைப்புள்ளி தோராயமாக ரூ.*9,99,18,000/-* ஆகும்.

கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவைப்படும் சமயத்தில் உடனுக்குடன் ஆக்ஸிஜன் வழங்க வேண்டியுள்ள நிலையில் திருவாளர்கள் *Spice Health Care Pvt. Ltd.*, நிறுவனத்தாரிடம் *975* எண்ணிக்கையில் *Oxygen Concentrators (10LPM Flow capacity)* ரூ*9,99,18,000/-* தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், திருவாளர்கள் *Spice Health Care Pvt. Ltd.*, நிறுவனத்தார் கோரிய படி மொத்த தொகையில் *50%* தொகையான ரூ.*4,99,59,000/.*ஐ முன்பணமாக வழங்க வேண்டப்படுகிறது.

இதற்கான செலவினத்தினை பொது சுகாதாரத் துறையில் கொரோனா பணிக்கென கொள்முதல் செய்யப்படும் பொருட்களுக்கு வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் *230-70.12.01* (கொள்முதல்) என்ற தலைப்பின் கீழ் தேவையான நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

*01.* கொரோனா தொற்றின் *2*ம் அலை மிக வேகமாக பரவி வரும் நிலையில், இந் நோய் தொற்று கடுமையாக பாதிப்பவர்களுக்கு ஆக்ஸிஜன் வழங்குவது மிகவும் அவசியமாகியுள்ளதால், உடனடி தேவைக்காக *975* எண்ணிக்கையில் *Oxygen Concentrators (10LPM Flow capacity)* ரூ-*9,99,18,000/- (Incl. GST @ 12%)* தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

*02.* திருவாளர்கள் *Spice Health Care Pvt. Ltd.*, நிறுவனத்தாரிடம் ஒரு எண்ணிக்கையிலான *Oxygen Concentrators (10LPM Flow capacity)* கொள்முதல் செய்ய ரூ.*1,02,480/- (Incl. GST @ 12%)* வீதம் *975* எண்ணிக்கையிலான *Oxygen Concentrators (10LPM Flow capacity)* ரூ.*9,99,18,000/- (Incl. GST @ 12%)* (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய ஆணை வேண்டியும்,

*03.* இனம் *2* ஏற்பின் திருவாளர்கள் *Spice Health Care Pvt. Ltd.*, நிறுவனத்தாரிடம் *975* எண்ணிக்கையிலான *Oxygen Concentrators (10LPM Flow capacity)* கொள்முதல் செய்ய பணி ஆணை வழங்க ஆணை வேண்டியும்,

*04.* பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி *1998*ல் *16(a)*ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும் இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதால், கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக்கென விலைப்புள்ளி கோராமல் நேரடியாக கொள்முதல் மேற்கொள்வதற்கும்,

*05.* அவசரம் மற்றும் அவசியம் கருதி இக்கொள்முதல் மேற்கொள்வதால், பாதுகாப்பு தொகை பெற்றுக் கொண்டு உடன்படிக்கை மேற்கொள்வதில் இருந்து விலக்கு அளிக்கவும்,

**பொ.து.து.ந.க.எண். B1 /3370/2021**

06. திருவாளர்கள் Spice Health Care Pvt. Ltd., நிறுவனத்தார், கோரியுள்ளவாறு மொத்த தொகையில் 50% தொகையினை முன்பணமாக வழங்க ஆணை வேண்டியும்,

07. இக்கொள்முதலுக்கான செலவினத்தினை பொது சுகாதாரத் துறையில் கொரோனா பணிக்கென கொள்முதல் செய்யப்படும் பொருட்களுக்கு வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70.12.01 (கொள்முதல்) என்ற தலைப்பின் கீழ் தேவையான நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண்.இ9/12608/2021**

**தீர்மானஎண்.461/2021** **நாள்:06-05-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திருமதி.ஆதிலட்சுமி, தூய்மை பணியாளர், பணி எண்.698751, கோட்டம்-52, மண்டலம்-5 அவர்கள் 04.05.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-52, பகுதி-12ல் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.ஆதிலட்சுமி என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியில் 13.10.1990 முதல் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருவதாகவும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தொடர்ந்து பணிபுரிய இயலாததால், தனக்கு தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்குமாறு சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு 04.02.2021 அன்று மனு அளித்துள்ளார்.

தனியரின் பணிப்பதிவேட்டின்படி திருமதி.ஆதிலட்சுமி, தூய்மை பணியாளர், பணி எண்.698751, கோட்டம்-52, பகுதி-12 என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை பணியாளராக 13.10.1990 அன்று பணியமர்த்தப்பட்டு பணியாற்றி வரும் தனியருக்கு அப்பதவியில் 13.10.1990 முதல் பணிவரன்முறைப்படுத்தியும், 13.10.1991 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியருக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

செயலாளர், சென்னை மாநகராட்சி சிப்பந்திகள் கூட்டுறவு சங்கம் லிட், சிந்தாதிரிப்பேட்டை அவர்களின் 08.02.2021 நாளிட்ட கடிதத்தில், தனியருக்கு சங்கத்தில் ரூ.5,86,620/- (ரூபாய் ஐந்து இலட்சத்து எண்பத்தி ஆறாயிரத்து அறுநூற்று இருபது மட்டும்) நிலுவைத்தொகை உள்ளது என சான்றளிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை துணை கண்காணிப்பாளர் / விழிப்பு அலுவலர் அவர்களின் 30.04.2021 நாளிட்ட கடிதத்தில், அன்னார் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களின் 30.04.2021 நாளிட்ட குறிப்பில், திருமதி.ஆதிலட்சுமி, தூய்மை பணியாளர் என்பவர் மீது தணிக்கைத்தடை ஏதும் நிலுவை இல்லை எனவும், முன்பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை எனவும், சென்னை மாநகராட்சி சிப்பந்திகள் கூட்டுறவு சங்கம் லிட், சிந்தாதிரிப்பேட்டை அவர்களின் 08.02.2021 நாளிட்ட கடிதத்தில், தனியருக்கு சங்கத்தில் ரூ.5,86,620/- (ரூபாய் ஐந்து இலட்சத்து எண்பத்தி ஆறாயிரத்து அறுநூற்று இருபது மட்டும்) நிலுவைத்தொகை உள்ளது என தெரிவித்து, தனியரை 04.05.2021 அன்று பிற்பகல் முதல் பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் இருந்து தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்க ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி கோப்பு வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 04.05.2021 நாளிட்ட கடிதத்தின்படியும், மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களின் பரிந்துரையின்படியும், திருமதி.ஆதிலட்சுமி, தூய்மை பணியாளர், பணி எண்.698751, கோட்டம்-52, பகுதி-12 என்பவரின் 04.02.2021 நாளிட்ட தன்விருப்ப ஓய்வின் மனுவினை ஏற்கப்பட்டு, சென்னை மாநகராட்சி சிப்பந்திகள் கூட்டுறவு சங்கம் லிட், சிந்தாதிரிப்பேட்டை அவர்களின் 08.02.2021 நாளிட்ட கடிதத்தில், தனியருக்கு சங்கத்தில் ரூ.5,86,620/- (ரூபாய் ஐந்து இலட்சத்து எண்பத்தி ஆறாயிரத்து அறுநூற்று இருபது மட்டும்) மற்றும் பண்டிகை கால முன்பண நிலுவை ரூ.8000/- (ரூபாய் எட்டாயிரம் மட்டும்) நிலுவைத் தொகை மற்றும் இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை அவர்களால்

**பொ.து.ந.க.எண்.இ9/12608/2021**

தெரிவிக்கப்படும் தணிக்கைதடை மற்றும் நீண்டகால முன்பண ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் இத்தொகையினை தனியருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திருமதி.ஆதிலட்சுமி, தூய்மை பணியாளர், மண்டலம்-5 அவர்களை 04.05.2021 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு, சிறப்பு அதிகாரி -மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.6வ.து.ந.க.எண்.ஆர்2/824/2020**

**தீர்மானஎண்.462/2021** **நாள்:06-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - வணிக வளாகம் - மண்டலம் - 6, வார்டு 76, ஸ்ட்ரஹான்ஸ் சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகத்தில் காலியாக உள்ள கடை எண்.07 (G7)ஐ சிறப்பு இனமாக மாற்று திறனாளிக்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி.**

மண்டலம் – 6, வார்டு – 76, ஸ்ட்ரஹான்ஸ் சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழைய வணிக வளாகம் சாலை விரிவாக்கத்திற்காக இடிக்கப்பட்டு புதிய வணிக வளாகம் கட்டப்பட்டது. இந்த வணிக வளாகத்தில் உள்ள கடைகளுக்கு சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண். 705/2019, நாள்.13/11/2019ன் படி சதுர அடிக்கு ரூ.30/- என (சேவை வரி தனியே) வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு ஏற்கனவே பழைய வணிக வளாகத்தில் இருந்த ஒதுக்கீடுதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒரு சில கடைகள் அலுவலக பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன. இந்த வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண்.7 150 சதுர அடி கொண்டது காலியாக உள்ளது.

வருவாய் அலுவலர் அவர்களுக்கு சமர்ப்பித்த 22.07.2020 நாளிட்ட மனுவில் எப்.தங்கமணி, எண்.13, ஜி, பிளாக் டோபிகானா அவுசிங் போர்டு, பெரம்பூர் பேரக்ஸ் சாலை, சென்னை 600 012 என்பவர் தான் உடல் ஊனமுற்ற மாற்று திறனாளி பெண் என்றும், தனக்கு ஸ்ட்ரஹான்ஸ் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகத்தில் காலியாக உள்ள ஒரு கடையினை ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுள்ளார். மனுதாரர் தான் ஒரு மாற்று திறனாளி என சான்றளிக்கும் ஆவணங்களை மனுவுடன் சமர்ப்பித்துள்ளார்

மனுதாரர் மாற்றுதிறனாளியாக உள்ளதால் ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி மண்டலம் – 6, வார்டு – 76 ஸ்ட்ரஹான்ஸ் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகத்தில் தரைதளத்தில் காலியாக உள்ள 150 சதுர அடி கொண்ட கடை எண். 07, (G7) சதுர அடிக்கு ரூ.30/- + 18% சேவை வரி வாடகை நிர்ணயம் செய்தும் 12 மாத வாடகையை முன்பணமாக செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் மனுதாரர் எப்.தங்கமணி, என்பவருக்கு ஒதுக்கீடு செய்ய சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 06.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"கடை எண்.07ஐ ஒதுக்கீடு செய்ய, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**<u>ம.அ.1.ந.க.எண்.பி1/1391/2021</u>**

**தீர்மான எண்.463/2021** **நாள்:07-05-2021**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 1 அலுவலக அத்தியாவசிய அவசர பணிகள் - தினக்கூலி அடிப்படையில் 15 எண்ணிக்கையிலான புள்ளி விவர குறிப்பாளர்கள் (Data Entry Operator) 01.05.2021 முதல் 31.10.2021 வரை ஆறு மாதகாலத்திற்கு பணி அமர்த்தி பணிகளை மேற்கொள்ள அனுமதி.</u>**

மண்டலம் 1ல் வார்டு எண் 1 முதல் 14 வரையிலான கோட்டங்கள், பகுதி அலுவலகங்கள் 1,2,3 மற்றும் மண்டல அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் (உதவியாளர்கள்) பணியமர்த்தப்படாததால் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் தற்காலிக பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது 23.02.2021ல் ENVRO Solution தனியார் வசம் துப்புரவு பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணிபுரிந்து வந்த அனைத்து பணியாளர்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் மீண்டும் இப்பணியாளர்களை பணியமர்த்தி அலுவலக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டியது அவசியமாகிறது.

மண்டலம்-1 கோட்டம் 1 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் ஒப்ப பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்தல், கணினியில் பதிவேற்றம் செய்தல், நகரமைப்பு பிரிவில் கட்டிடம் தொடர்பான பதிவுகள் (Building plan permission) மழை மற்றும் புயல் போன்ற பேரிடர் காலங்களில் தினசரி அறிக்கைகள் அனுப்புதல், ஆய்வு கூட்டங்களுக்கு அறிக்கை தயாரித்தல் மற்றும் கொரோனா தொற்று நோய் (Covid-19/ 2nd Wave) இரண்டாவது அலை தொடர்பான தடுப்பு பணிகள் தொய்வு இல்லாமல் இப்பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, அலுவலகத்தில் மற்றும் பகுதி அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மண்டலம்1ல் பகுதி அலுவலகங்கள் 1,2 (ம) 3க்கு, மற்றும் மண்டல அலுவலகத்தில் பணிபுரிய 01.03.2021 முதல் 30.04.2021 வரை 61 நாட்களுக்கு 10 தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்கள் (Data Entry Operators) சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல்முறை ஆணையில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.448/- என (வ.எண் 85) நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 18.03.2021 நாளிட்ட நிர்வாக அனுமதி பெற்று பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் (Covid-19/ 2nd Wave) இரண்டாவது அலை மிக அதிகமாக பரவுவதால் கூடுதலாக 5 எண்ணிக்கையிலான புள்ளி விவர குறிப்பாளர்கள் தேவைப்படுகிறது. அதன்பொருட்டு மண்டலம்1, பகுதி 1,2 (ம) 3, வார்டு அலுவலகங்கள் மற்றும் கோட்டம் 1 முதல் 14 வரையிலான பகுதிகளுக்கு மொத்தம் 15 எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்கள் (Data Entry Operator) தேவைப்படுகிறது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, 2021 ஆம் ஆண்டு பகுதி அலுவலகங்கள் 1, 2 (ம) 3க்கு, மற்றும் மண்டல அலுவலகத்தில் 15 எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்கள் (Data Entry Operators) பணியாளர்கள் 01.05.2021 முதல் 31.10.2021 வரை 184 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.448/- வீதம் (ரூ.448 X 15 X 184 = ரூ12,36,480/-) ரூ 1236480/- (ரூபாய்

பன்னிரெண்டு இலட்சத்து முப்பத்தி ஆறாயிரத்து நானூற்று எண்பது மட்டும்) பணி அமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும்,

2) இப்பணிக்கு பிரிவு எண் 20-21-06, கணக்கு குறியீட்டு எண் 220-110-314ல் ரூ 1236480/க்கு பட்டி தீர்வு செய்திட ஆணை வேண்டியும்,
3) இப்பணிக்கு நிதிஆலோசகர் வாயிலாக கூடுதல் நிதி ஒதுக்கீடு வேண்டியும்,
4) மண்டலம் 1ல், 01.05.2021 முதல் 31.10.2021 வரை பணிகள் மேற்கொள்ள ஆணை வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 06.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ.7ந.க.எண்.எச்2 / 2450 /2019**

**தீர்மானஎண்.464/2021** **நாள்:07-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 7 அம்பத்தூர் கோட்டம் 79 முதல் 93 வரையுள்ள பகுதிகளில் சுகாதார பணிக்கான தொழிலாளர்களை 06.05.2021 முதல் ஓராண்டிற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் குழக்கள் அமைத்து அதன் மூலம் தொழிலாளர்களை சுகாதார பணியில் ஈடுபடுத்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7 அம்பத்தூர் கோட்டம் 79 முதல் 93 வரையுள்ள பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர் தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுப்புழு மற்றும் கொசு மருந்து தெளிக்கப்பட்டு, கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, யானைகால் மற்றும் மூளை காய்ச்சல் போன்ற நோய்கள் கட்டுப்படுத்த கொசு மருந்து தெளிக்கவும், புகைப்பரப்பும் பணி மேற்கொள்ளவும், மேற்படி மண்டலம்-7ல் நிரந்தர தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை ஈடுபடுத்தப்பட்டது. இந்த ஒப்பந்த பணி 03.05.2019 அன்று முடிந்த நிலையில், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 16.05.2018 நாளிட்ட செயல் முறை ஆணை எண் C2/7393/2018 உறுதி செய்யப்பட்ட ஒரு தொழிலாளியின் தினக்கூலி ரூ.362/- என்ற அடிப்படையில் மதிப்பீடு கணக்கிடப்பட்டதன் பேரில் சிறப்பு அலுவலர் (மன்றம்) மற்றும் ஆணையர் அவர்களின் 04.05.2019 நாளிட்ட குறிப்பில் ஒரு வருடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

மேலும், ஆணையர் அவர்களின் 04.05.2020 நாளிட்ட குறிப்பில், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி வ.எண்.43 தினக்கூலி ரூ.362/- லிருந்து ரூ.379/-என ஊயர்த்தி வழங்கியதை 07.05.2019 முதல் ஓராண்டிற்கு செயல்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

07.05.2019 முதல் 06.05.2021 வரை ஓரண்டுக்காலம் முடிவடைந்த நிலையில் 07.05.2020 முதல் மேலும் ஓர் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி உயர்த்தி ரூ.379/- லிருந்து ரூ. 391/- வழங்கியதை செயல்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே 06.05.2021 முதல் ஓர் ஆண்டிற்கு சிறப்பு அதிகாரி அவர்களின் ஒப்புதலுக்கு சமப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | மண்டலம் | கூடுதலாக தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை | ஒப்பந்தம் முடிவுறும் காலம் | தினக் கூலி | மொத்த நாட்கள் | மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 220 | 06,05.2021 | ரூ.391/- | 365 | 3,13,97,300/- |

எனவே,

1. மண்டலம்-7க்கு அனுமதி அளிக்கப்பட 220 பணியாளர்கள் மண்டலம்-7க்கு சுகாதாரத்துறைக்கு (தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் NULM) ஓராண்டுக்கு பணியமர்த்தவும்,
2. தொழிலாளர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.391/- ஐ வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,

<u>ம.அ.7.ந.க.எண்.எச்2 / 2450 /2019</u>

3. மண்டல அலுவலர்-7 அவர்கள் ஒப்பந்த தொழிலாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் குழுக்கள் அமைக்க ஆணையர் / சிறப்பு அதிகாரி அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று பணியை மேற்கொள்ளவும்,

4. மன்ற தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள வழிக்காட்டுதல்களின் படி மேற்சொன்ன 220 பணியாளர்கள் NULM மூலம் பதினைந்து குழுக்களாக பிரித்து பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 06.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ.11.பொ.சு.து.நக.எண்.எச்1/268/2021**

**தீர்மானஎண்.465/2021** **நாள்:07-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 11ல் - கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையில் களப்பணியாளர்களின் பணிக்காலம் 04.04.2020 முதல் 31.01.2021 முடிவடைந்தது. இரண்டாம் கட்ட கொரோனோ தொற்று மீண்டும் பரவி வரும் நிலையில் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 09.04.2021 முதல் 07.07.2021 வரை 90 நாட்களுக்கு 875 களப்பணியாளர்களை தற்காலிகமாக பணி நியமனம் செய்து - ஊதியம் வழங்க - அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு 143 முதல் 155 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சுத்திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும், கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு பணிக்காகவும் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட களப்பணியாளர்களின் பணிக்காலம் 04.04.2020 முதல் 31.01.2021 வரை முடைவடைந்தது. மீண்டும் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்கண்ட பணிகளுடன் கூடுதலாக கொரோனா தடுப்பூசி செலுத்த வேண்டியவர்கள் மற்றும் செலுத்தியவர்கள் குறித்த கணக்கெடுப்பு மேற்கொண்டு தகுதியான அனைவரையும் தடுப்பூசி செலுத்த வலியுறுத்தும் பணிக்காகவும், சளி பரிசோதனை மேற்கொள்ளும் பணிக்காகவும் 875 பணியாளர்களை (Survey Worker) 09.04.2021 முதல் 07.07.2021 வரை மூன்று மாத காலத்திற்கு (90 நாட்களுக்கு) மட்டும் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்கண்டவாறு.

| S. No (1) | Division (2) | NULM sector (3) | FSW Needed (NULM Sector x 6 days) (4) 3x6 | Supervisor (5) | Total (6) |
|---|---|---|---|---|---|
| 1 | 143 | 14 | 84 | 4 | 88 |
| 2 | 144 | 9 | 54 | 3 | 57 |
| 3 | 145 | 12 | 72 | 3 | 75 |
| 4 | 146 | 11 | 66 | 3 | 69 |
| 5 | 147 | 13 | 78 | 4 | 82 |
| 6 | 148 | 12 | 72 | 4 | 76 |
| 7 | 149 | 10 | 60 | 3 | 63 |
| 8 | 150 | 11 | 66 | 3 | 69 |
| 9 | 151 | 7 | 42 | 2 | 44 |
| 10 | 152 | 11 | 66 | 3 | 69 |
| 11 | 153 | 9 | 54 | 3 | 57 |
| 12 | 154 | 7 | 42 | 2 | 44 |
| 13 | 155 | 13 | 78 | 4 | 82 |
| **Total** | | **139** | **834** | **41** | **875** |

ஆணையர் அவர்களின் வாய்மொழி உத்தரவின்படி, கொரோனா தடுப்பு களப்பணியாளர்கள் 875 நபர்களை 09.04.2021 முதல் 07.07.2021 வரை மூன்று மாத காலத்திற்கு (90 நாட்களுக்கு) மட்டும் தற்காலிகமாக ஒரு நாளைக்கு ரூ.391/- ஊதியம் வீதம் பணியமர்த்திட சிறப்பு அதிகாரி அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.'

எனவே,

1. மண்டலம் 11ல் கொறொனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு 143 முதல் 155 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சுத்திணறல் இது போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கெடுக்கவும், கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் சுய விவரம் குறித்த கணக்கெடுக்கவும், கொரோனா தடுப்பூசி பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் சளி பரிசோதனை மேற்கொள்ளும் பணிகளுக்காகவும் 875 பணியாளர்களை (Survey Worker) 09.04.2021 முதல் 07.07.2021 வரை மூன்று மாத காலத்திற்கு (90 நாட்களுக்கு) பணியமர்த்தி பணி மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,

**ம.அ.11.பொ.சு.து.ந.க.எண்.எச்1/268 / 2021**

2. மேற்கண்ட 875 பணியாளர்களுக்கு (Survey Workers) ஊதியமாக ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.391/- வீதம், 875 பணியாளர்களுக்கு 90 நாட்களுக்கு 875 x ரூ.391 x 90 நாட்கள் = ரூ. 3,07,91,250/- (ரூபாய் மூன்று கோடியே ஏழு இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) வழங்கவும்,
3. இப்பணிக்கு 2% பிணைவைப்புத் தொகை மற்றும் உடன்படிக்கையில் இருந்து விலக்கு அளிக்கவும்,
4. இப்பணிக்கான செலவினத்தை கணக்கு குறியீட்டு எண்.20-21-07, கணக்கு தலைப்பு எண். 230-70-12-03 என்ற தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஊதியம் வழங்கிடவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 06.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**ம.அ.13.பொ.சு.து.ந.க.எண்.எச்1/0428/2021**

**தீர்மானஎண்.466/2021** **நாள்:07-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -13ல் - கொரோனா வைரஸ் - தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட 600 களப்பணியாளர்களின் பணிக்காலம் 31.01.2021 முடைவடைந்தது - மீண்டும் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் அறிவுறுத்தலின் படி 07.04.2021 முதல் 90 நாட்களுக்கு 1472 களப்பணியாளர்களை பணியமர்வு செய்து ஊதியம் வழங்க ஒப்புதல் மற்றும் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 170 முதல் 182 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் கோவிட் தடுப்பூசி விவரங்கள் கணக்கெடுத்து தடுப்பூசி வழங்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட களப்பணியாளர்கள் மூலம் 04.04.2020 முதல் மகிளர் சுய உதவிக்குழுக்கள் (SHG) மற்றும் தன்னார்வலர்கள் கொண்டு மேற்கொண்ட பணியானது கடந்த 31.01..2021 அன்று முடைவடைந்தது. மீண்டும் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின் படி மகிளர் சுய உதவிக்குழுக்கள் (SHG) மற்றும் தன்னார்வலர்கள் மூலம் 600 களப்பணியாளர்களை (Survey Worker) கொண்டு கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டு கொரோனா வைரஸ் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 08.04.2021 நாளிட்ட செயல்முறை ஆணையில், பெருநகர சென்னை மாநகராட்சியில், கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்யும் களப் பணியாளர்களுக்கு (Survey Workers) நாளொன்றிக்கு ஊதியமாக சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச தினக்கூலி அடிப்படையில் ரூ.391/- வீதம் 31 நாட்களுக்கு 31 X 391=ரூ.12,121/- வீதம் பணியமர்த்தி பணிமேற்கொள்ள ஆணையர் அவர்களின்அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 13.04.2021 நாளிட்ட ஆய்வுக்கூட்ட அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில், கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கணக்கெடுப்பு செய்ய களப் பணியாளர்களை (Survey Workers) நாளொன்றிக்கு ஊதியமாக தினக்கூலி அடிப்படையில் ரூ.391/. என்ற அடிப்படையில் கடந்த 2020 ஆம் ஆண்டு கொரோனா தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட களப்பணியாளர்களை கொண்டு கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில் மண்டலம்-13ல் வார்டு – 170 முதல் 182 வரை கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்கவும் 07.04.2021 முதல் 90 நாட்களுக்கு மகிளர் சுய உதவிக்குழுக்கள் (SHG) மற்றும் தன்னார்வலர்கள் கொண்டு தற்காலிகமாக களப்பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு மேற்கண்ட பணியானது நடைபெற்று வருகிறது. அதன் விவரம் கீழ்கண்டவாறு.

| S. No | Division | Total |
|---|---|---|
| 1 | 170 | 96 |
| 2 | 171 | 119 |
| 3 | 172 | 89 |
| 4 | 173 | 109 |
| 5 | 174 | 104 |
| 6 | 175 | 91 |
| 7 | 176 | 104 |
| 8 | 177 | 234 |
| 9 | 178 | 91 |
| 10 | 179 | 110 |
| 11 | 180 | 120 |
| 12 | 181 | 110 |
| 13 | 182 | 95 |
| **Total** | | **1472** |

**ம.அ.13.பொ.சு.து.ந.க.எண்.எச்1/0428/ 2021**

மேற்கண்ட அட்டவணையின்படி, இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுறுத்தலின்படி, அவசியம் மற்றும் அவசரம் கருதி மகிளர் சுய உதவிக்குழுக்கள் (SHG) மற்றும் தன்னார்வலர்கள் என 1472 களப் பணியாளர்களை 07.04.2021 முதல் 90 நாட்களுக்கு தற்காலிகமாக ஒரு நாளைக்கு ரூ.391/- வீதம் (ரூபாய் மூந்நூற்றி தொண்ணூற்றி ஒன்று மட்டும்) 90 நாட்களுக்கு பணியமர்த்தி பணி மேற்கொண்டதற்கு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் மற்றும் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-13ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு – 170 முதல் 182 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்க 1472 களப் பணியாளர்களை (Survey Worker) 07.04.2021 முதல் 05.07.2021 வரை மேலும் 90 நாட்களுக்கு பணியமர்த்தி பணி மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட 1472 களப் பணியாளர்களுக்கு (Survey Workers) ஊதியமாக சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்தபட்ட தினக்கூலியாக ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.391/ வீதம், 1472 பணியாளர்களுக்கு 90 நாட்களுக்கு 1472 xரூ.391/- x 90 நாட்கள் = ரூ.5,17,99,680/- (ரூபாய் ஐந்து கோடியே பதினேழு இலட்சத்தி தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து அறநூற்றி எண்பது மட்டும்) ஊதியம் வழங்க அனுமதி வேண்டியும்,
3. இப்பணிக்கான செலவீனத்தை கணக்கு குறியீட்டு எண்.20-21-07, கணக்கு தலைப்பு எண். 230-70-12-03 என்ற தலைப்பில் 2021-2022 ம் நிதியாண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஊதியம் வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,
4. வருகை பதிவேட்டின் அடிப்படையில் மண்டல நல அலுவலர்-13 அவர்களின் ஒப்பம் பெற்று தனியரின் வங்கி கணக்கில் NIFT-ன் மூலம் வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 06.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.1/ந.க.எண்.எச்1/1576/2021**

**தீர்மானஎண்.467/2021** **நாள்:07-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1 (திருவொற்றியூர்) கோட்டம்-1 முதல் 14வரை பகுதிகளில் இரண்டாம் அலை கொரோனா வைரஸ் தாக்குதல் தடுப்பு நடவடிக்கையில் 08.04.2021 முதல் 06.07.2021 வரை (Fever Survey Workers) 374 நபர்கள் மற்றும் மண்டல கொரோனா கட்டுபாட்டு அறையிலும், களப்பணியிலும் அதன் விவரங்களை தொகுத்து வழங்குவதற்கும் 53 நபர்கள் ஆக மொத்தம் 427 நபர்களை இப்பணியில் ஈடுபடுத்தி கொள்ளவும் மற்றும் ஊதியம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், இரண்டாம் அலை கொரோனா வைரஸ் தாக்குதல் அதிகரித்து வருவதால் கொரேனா வைரஸ் தடுப்பு பணிக்காக காய்சல்,சளி,இருமல் தொடர்பான நோய் தொற்று சம்மந்தமான கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை *(Fever Survey Workers)* பணியில் ஈடுபத்தி கொள்ளவும், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ளவாறு ஊதியம் வழங்குமாறு ஆணையர் அவர்களின் *08.04.2021* நாளிட்ட காணொலி கலந்தாய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் *07.07.2020* நாளிட்ட செயல்முறை ஆணையில் வரிசை எண்.*43*ல் தினசரி ஊதியம் ரூ.*391/-* நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது இரண்டாம் அலை கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருவதாலும், அவசர அவசியம் கருதி கோட்டம்-*1* முதல் *14* வரை *08.04.2021* முதல் *06.07.2021* வரை *(Fever Survey Workers) 374* நபர்கள் மற்றும் மண்டல கொரோனா கட்டுபாட்டு அறையிலும், களப்பணியிலும் அதன் விவரங்களை தொகுத்து வழங்குவதற்கும் *53* நபர்கள் ஆக மொத்தம் *427* நபர்களை *90* நாட்களுக்கு தினசரி ஊதியம் ரூ.*391/-* வீதம் இப்பணியில் ஈடுபடுத்தி கொள்ள அட்டவணை கீழ்கண்டவாறு

| S.NO | DIVISION | (Fever Survey Workers) From 08.04.2021 to 06.07.2021 |
|---|---|---|
| 1 | 1 | 26 |
| 2 | 2 | 22 |
| 3 | 3 | 37 |
| 4 | 4 | 26 |
| 5 | 5 | 22 |
| 6 | 6 | 31 |
| 7 | 7 | 32 |
| 8 | 8 | 28 |
| 9 | 9 | 24 |
| 10 | 10 | 26 |
| 11 | 11 | 26 |
| 12 | 12 | 26 |
| 13 | 13 | 24 |
| 14 | 14 | 24 |
| Total | | 374 |

எனவே, மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில்,

| | |
|---|---|
| அ) | மண்டலம்-*1*ல் இரண்டாம் அலை கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக வார்டு*1* முதல் *14* வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சுதிணறல் இதுபோன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்க *374* நபர்கள் *(Fever Survey Workers)* மற்றும் மண்டல கொரோனா கட்டுபாட்டு அறையிலும், களப்பணியிலும் அதன் விவரங்களை தொகுத்து வழங்குவதற்கும் *53* நபர்கள் ஆக மொத்தம் *427* நபர்களை *90* நாட்களுக்கு மட்டும் இப்பணியில் ஈடுபடுத்திகொள்ள அனுமதி வேண்டியும், |

| | |
|---|---|
| ஆ) | மேற்கண்ட 427 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் ஊதியமாக 08.04.2021 முதல் 06.07.2021 வரை 90 நாட்களுக்கு (427 x 391 x 90 = 1,50,26,130/-) (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து இருபத்தாராயிரத்து நூற்று முப்பது மட்டும்) வழங்கவும், |
| இ) | மேற்கண்ட பட்டி தொகை 1,50,26,130/-ஐ கணக்கு தலைப்பு எண் 20-21-07 கணக்கு குறியீட்டு எண் 230-70-12-03ன் கீழ் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளவும், நிர்வாக அனுமதி வேண்டியும், |

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ.12.பொ.சு.து. ந.க. எண் எச்2/2017 /2021**

**தீர்மானஎண்.468 / 2021** **நாள்: 07-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-12ல் கொரோனா வைரஸ் நோய் தொற்று காரணமாக கோ- 156 முதல் 167 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல் சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சுதிணறல் ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கு எடுக்கவும் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 663 தற்காலிக பணியாளர்கள் - 08.04.2021 முதல் 06.07.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை (P1) துறையின் அரசாணை (Ms)எண். 95, நாள்: 13.03.202ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் ( covid 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -12 ல் கோட்டம்-156 முதல் 167 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கெடுக்கவும் (ILI Survey Workers) 663 பணியாளர்களை (ILI Survey Workers) 08.04.2021 முதல் 06.07.2021 வரை மூன்று மாத காலத்திற்கு நியமனம் செய்து ஒரு நாளைக்கு ரூ .391/- என (90நாட்கள்) பணியமர்த்த அனுமதி மற்றும் ஆணை வேண்டப்படுகிறது.

அதனடிப்படையில் மண்டலம் 12 ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணி மேற்கொள்ள கோட்டம் 156 முதல் 167 வரை உள்ள ( ILI Survey Workers) 663 நபர்களின் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வரிசை எண்ண | வார்டு எண். | ஏற்கனவே பணியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை | தற்போது பணியமர்த்தப் படுபவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 156 | 135 | 135 |
| 2 | 157 | 57 | 57 |
| 3 | 158 | 29 | 29 |
| 4 | 159 | 10 | 10 |
| 5 | 160 | 50 | 50 |
| 6 | 161 | 53 | 53 |
| 7 | 162 | 51 | 51 |
| 8 | 163 | 42 | 42 |
| 9 | 164 | 46 | 46 |
| 10 | 165 | 63 | 63 |
| 11 | 166 | 55 | 55 |
| 12 | 167 | 72 | 72 |
| | | 663 | 663 |

எனவே,

(அ) மண்டலம்-12ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணி மேற்கொள்ள கோட்டம்-156 முதல் 167 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் அறிகுறிகள் உள்ளதா என கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்யும் பணி மேற்கொள்ள 663 தற்காலிக பணியாளர்களை 08.04.2021 முதல்06.07.2021 வரை மூன்று மாத காலத்திற்கு ( 90 நாட்களுக்கு) பணியமர்த்துவதற்கு நிர்வாக அனுமதியும்,

<u>ம.அ.12.பொ.சு.து. ந.க. எண் எச்2/2017 /2021</u>

(ஆ) மேற்படி 663 பணியாளர்களுக்கு ஊதியமாக ஒரு நபருக்கு நாளொன்றிற்கு ரூ.391/- வீதம் 90 நாட்களுக்கு ரூ 2,33,30,970/. (ரூபாய் இரண்டு கோடியே மூப்பத்தி மூன்று லட்சத்து முப்பதாயிரத்து தொள்ளாயிரத்து எழுபது மட்டும்) வழங்குவதற்கு அனுமதியும்,

(இ) மேற்கண்ட செலவினத் தொகையினை மனித வளம் (Man Power) பிரிவு எண் 20-21-07 கணக்கு குறியீடு எண் 230-701-203 என்ற தலைப்பின் நிதி ஒதுக்கீடு அளிக்க நிதி ஆலோசகர் அவர்களைக் கேட்டுக் கொள்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 06.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**இ.பொ.து.ந.க.எண்.பி1/119/2021**

**தீர்மானஎண்.469/2021** **நாள்:07-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - அச்சகம் - "கொரோனா வைரஸ்" தடுப்பு பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி அவ்வப்போது தேவைக்கேற்ப கொள்முதல் மற்றும் அச்சடித்து வழங்கும் பணிகள் செய்ய விலைப்புள்ளி கோரி, குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் மற்றும் அச்சடித்து வழங்கும் பணிகள் நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

உலக சுகாதார நிறுவனம் "கொரோனா வைரஸ்" (Corona Virus) மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் (Pandemic) என அறிவித்துள்ளது. எனவே, இந்நிறுவனம் அனைத்து உலக நாடுகளும் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைக்கான பணியினை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மத்திய அரசு மற்றும் தமிழக அரசும் கொரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க போதிய தடுப்பு நடவடிக்கைகளையும் மற்றும் பொது மக்களிடையே தகுந்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறது. இதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியும் "கொரோனா வைரஸ்" பரவுவதை தடுக்கும் பொருட்டு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் 15 வரையிலான பகுதிகளில் "கொரோனா வைரஸ்" தொற்று பரவுவதை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது மக்கள் கொரோனா வைரஸ் தொற்றுலிருந்து பாதுக்காத்துகொள்ள கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு ஸ்டிக்கர்கள், விளம்பர பதாகைகள், துண்டு பிரசுரங்கள் முதலியன அச்சடித்து விநியோகிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், கொரோனா வைரஸ் தடுப்பு பணியில் மேற்கொள்ளப்பட்டு வரப்படும் பலவகையான நடவடிக்கைகளுக்காக தேவையான பதிவேடுகள், படிவங்கள், அடையாள அட்டைகள், எழுதுபொருட்கள் ஆகியவைகள் அச்சகத்தின் மூலம் அச்சடித்தும் மற்றும் கொள்முதல் செய்தும் வழங்கப்பட்டு வரப்படுகிறது. இவற்றில் பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தில் உள்ள இயந்திரங்கள் மூலம் அச்சடிக்க இயலாத ஸ்டிக்கர்கள், பதிவேடுகளின் மேலுறை, புத்தகங்கள் மற்றும் எண்கள் அச்சிடுதல், விளம்பர பதாகைகள், அடையாள அட்டைகள், முககவசங்கள் கொள்முதல் மற்றும் அச்சிடுதல் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும் அவ்வப்போது ஏற்பட்ட அவசரத்தின் அடிப்படையிலும் கீழ்கண்ட அச்சடித்தல் மற்றும் கொள்முதல் பணிகளை மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி தகுதியான நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலை கோரிய நிறுவனத்திற்கு தகுந்த அலுவலரின் ஆணை பெற்று பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

| Sl. No | File No. Work Order No & Date | Description | Qty | For the use of | Rate | Amount | Company Name |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | P1/070/2021 Dated. 08.03.2021 | Printing, Binding and Supply of 4 types of colour Cover Wrapper with Lamination and Binding work for the use of Testing Register, Contacts Register, Patient Registers and Door to Door Symptomatic (Ili and Sari Survey) Register | 4,000 nos | S.I and S.O Field Work | Rs.27.00 Per (Inclusive of GST) | Rs.1,08,000/- Nett | Alex Trading Company Rs.1,08,000/- Nett |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2. | P1/075/2021 Dated. 17.03.2021 | Printing and supply of multicolour Stickers for creating awareness of COVID -19 Free Vaccination Special Camp<br><br>a) A4 Size for the use of Zone 10 | 16,000 nos | Zone 10 | Rs.8.00 Per (Inclusive of GST) | Rs.1,28,000/- Nett | N.V.P Enterprises Rs.1,28,000/- Nett |
| | | b) A4 Size for the use of Zone 14 | 16,000 nos | Zone 14 | Rs.8.00 Per (Inclusive of GST) | Rs.1,28,000/- Nett | Alex Trading Company Rs.1,44,000/- |
| | | c) A3 Size for the use of Zone 15 | 1000 nos | Zone 15 | Rs.16.00 Per (Inclusive of GST) | Rs.16,000/- Nett | |
| 3. | P1/081/2021 Dated. 17.03.2021 | Printing & Supply of Multicolour Stickers in A4 Size for printing of "Mandatory Mask" (Men – 2000 nos & Women – 2000 nos) | 4,000 nos | Zone 1 to 15 | Rs.8.00 Per (Inclusive of GST) | Rs.32,000/- Nett | N.V.P Enterprises Rs.32,000/- Nett |
| 4. | P1/082/2021 Dated. 18.03.2021 | Supply of White Pulb Board for the use of COVID Vaccination Card Printing Work Purpose | 156 Pockets | Dispensary HQ usages | Rs.1,198.40 Per (Inclusive of GST) | Rs.1,86,950/- Nett | Dawood Paper Mart |
| 5. | P1/090/2021 Dated. 31.03.2021 | Printing & Supply of of Foam Board Stand with Selfie Board (6 ½' X 4 ½') with multicolour vinyle sticker Printing with Mat Lamination of World Largest Vaccination Campaign | 20 Nos | Zone 1 to 15 | Rs.8,850.00 Per (Inclusive of GST) | Rs.1,77,000/- Nett | Maatesh Enterprises Rs.1,77,000/- Nett |
| 6. | P1/103/2021 Dated. 12.04.2021 | Flex banner material (6 feet roll) Width in 340gsm thickness X 50 m | 20 Roll | Printing of Banners & Stickers Zone 1 to 15 | Rs.8300.00 Per (Inclusive of GST) | Rs.1,66,000/- Nett | Orr Pee Enterprises Rs.5,17,000/- Nett |
| | | Flex banner material (8 feet roll)Width in 340gsm thickness X 50 m | 20 Rolls | | Rs.11,600.00 Per (Inclusive of GST) | Rs.2,32,000/- Nett | |
| | | Vinyl Sticker 5 Feet | 10 Rolls | | Rs.11,900.00 Per (Inclusive of GST) | Rs.1,19,000/- Nett | |
| 7. | P1/104/2021 Dated. 12.04.2021 | Supply of White Pulb Board for the use of GCC Printing Press | 900 Pockets | Printing of Vaccination Card Zone 1 to 15 | Rs.1,100.00 Per (Inclusive of GST) | Rs.9,90,000/- Nett | Alex Trading Company Rs.9,90,000/- Nett |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8. | P1/108/2021 Dated. 15.04.2021 | Printing and Supply of Positive Patient Quarantine Stickers in A3 size (Brown Colour) | 75,000 nos | Zone 1 to 15 | Rs.11.80 Per (Inclusive of GST) | Rs.8,85,000/- Nett | A.K. Enterprises Rs.8,85,000/- Nett |
| 9. | P1/111/2021 Dated. 19.04.2021 | Printing & Supply of Focus Register with Multicolour Wrapper printing with binding | 3000 nos of books in 104 pages | Zone 1 to 15 | Rs.95.00 Per (GST exemption) | Rs.2,85,000/- Nett | N.V.P Enterprises Rs.6,26,000/- Nett |
| | | COVID 19 Special Duty Card with Rope & Pouch for the use of Fever Survey Worker ID Card – 13,000 nos and Focus Volunteer – 2,500 nos | 15,500 nos | | Rs.23.00 Per (Inclusive of GST) | Rs.3,41,000/- Nett | |
| 10. | P1/112/2021 Dated. 19.04.2021 | Printing & Supply of Fever Survey Worker Register with Multicolour Wrapper printing with binding | 7,000 nos of books in 153 pages | Zone 1 to 15 | Rs.99.00 Per (Inclusive of GST) | Rs.6,93,000/- Nett | A.K. Enterprises Rs.6,93,000/- Nett |
| 11. | P1/116/2021 Dated. 19.04.2021 | Printing and Supply of Positive Patient Quarantine Stickers in A3 size (Brown Colour) | 75,000 nos | Zone 1 to 15 | Rs.11.80 Per (Inclusive of GST) | Rs.8,85,000/- Nett | A.K. Enterprises Rs.8,85,000/- Nett |
| 12. | P1/118/2021 Dated. 22.04.2021 | Printing & Supply of Fever Survey Worker Register with Multicolour Wrapper printing with binding | 7,000 nos of books in 153 pages | Zone 1 to 15 | Rs.99.00 Per (Inclusive of GST) | Rs.6,93,000/- Nett | A.K. Enterprises Rs.6,93,000/- Nett |
| | | | | | **Total Amount** | **Rs.60,64,950/- Nett** | |

"கொரோனா வைரஸ்" தடுப்பு பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட அச்சடித்தல் மற்றும் கொள்முதல் செய்து வழங்கும் பணிகளின் மொத்த செலவீனத் தொகை ரூ.60,64,950/- என ஆகும்.

இதற்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டு பின்பு இச்செலவீனத்தினை பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்று நேர் செய்யலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் 15 வரையிலான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் "கொரோனா வைரஸ்" தடுப்பு பணிக்கு தேவைப்படும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஸ்டிக்கர்கள், பதிவேடுகளின் மேலுறை, புத்தகங்களில் எண்கள் அச்சிடுதல், விளம்பர பதாகைகள், அடையாள அட்டைகள், முககவசங்கள் ஆகியவற்றை தேவைக்கேற்ப அவ்வப்போது தகுந்த அலுவலரின் ஆணை பெற்று மொத்தம் ரூ.60,64,950/- செலவினத்தில் கொள்முதல் மற்றும் அச்சடித்து வழங்கியதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. "கொரோனா வைரஸ்" தடுப்பு பணிக்கு தேவையான கொள்முதல் மற்றும் அச்சடித்தல் பணிகளுக்கு மேற்கண்ட அட்டவணையின்படி நிறுவனங்களுக்கு பணி ஆணைகள் வழங்கி பணிகளை மேற்கொண்டதற்கு பின்னேற்பு ஆணை வேண்டியும்,

<u>இ.பொ.து.ந.க.எண்.பி1/119/2021</u>

3. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல் - 16(a)-ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதால், தகுதிவாய்ந்த நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் பெற்று மேற்கண்ட பணியை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டியும்,

4. பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு ஒப்பம் கோருவதற்கும், பாதுகாப்புத் தொகை மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்.

5. இதற்கான செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டுபின் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பெற்றபின் நேர் செய்யவும்.

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 05.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

************

**பொது.சு.கா. ம.பி.ந.க.எண்.அ2/0191/2021**

**தீர்மானஎண்.470/2021** **நாள்:08-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களுக்கு கொண்டு வரப்படும் தெரு நாய்களை பராமரித்தல் மற்றும் அறுவை சிகிச்சை பணிக்கு உதவி புரிதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு 9 நபர்கள் மற்றும் கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் பல்வேறு மையங்களில் கூடுதலாக 12 நபர்கள் ஆக மொத்தம் 21 நபர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் இரண்டு குழுக்கள் அமைத்து பணிபுரிய பெறப்பட்ட ஆணை 18.05.2021 அன்றுடன் முடிவடையவுள்ளது 21.05.2021 முதல் ஓராண்டு காலத்திற்கு பணிபுரிய அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களுக்கு கொண்டு வரப்படும் தெரு நாய்களை பராமரிக்க மற்றும் அறுவை சிகிச்சை பணிக்கு உதவி புரிதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு 9 நபர்கள் மற்றும் கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் பல்வேறு மையங்களில் கூடுதலாக 12 நபர்கள் ஆக மொத்தம் 21 தற்காலிக பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் இரண்டு குழுக்களின் உறுப்பினர்கள் பணிபுரிய சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மானம் எண். 261/2019 நாள்: 18.05.2019ல் அனுமதி பெறப்பட்டு கடந்த 2019' ஜுன் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 21 நபர்களின் ஓர் ஆண்டு பணிகாலம் 17.05.2020 அன்றுடன் முடிவடைந்த நிலையில் ஆணையர் அவர்களின் 04.05.2020 நாளிட்ட ஆணைப்படி அவர்களின் பணிகாலம் மேலும் ஓர் ஆண்டு காலத்திற்கு புதுப்பிக்கப்பட்டு, 19.05.2020 முதல் பணிபுரிந்து வருகின்றனர். அவ்வுறுப்பினர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல்முறை ஆணைப்படி உதவியாளர் (Attenders) என்ற பணியில் நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ.425/- வீதம் ஒரு வருட காலத்திற்கு 21 நபர்களுக்கு ரூ.32,57,625/- (ரூ.425x21 நபர்கள் x 365 நாட்கள்) வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் 12 உறுப்பினர்களைக் கொண்ட "அரிமா" என்ற குழுவும் 9 உறுப்பினர்களைக் கொண்ட வேழம் என்ற குழுவும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் செயல்பட்டு வருகின்றன. அவர்கள் வருகை புரிந்த நாட்களுக்கு சம்பந்தப்பட்ட கால்நடை உதவி மருத்துவர்கள் வழங்கும் வருகை சான்றிதழின் அடிப்படையில் அப்பணியாளர்களுக்கு தொகை கணக்கிட்டு வழங்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | பணிபுரியும் இடம் | பணிபுரியும் நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | மையம் ஒன்றிற்கு மூன்று நபர்கள் வீதம் பேசின் பாலம், லாயிட்ஸ் காலனி மற்றும் கண்ணம்மாபேட்டை ஆகிய மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் பணிபுரியும் நபர்கள் | 9 |
| 02. | பேசின்பாலம், லாயிட்ஸ் காலனி மற்றும் கண்ணம்மாபேட்டை ஆகிய மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் தலா ஒருவர் வீதம் இரவு நேரங்களில் தெரு நாய்களை பராமரிக்க பணியமர்த்தப்பட்டுள்ள நபர்கள் | 3 |
| 03. | பேசின் பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையத்தில் தோல் நோயால் பாதிக்கப்பட்டுள்ள 200-க்கும் மேற்பட்ட தெரு நாய்களை பராமரிக்கும் நபர்கள் | 3 |
| 04. | புகார்களுக்காக பிரத்யேகமாக பயன்படுத்தப்பட்டு வரும் நாய் வண்டியில் பணிபுரியும் நபர்கள் | 4 |
| 05 | 'டி' மற்றும் 'ஜி' மாட்டுத் தொழுவங்களில் உள்ள மாடுகளை பராமரிக்க கூடுதலாக பணிபுரியும் தற்காலிக நபர்கள் | 2 |
| | மொத்தம் | 21 |

**பொது.சு.கா. ம.பி.ந.க.எண்.அ2/0191/2021**

ஆணையர் அவர்களின் 04.05.2020 நாளிட்ட ஆணை பெறப்பட்டு மேற்கூறிய மையங்களில் பணிபுரியும் 21 நபர்களின் பணிகாலம் 18.05.2021 அன்றுடன் முடிவடைகிறது. பொதுசுகாதாரத்துறை கால்நடை மருத்துவப்பணிகள் மேற்கூறிய மையங்களில் தொய்வின்றி நடைபெறுவதற்கு 21.05.2021 முதல் மேலும் ஓர் ஆண்டு காலத்திற்கு புதுப்பிக்க வேண்டியுள்ளது,

எனவே,

1. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் (National Urban Livelihood Mission - NULM) குழுக்களின் உறுப்பினர்களாக உள்ள 21 நபர்களின் பணிக்காலம் 18.05.2021 அன்றுடன் முடிவடைந்த பின்னர், இரண்டு குழுக்களில் உள்ள 21 உறுப்பினர்கள் 21.05.2021 முதல் 20.05.2022 வரையிலான ஒரு வருட காலத்திற்கு பணிபுரிவதற்கும்,
2. மேற்கண்ட பணியில் ஈடுபட்டு வரும் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை நீக்கம் செய்வதற்கும் அவருக்கு பதிலாக வேறு நபரை குழுத் தலைவர் பரிந்துரையின்படி கால்நடை மருத்துவ அலுவலர் அவர்களின் அனுமதியுடன் பணியில் ஈடுபடுத்துவதற்கும்,
3. இத்தனியர்கள் பணி செய்த நாட்களுக்கு சம்பந்தப்பட்ட கால்நடை உதவி மருத்துவர் அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் அவர்களுக்கு பணிபுரிந்த நாட்களுக்கான தொகையை கணக்கிட்டு குழுவுக்கு வழங்கவும்,
4. இச்செலவீன தொகையை பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவில் பிரிவு குறியீடு எண்.40-43-02 கணக்கு குறியீட்டு எண்.210-20-07-03 (Intensive Work and Other)– என்ற கணக்கு தலைப்பில் மேற்கொள்ளவும்,
5. சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் 2020-2021ஆம் நிதி ஆண்டில் உதவியாளர் (Attenders) என்ற பணியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நபர் ஒன்றிற்கான தினக்கூலி ரூ.425/-ஐ மேற்கூறிய 21 நபர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு (21.05.2021 முதல் 20.05.2022 வரை) வழங்குவதற்கும், பின்னர் 2021-2022 ஆம் நிதி ஆண்டில் இத்தொகை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்படவுள்ள அத்தொகையை தினக்கூலியாக நாள் ஒன்றிற்கு கணக்கிட்டு மேற்கூறிய 21 நபர்களுக்கு வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 08.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.4நக.எண்.பி3/2075/2021**

**தீர்மானஎண்.471/2021** **நாள்:08-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை ஒப்பந்த அடிப்படையில் சுத்தம் செய்யும் 110 பணியாளர்களை தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, பகுதி-9, 10 (ம) 11, கோட்டம்-34 முதல் 48 வரையில் உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் இப்பணி கடந்த 01.09.2018 முதல் மேற்கொண்டு வருகிறது.

இச்சூழ்நிலையில் பள்ளிகள் மே மாதம் விடுமுறை நாட்கள் முடிந்து ஜுன் மாதம் பள்ளிகள் திறக்கப்படுவதால் பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள் மற்றும் சுற்றுப்புறங்களில் குப்பைகளை மற்றும் தூசுகள் அதிகமாக இருப்பதால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் தனியார் நிறுவனம் மூலம் பணியமர்த்தப்பட்ட 119 பணியாளர்களில் 110 பணியாளர்களை கொண்டு சுற்றுப்புறமும் வகுப்பு அறைகள் சுத்தம் செய்ய 63 பணியாளர்கள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய 47 பணியாளர்கள் என 11 மாதத்திற்கு பணிபுரிந்து வருகின்றனர். மேலும், மே மாதம் விடுமுறை நாள் என்பதால் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சிறப்பு வகுப்புக்காக பள்ளி வருவதால் மே மாதம் முழுவதும் பணி மேற்கொண்டு வருவதால் தலைமையாசியர்கள் அனைவரும் தங்கள் பணியாளர்களை பணி செய்ய அறிவுறுத்துவதால் மே மாதம் முழுவதும் பணி மேற்கொண்டு வருகின்றனர் என்பதால் 11 மாதம் என்பது 12 மாதமாக பணி புரிய கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்நிலையில் 2020-2021 ஆம் ஆண்டு சென்னை மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விகிதத்தில் (Casual Labourer) ஒரு நாளைக்கு ரூ.391/- x 23 நாட்கள் = ரூ. 8,993/- என ஒரு மாதத்திற்கு ஒரு பணியாளர் வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், சென்னை மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்படும் ஊதியம் 2021-22 ஆம் ஆண்டு நிர்ணயக்கப்படும் ஊதியத்தை 110 பணியாளர்களுக்கு உயர்த்தி வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,, கீழ்கண்ட பள்ளிகளில் பணியாளர்கள் பணிபுரிவது வருமாறு.

| வ. எண். | வார்டு எண். | பள்ளியின் பெயர் | வகுப்பறையை சுத்தம் செய்பவர் | கழிவறையை சுத்தம் செய்பவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | பகுதி-9 | | | |
| 1 | 34 | சின்ன கொடுங்கையூர், சென்னை துவக்கப்பள்ளி. | 1 | 1 | 2 |
| 2 | 35 | அண்ணா சாலை சென்னை துவக்கப்பள்ளி | 1 | 1 | 2 |
| 3 | 35 | அண்ணா சாலை சென்னை உயர்நிலைப்பள்ளி | 2 | 1 | 3 |
| 4 | 35 | சின்னான்டிமடம் சென்னை நடுநிலைப்பள்ளி | 1 | 1 | 2 |
| 5 | 35 | காமராஜ் சாலை சென்னை உயர்நிலைப்பள்ளி | 2 | 1 | 3 |
| 6 | 35 | காமராஜ் சாலை சென்னை துவக்கப்பள்ளி | 1 | 1 | 2 |
| 7 | 35 | அரசு உயர்நிலைப்பள்ளி, கவியரசு கண்ணதாசன் நகர் | 2 | 1 | 3 |
| 8 | 36 | சர்மா நகர் 2வது பிரதான சாலை, சென்னை துவக்கப்பள்ளி | 1 | 1 | 2 |

ம.அ.4ந.க.எண்.பி3/2075/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 36 | சர்மா நகர் 2வது பிரதான சாலை, சென்னை உயர்நிலைப்பள்ளி | 2 | 1 | 3 |
| 10 | 37 | எம்.ஜி.ஆர்.நகர் சென்னை துவக்கப்பள்ளி | 1 | 1 | 2 |
| 11 | 37 | 14வது குறுக்கு தெரு சென்னை துவக்கப்பள்ளி | 1 | 1 | 2 |
| 12 | 37 | 4வது குறுக்கு தெரு சென்னை துவக்கப்பள்ளி | 1 | 1 | 2 |
| 13 | 37 | ராஜரத்தினம் நகர் சென்னை துவக்கப்பள்ளி | 1 | 1 | 2 |
| 14 | 37 | கண்ணதாசன் நகர் சென்னை துவக்கப்பள்ளி | 1 | 1 | 2 |
| 15 | 37 | அரசு உயர்நிலைப்பள்ளி, மகாகவி பாரதி நகர் 3வது பிரதான சாலை | 2 | 1 | 3 |
| 16 | 38 | பட்டேல் நகர் சென்னை துவக்கப்பள்ளி | 1 | 1 | 2 |
| 17 | 38 | பட்டேல் நகர் சென்னை உயர்நிலைப்பள்ளி | 2 | 1 | 3 |
| | | **மொத்தம்** | **23** | **17** | **40** |

பகுதி-10

| வ. எண். | வார்டு எண். | பள்ளியின் பெயர் | வகுப்பறையை சுத்தம் செய்பவர் | கழிவறையை சுத்தம் செய்பவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 39 | சென்னை ஆரம்பப்பள்ளி (ம) உயர்நிலைப்பள்ளி, எண்.731, டி.எச்.சாலை | 3 | 1 | 4 |
| 2 | 39 | சென்னை ஆரம்பப்பள்ளி (ம) உயர்நிலைப்பள்ளி MPT காலனி | 2 | 1 | 3 |
| 3 | 39 | CUGPS, செரியன் நகர் | 1 | 1 | 2 |
| 4 | 39 | சென்னை நடுநிலைப்பள்ளி (ம) உயர்நிலைப்பள்ளி , புது மார்கெட் பார்ம், செரியன் நகர் | 3 | 1 | 4 |
| 5 | 39 | சென்னை நடுநிலைப்பள்ளி, இருசப்ப தெரு | 1 | 1 | 2 |
| 6 | 40 | சென்னை நடுநிலைப்பள்ளி, காமராஜ் காலனி | 1 | 1 | 2 |
| 7 | 40 | சென்னை ஆரம்பப்பள்ளி, திருவள்ளுவர் நகர் | 0 | 1 | 1 |
| 8 | 41 | சென்னை நடுநிலைப்பள்ளி, கார்னேஷன் நகர் | 2 | 1 | 3 |
| 9 | 41 | சென்னை ஆரம்பப்பள்ளி, எழில் நகர் (எம்.ஜி.ஆர்.நகர்) | 1 | 1 | 2 |
| 10 | 41 | சென்னை ஆரம்பப்பள்ளி, ஜெ.ஜெ.நகர் | 1 | 1 | 2 |
| 11 | 41 | சென்னை ஆரம்பப்பள்ளி, அண்ணா நகர் | 1 | 1 | 2 |
| 12 | 42 | சென்னை ஆரம்பப்பள்ளி, சேணியம்மன் கோயில் தெரு | 1 | 1 | 2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | 42 | சென்னை மகளிர் உயர்நிலைப்பள்ளி, எண்.540, டி.எச்.சாலை | 3 | 1 | 4 |
| 14 | 43 | சென்னை நடுநிலைப்பள்ளி, எஸ்.என்.செட்டி தெரு, (புதுமனை குப்பம்) | 1 | 1 | 2 |
| 15 | 43 | சென்னை நடுநிலைப்பள்ளி, விநாயகபுரம் பிரதான சாலை | 1 | 1 | 2 |
| 16 | 43 | சென்னை நடுநிலைப்பள்ளி, கும்மாளம்மன் கோயில் தெரு | 0 | 1 | 1 |
| **மொத்தம்** | | | **22** | **16** | **38** |

**பகுதி-11**

| வ. எண். | வார்டு எண். | பள்ளியின் பெயர் | வகுப்பறையை சுத்தம் செய்பவர் | கழிவறையை சுத்தம் செய்பவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 44 | சென்னை துவக்கப்பள்ளி, புது காமராஜ் நகர் | 1 | 1 | 2 |
| 2 | 45 | சென்னை துவக்கப்பள்ளி, கணேசபுரம் | 1 | 1 | 2 |
| 3 | 45 | சென்னை உயர்நிலைப்பள்ளி, கணேசபுரம் | 1 | 1 | 2 |
| 4 | 46 | சென்னை நடுநிலைப்பள்ளி, வியாசர்பாடி | 1 | 1 | 2 |
| 5 | 46 | சென்னை / துவக்கப்பள்ளி, எஸ்.எம்.நகர் பிரதான சாலை | 1 | 1 | 2 |
| 6 | 46 | சென்னை துவக்கப்பள்ளி, மெஹசின்புரம் | 1 | 1 | 2 |
| 7 | 46 | சென்னை மேல்நிலைப்பள்ளி, கல்யாணபுரம் | 4 | 1 | 5 |
| 8 | 47 | சென்னை துவக்கப்பள்ளி, ஹரிநாராயணபுரம் | 1 | 1 | 2 |
| 9 | 47 | சென்னை நடுநிலைப்பள்ளி, ரங்கநாதபுரம் | 1 | 1 | 2 |
| 10 | 47 | சென்னை நடுநிலைப்பள்ளி, புத்தா தெரு, | 1 | 1 | 2 |
| 11 | 47 | சென்னை நடுநிலைப்பள்ளி, ஹரிநாராயணபுரம் | 1 | 1 | 2 |
| 12 | 47 | சென்னை துவக்கப்பள்ளி, OLK பகுதி | 1 | 1 | 2 |
| 13 | 48 | சென்னை மேல்நிலைப்பள்ளி, புத்தா தெரு | 1 | 1 | 2 |
| 14 | 48 | சென்னை நடுநிலைப்பள்ளி, டி.எச்.சாலை | 2 | 1 | 3 |
| **மொத்தம்** | | | **18** | **14** | **32** |

**ம.அ.4/ந.க.எண்.பி3/2075/2021**

எனவே,

| | | | |
|---|---|---|---|
| அ) | மொத்த பணியாளர்கள் | - | 110 பணியாளர்கள் (2021-2022 ஆம் ஆண்டு) |
| | தினசரி ஊதியம் / நபர் ஒருவருக்கு | - | ரூ.391/- (சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்த பட்ச ஊதிய ஆணையின்படி 2020-2021 ஆம் ஆண்டு) |
| | 1. ஒரு மாதத்திற்கு | - | 1 பணியாளர் x 23 நாட்கள் x ஒரு நாள் ஊதியம் ரூ.391/- = ரூ. 8,993/- |
| | 2. 11 மாதத்திற்கு மொத்த செலவு | - | 110 பணியாளர்கள் x 11 மாதத்திற்கு x 23 நாட்கள் x ஒரு நாள் ஊதியம் ரூ.391/- = ரூ. 1,08,81,530/- (ரூபாய் ஒரு கோடியே எட்டு இலட்சத்து எண்பத்து ஓராயிரத்து ஐநூற்று முப்பது மட்டும்) |
| ஆ) | மேற்கண்ட பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் பணியமர்த்திக் கொள்ளவும், | | |
| இ) | இக்குழுக்களை திட்ட மேலாண்மை இயக்குநரகம் மூலம் ஊதியம் வழங்கவும், | | |

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 08.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

**********

**க.து.ந.க.எண்.பி1/450/6/2021**

**தீர்மானஎண்.472/2021** **நாள்:08-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - COVID-19 மதிப்பீடு - 2020-2021 - கட்டடத்துறை - மண்டலம் -12 நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்காக Hall-1, Hall-2 and Hall-3ல், 800 எண்ணிக்கையிலான படுக்கைகளுக்கு Centrelized Oxygen line அமைக்கும் பணிக்கு ரூ.2,05,00,000.00/-க்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை, அண்டை மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி வரும் சூழ்நிலையில் நோயாளிகளை தனிமைப்படுத்துதல் மற்றும் கொரோனா பரவுதலை கட்டுப்படுத்துதலை பாதிக்கும் என்பதாலும், அப்படி தனிமைப்படுத்தாவிடில் அவர்கள் பலருக்கு தொற்றினை ஏற்படுத்தி அதனால் ஆகும் மனித பாதிப்பும் செலவீனமும் கணக்கில் கொள்ள முடியாத அளவிற்கு இருக்கும் என்றும் உயர் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

இப்பணிக்கான தலைமைச்செயலர் தலைமையில் நடந்த கூட்டத்தில் உடனடியாக ஆக்ஷிஜன் வசதி கொண்ட படுக்கைகள் தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டது.

மேலும், அதற்கான தலைமைச் செயலர் அவர்கள் மற்றும் முதன்மை செயலர் (வணிக வரி) அவர்கள் தலைமையில் 15 மண்டலங்களுக்கும் தனித்தனியாக IAS அதிகாரிகள் தலைமையில் FST உருவாக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள அதிகாரிகள் கள ஆய்வு செய்து பல இடங்களில் ஆக்ஷிஜன் வசதி கொண்ட படுக்கைகள் தயார் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனால் மண்டலம் -12 நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்காக Hall-1, Hall-2 and Hall-3ல், 800 எண்ணிக்கையிலான படுக்கைகளுக்கு Centrelized Oxygen line அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பணிக்காக பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மதிப்பீடு தயாரித்து நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாசிறது. இப்பணிக்காக கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் -12 நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்காக Hall-1, Hall-2 and Hall-3ல், 800 எண்ணிக்கையிலான படுக்கைகளுக்கு Centrelized Oxygen line அமைக்கும் பணி. |
| 2 | பணியின் தொகை | ரூ. 1,73,26,650.00 |
| 3 | GST 18 % | ரூ. 31,18,797.00 |
| 4 | Contingencies | ரூ. 54,533.00 |
| 5 | மொத்தம் | **ரூ.2,05,00,000.00** |
| 6 | நிதியின் தன்மை | COVID - 19 |

**க.து.ந.க.எண்.பி1/450/6/2021**

எனவே,

1) மண்டலம் -12 நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்காக Hall-1, Hall-2 and Hall-3ல், 800 எண்ணிக்கையிலான படுக்கைகளுக்கு Centrelized Oxygen line அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள தோராய திட்ட மதிப்பீட்டிற்கு ரூ.2,05,00,000.00/-க்கு *(Inculding GST)* (ரூபாய் இரண்டு கோடியே ஐந்து இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,

2) அரசு கடித எண்.74./JS(MA)/Finance(Salaries/2020,நாள்.01.04.2020 Sec 16 (a) TNTT Act ன்படி பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளவும்,

3) மேற்கண்ட பணிக்கு 25% முன்பணம் வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**க.து.ந.க.எண்.பி1/450/8/2021**

**தீர்மானஎண்.473/2021** **நாள்:08-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - பெருநகர மாநகராட்சியில் பல்வேறு இடங்களில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு காலை முதல் இரவு வரை 15 Covid Care Centre-களில் 100 நபர்கள் வீதம் 90 நாட்களுக்கு உணவு வழங்கும் பணிக்கு ரூ.4,96,12,500/- க்கு (Inculding GST) தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்டை மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலும் கொரோனா நோய் எண்ணிக்கை அதிகமாகி வரும் சூழ்நிலையில் நோயாளிகளை தனிமைப்படுத்துதல் மற்றும் கொரோனா பரவுதலை கட்டுப்படுத்துதலை பாதிக்கும் என்பதாலும் அப்படி தனிமைப்படுத்தாவிடில் அவர்கள் பலருக்கு தொற்றினை ஏற்படுத்தி அதனால் ஆகும் மனித பாதிப்பு செலவீனமும் கணக்கில் கொள்ள முடியாத அளவிற்கு இருக்கும் என்றும் உயர் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

மேலும், அதற்காக தலைமைச் செயலர் அவர்கள் மற்றும் முதன்மை செயலர் (வணிக வரி) அவர்கள் தலைமையில் 15 மண்டலங்களுக்கும் தனித்தனியாக *IAS* அதிகாரிகள் தலைமையில் *FST* உருவாக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள அதிகாரிகள் கள ஆய்வு செய்து பல இடங்களில் ஆக்சிஜன் வசதி கொண்ட படுக்கைகள் தயார் செய்யவும், தனிமைப்படுத்தபட்டவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பெருநகர மாநகராட்சியில் பல்வேறு இடங்களில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு காலை முதல் இரவு வரை 15 Covid Care Centre-களில் 100 நபர்கள் வீதம் 90 நாட்களுக்கு உணவு வழங்கும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும், இப்பணிக்காக ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு ரூ.350 செலவிடலாம் என ஏற்கனவே *ACS/ Finance* தலைமையக குழு பரிந்துரை செய்யப்பட்டு *G.O.(MS)No.256 Revenue and Disaster Management Department, Disaster Management wing, D.M.II Section dated 27.05.2020* வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட சிறப்பு தன்மையுடன் கூடிய உணவிற்காக நாள் ஒன்றிற்கு ஒரு நபருக்கு ரூ.350 என்ற மதிப்பின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்காக காலை முதல் இரவு வரை நாள் ஒன்றுக்கு ரூ.350 வீதம் 15 Covid Care Centre-களில் 100 நபர்கள் வீதம் 90 நாட்களுக்கு உணவு வழங்க கீழ்கண்டவாறு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | பெருநகர மாநகராட்சியில் பல்வேறு இடங்களில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள-வர்களுக்கு காலை முதல் இரவு வரை 15 Covid Care Centre-களில் 100 நபர்கள் வீதம் 90 நாட்களுக்கு உணவு வழங்கும் பணி. |
| 2 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 4,96,12,500.00 |
| 3 | பணியின் தோராய மதிப்பு தொகை (100Nos x 90 Days x 15 Centres x 350Rate = Rs.4,72,50,000.00) | ரூ. 4,72,50,000.00 |
| | (அ) GST 5% | ரூ. 23,62,500.00 |
| | மொத்தம் | ரூ. 4,96,12,500.00 |
| 4 | நிதியின் தன்மை / ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி / கணக்கு குறியீட்டு எண். | *COVID*-19 |

<u>க.து.ந.க..எண்.பி1/450/8/2021</u>

எனவே,

1) பெருநகர மாநகராட்சியில் பல்வேறு இடங்களில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு காலை முதல் இரவு வரை 15 Covid Care Centre-களில் 100 நபர்கள் வீதம் 90 நாட்களுக்கு உணவு வழங்கும் பணிக்கு ரூ.4,96,12,500/-க்கு *(Inculding GST)* தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீட்டிற்கு (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சத்து பனிரெண்டாயிரத்து ஐநூறு மட்டும்) நிர்வாக அனுமதியும்,

2) அரசு கடித எண்.*74./JS(MA)/Finance(Salaries/ 2020*, நாள்.*01.04.2020 Sec 16 (a) TNTT Act* ன்படி பணி மேற்கொள்ளவும்,

3) இப்பணியினை மண்டல அலுவலகங்கள் மூலமாக மேற்கொள்ளவும்,

4) பணி முடிவுற்றப்பின்னர் மண்டல அலுவலகங்கள் மூலமாக முன்பணங்கள் மற்றும் பட்டிகள் தீர்வு செய்து கொள்ளவும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“*1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

**********

ம.அ.5.ந.க.எண்.சி2/ 3293 /2021

**தீர்மான எண்.474 / 2021** **நாள்:08-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, பகுதி-12, 13 மற்றும் 14, கோட்டம்-49 முதல் 63 வரை துப்புரவு பணி - நிரந்தர பணியாளர்கள் பற்றாக்குறை - மேலும் ஓராண்டு காலம் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 786 தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-12,13 மற்றும் 14, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள பகுதிகளில் துப்புரவு பணிகளான தெருக்களில் கூட்டுவது, குப்பைகளை அகற்றுவது மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு 2083 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். சிறப்பு அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.03.2020 நாளிட்ட ஆணையின் படி,மேற்கண்ட பணியாளர்களில் உள்ள காலிப்பணியிடங்களை 884 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமனம் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மன்ற தீர்மான எண். 262/2020, நாள்: 27.03.2020 பெறப்பட்டு 884 எண்ணிக்கையிலான தற்காலிக NULM துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி நடைபெற்று வருகிறது. தற்போது மேற்கண்ட மன்ற தீர்மானத்திற்கான பணிக்காலமானது 30.04.2021 அன்று முடிவடைந்துள்ளது.

மண்டலம்-5 ஐ சார்ந்த பகுதிகளில் சென்னையில் முக்கிய பழமை வாய்ந்த இராயபுரம், பிராட்வே, எம்.சி ரோடு, வண்ணாரப்பேட்டை, எழும்பூர் போன்ற பகுதிகள் உள்ளடக்கியதாகும். மேலும், கடற்கரை சாலைகள் தலைமைச் செயலகம், நேவல் கேஸ், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் ரிப்பன் கட்டிட வளாகத்தில் சென்னை மாநகராட்சி பணியாளர்களை கொண்டு தனியாக தினமும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தவிர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5க்கு உட்பட்ட பகுதிகளில் அரசு ஸ்டான்லி மருத்துவமனை, அரசு பல் மருத்துவமனை, அரசு கண் மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் மற்றும் மகப்பேறு மருத்துவமனை, சென்னை தீவுத் திடல், சென்ட்ரல் இரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், பிராட்வே பேருந்து நிலையம், மூலக்கொத்தளம் இடுகாடு, சென்னை பெருநகர் குற்றவியல் நீதிமன்றம், அல்லிக்குள வளாகம் மற்றும் நீதிமன்றம், பீச் ஸ்டேஷன் இரயில் நிலையம், பழமை வாய்ந்த இந்து கோவில்கள், பழமை வாய்ந்த மசூதிகள், அரண்மனைக்கார தெரு, கிருஸ்துவ ஆலையம், சென்னை துறைமுகம், சென்னை எழும்பூர் அருங்காட்சியகம், பூங்காக்கள், விளையாட்டு திடல், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் ஆகியன உள்ளன மேலும், 139 எண்ணிக்கையிலான பெருநகர சென்னை மாநகராட்சியின் இலவச பொதுக்கழிப்பிடங்கள் சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திடப்படல் வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்வதால் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டி உள்ளது. இந்நிலையில் தற்போது 30.04.2021 அன்று மேற்கண்ட மன்ற தீர்மானத்தின் பணிக்காலமானது 30.04.2021 அன்று முடிவடையவுள்ளதால் தற்போது கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தற்காலிக துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்து துப்பரவு பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

துப்புரவு பணியாளர் தேவைப் பட்டியல் கணக்கீடு:

| வ.எண் | பகுதி எண் | வார்டு எண் | ஒப்பளிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | 01.02.2020 அன்று நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 01.02.2020 அன்று காலி பணியிடம் | பிற மண்டலங்களிலிருந்து வந்த பணியாளர்களின் எண்ணிக்கை (மண்டலம் -11,12,14) | 01.02.2020 முதல் 31.03.2021 வரை ஓய்வு பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை | 01.02.2020 முதல் 31.03.2021 வரை இறந்த பணியாளர்களின் எண்ணிக்கை | 31.03.2021 அன்று காலி பணியிடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | 49 | 102 | 59 | 43 | 10 | 3 | 1 | 37 |
| 2 | | 50 | 130 | 59 | 71 | 12 | 2 | 0 | 61 |
| 3 | | 51 | 80 | 47 | 33 | 10 | 3 | 0 | 26 |

<u>ம.அ.5.ந.க.எண்.சி2/ 3293 /2021</u>

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 52 | 124 | 55 | 69 | 10 | 1 | 0 | 60 |
| 5 | | 53 | 165 | 89 | 76 | 10 | 1 | 1 | 68 |
| 6 | | TPF | 34 | 17 | 17 | 8 | 2 | 0 | 11 |
| 7 | 13 | 54 | 109 | 66 | 43 | 10 | 2 | 0 | 35 |
| 8 | | 55 | 87 | 56 | 31 | 10 | 0 | 2 | 23 |
| 9 | | 56 | 101 | 61 | 40 | 10 | 6 | 5 | 41 |
| 10 | | 57 | 188 | 84 | 104 | 10 | 4 | 1 | 99 |
| 11 | | 60 | 187 | 88 | 99 | 10 | 4 | 0 | 93 |
| 12 | | LFZ | 42 | 22 | 20 | 5 | 3 | 0 | 18 |
| 13 | 14 | 58 | 158 | 97 | 61 | 9 | 3 | 1 | 56 |
| 14 | | 59 | 170 | 133 | 37 | 10 | 6 | 1 | 34 |
| 15 | | 61 | 169 | 112 | 57 | 10 | 7 | 2 | 56 |
| 16 | | 62 | 120 | 66 | 54 | 11 | 2 | 0 | 45 |
| 17 | | 63 | 117 | 88 | 29 | 10 | 0 | 4 | 23 |
| Total | | | 2083 | 1199 | 884 | 165 | 49 | 18 | 786 |

மேற்கண்ட அட்டவணைப்படி மண்டலம் – 5 வார்டு 49 முதல் 63, TPF மற்றும் LFZ ஆகிய வார்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 2083 ஆகும். இதில் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் 884 காலிப்பணியிடங்களை தொடர்ந்து பகுதி-12, 13, 14ல் பணியாளர்கள் இறப்பு, வயது முதிர்வு ஓய்வு, தன் விருப்ப ஓய்வு பெற்றுள்ளார்கள். 30.03.2021 அன்று 786 பணியிடங்கள் காலிப்பணியிடங்களாக உள்ளது. எனவே, அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 786 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமனம் செய்வது அவசியமாகிறது.

எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் மக்கள் நலன் கருதியும் நிர்வாக நலன் கருதியும் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள மேலும் ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் தற்காலிக துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்திட வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மைத்துறையின் 19.06.2019 நாளிட்ட சுற்றறிக்கையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக தற்காலிக பணியாளர்களின் ஊதிய விகிதத்தின் படி நாள் ஒன்றுக்கு ரூ.391/- என வழங்க குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஊதிய விகிதத்தின் படி 786 பணியாளர்களுக்கு ஆகும் செலவு ரூ.391 x 786 x 365 என ஒரு வருட காலத்திற்கு ரூ.11,21,73,990/-( ரூபாய் பதினோரு கோடியே இருபத்தியோரு இலட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு மட்டும்) தேவைப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இப்பணிக்காக கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 210-100-601 ன் கீழ் தீர்வு செய்ய வேண்டி உள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி 12,13 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் 786 பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 01.05.2021 முதல் 30.04.2022 வரை தற்காலிக துப்புரவு பணியாளர்களை கோட்டங்களில் உள்ள பணியின் தன்மைக்கு ஏற்றவாறு நியமிக்க அனுமதியும்,

2) எதிர்வரும் காலத்தில் மண்டலம்-5 துப்புரவு பணியானது தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் இப்பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் மேற்கொள்ளப்படும் இப்பணியாணையினை ரத்து செய்ய அனுமதி வேண்டியும்,

3) மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 786 பணியாளர்களுக்கு 12 மாத காலத்திற்கு ஆகும் செலவு தொகை ரூ. 391 x 786 x 365 = ரூ.11,21,73,990/-( ரூபாய் பதினோரு கோடியே இருபத்தியோரு இலட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு மட்டும்)ஆகும். இதற்கு சிறப்பு அலுவலர் அவர்கள் அனுமதி

வேண்டியும் எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயக்கப்படின் நிர்ணயிக்கப்படும் ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

4) மேற்படி பணிகளுக்கான செலவு தொகையை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 210-100-601 ன் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 03.05.2021 நாளிட்ட மேற்குறிப்பில்,**
**"Sir, be permitted for 9 months" என தெரிவித்துள்ளார்.**

ஆணையரது 04.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் மேற்குறிப்புடன், 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

**********

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/509/2020**

**தீர்மானஎண்.475/2021** **நாள்:08-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - "கொரோனா வைரஸ்" தடுப்பு பணி- கிருமி நாசினி தெளிக்கும் பணி- 15 எண்ணிக்கையிலான டிராக்டரில் பொருத்தக் கூடிய கிருமி நாசினி தெளிப்பான்கள் (Tractor Mounted Sprayers) கொள்முதல் செய்யப்பட்டது-இக்கிருமி நாசினி தெளிப்பான்கள் இயக்குவதற்குத் தேவையான டிராக்டர்கள் வாடகை முறையில் 23.03.2020 முதல் 90 நாட்களுக்கு 3 எண்ணிகையிலான டிராக்டர்களும் - 31.03.2020 முதல் 90 நாட்களுக்கு 4 எண்ணிக்கையிலான டிராக்டர்களும் வாடகை முறையில் பணியமர்த்தப்பட்டது-கூடுதலாக 29.07.2020 வரை கூடுதல் நாட்களுக்கு பணியமர்த்தப்பட்டது. மற்றும் கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கு 07.06.2020 முதல் 60 நாட்களுக்கு 250 எண்ணிக்கையில் Sprayer Equipment with 1000 litres capacity HDPE (SINTEX) tank Mounted on TATA Ace or Equivalent vehicle for Spraying Disinfectant 60 நாட்களுக்கு வாடகை முறையில் அமர்த்த நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டது- இவ்வகை வாகனங்களின் அவசரம் மற்றும் அவசியம் கருதி 06.08.2020முதல் 01.09.2020 வரையிலான காலத்திற்கு கூடுதலாக 250 எண்ணிக்கையிலான வாகனங்களும் 2.09.2020 முதல் 24.09.2020 வரையிலான காலத்திற்கு மண்டலத்திற்கு ஒன்று வீதம் 15 மண்டலங்களுக்கு 15 எண்ணிக்கையிலான வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டது - மற்றும் பல்வேறு வகையான வாகனங்கள் கொரோனா தடுப்பு பணிக்கென 01.12.2020 முதல் 28.02.2021 வரை வாடகை முறையில் பணியமர்த்தப்பட்டது - மேற்கண்ட வாகனங்கள் கூடுதல் நாட்களுக்கு வாடகை முறையில் அமர்த்தப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 2020-ல் உலக சுகாதார நிறுவனம், "கொரோனா வைரஸ்" (Corona Virus) மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் (Pandemic) என அறிவித்து, அனைத்து உலக நாடுகளும் தகுந்த கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைகான பணியினை போர்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்தது. இது தொடர்பாக, இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசும், கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியிலும் கடந்த ஆண்டு மார்ச்-2020 –லிருந்து கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று பாதித்த மக்களுக்கு சிகிச்சை அளித்து அத் தொற்றிலிருந்து மீட்டு எடுப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் பொருட்டு பொது மக்கள் பெருவாரியாக கூடும் இடங்கள், பொது மக்கள் அதிக பயன்படுத்தும் அலுவலக வளாகங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிப்பதற்கு டிராக்டரில் பொருத்தப்பட்டு இயங்கக் கூடிய பல வகை கிருமி நாசினி தெளிப்பான் உபகரணம் (பட்டர்பிளை வகை தெளிப்பான்கள்) கொள்முதல் செய்ய பணி ஆணை வழங்கப்பட்டு கிருமி நாசினி தெளிப்பான்கள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வகை உபகரணங்கள் டிராக்டரில் பொருத்தி இயக்கக் கூடியவை என்பதால் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் உள்ள 8 எண்ணிக்கையில் டிராக்டர்கள் போக மீதமுள்ள 7 எண்ணிக்கையிலான டிராக்டர்களை வாடகை முறையில் அமர்த்த தீர்மானிக்கப்பட்டு 7 எண்ணிக்கையில் டிராக்டர்கள் வாடகை முறையில் அமர்த்தப்பட்டதற்கு சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.735/2020 நாள்.07.10.2020ன் மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டு 23.03.2020 முதல் 90 நாட்களுக்கு 3 எண்ணிகையிலான டிராக்டர்களும்31.03.2020 முதல் 90 நாட்களுக்கு 4 எண்ணிக்கையிலான டிராக்டர்களும் வாடகை முறையில் அமர்த்தப்பட்டது. கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கென இவ்வகை வாகனங்களின் அவசியம் காரணமாக 29.07.2020 வரை கூடுதல் நாட்களுக்கு பணியமர்த்தப்பட்டது.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/509/2020**

மேலும், மண்டலம்-1 முதல் 15 வரையிலான பகுதிகளில் உட்புற சாலைகளிலும் குறுகலான சாலைகளிலும் கிருமி நாசினி தெளிப்பதற்கு ஏதுவாக சிறிய வகை (Tata Ace அல்லது அதற்கு இணையான வாகனங்களில் 1000 லிட்டர் கொள்ளவுள்ள தொட்டியுடன் கூடிய கிருமி நாசினி தெளிக்கும் இயந்திரம் மூலம் பணிகளை மேற்கொள்வதன் மூலம் அனைத்து வகையான தெருக்களிலும் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ளலாம் என கருதப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் இவ்வகை வாகனங்கள் இல்லாத காரணத்தாலும் மற்றும் கிருமி நாசினி தெளிப்பதற்காக தேவையான உபகரணங்களை (தொட்டி, பம்பு மற்றும் Sprayer உட்பட) Tata Ace வகை வாகனங்களில் பொருத்தி வடிவமைக்கப்படும் சிறப்பு வகையில் வருவதாலும், தனியார் வாகன நிறுவனங்களிடமிருந்து விலை புள்ளி பெற்று விலை நிர்ணயிக்கும் குழு முன் சமர்ப்பித்து ஒரு வாகனத்திற்கு நாளொன்றிற்கு (8 மணி நேரத்திற்கு) ரூ.4,200/- என வாடகை தொகை நிர்ணயிப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மானம் எண் 303/2020 நாள் 28.04.2020ல் பணியின் அவசர அவசியத்தினைக் கருத்தில் கொண்டு மண்டலம்-1 முதல் 15 வரையிலான பகுதிகளில் கிருமி நாசினி தெளிப்பதற்கு கிருமி நாசினி தெளிக்கும் உபகரணம் மற்றும் தொட்டி(HDPE Tank) பொருத்தப்பட்ட Tata Ace அல்லது அதற்கு இணையான வாகனங்களை மண்டல வாரியாக 190 வாகனங்கள் 60 நாட்களுக்கு (07.04.2020 முதல் 06.06.2020 வரை) வாடகைக்கு அமர்த்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த மே மாதம் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகமானதாலும் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கை அதிகமானதாலும் பணியின் அவசரத்தினை கருத்தில் கொண்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி 190 எண்ணிக்கையிலான வாகனங்களுடன் மேற்கொண்டு 60 எண்ணிக்கையிலான வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தி கிருமி நாசினி தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட 250 எண்ணிக்கையிலான வாகனங்களுக்கான பணிக்காலம் 06.06.2020 அன்றுடன் முடிவடைய இருந்த நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸின் தாக்குதல் அதிக அளவில் இருந்த காரணத்தால் 07.06.2020 முதல் 60 நாட்களுக்கு ஒரு வாகனத்திற்கு நாளொன்றிற்கு ரூ.4200/- (inclu.GST@5%) வீதம் 250 எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு 60 நாட்களுக்கு ரூ.6,30,00,000/- செலவில் வாடகை முறையில் பணியமர்த்த சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் 24.06.2020 நாளிட்ட அனுமதி மற்றும் சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.416/2020, நாள்.26.06.2020 ஆகியவை பெறப்பட்டு வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்தப்பட்டது. இவ்வாகனங்களுக்கான ஒப்பந்த காலம் 05.08.2020 அன்றுடன் முடிவடைந்த நிலையில் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி 06.08.2020முதல் 01.09.2020 வரையிலான காலத்திற்கு கூடுதலாக 250 எண்ணிக்கையிலான வாகனங்களும் 02.09.2020 முதல் 24.09.2020 வரையிலான காலத்திற்கு மண்டலத்திற்கு ஒன்று வீதம் 15 மண்டலங்களுக்கு 15 எண்ணிக்கையில் வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டது .

மேலும், கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை Screening Centre மற்றும் Covid Care Centre களுக்கு அழைத்து செல்லவும் Tourister வகை வாகனம் 01.07.2020 முதல் 150 நாட்களுக்கு அல்லது பணி முடியும் வரை ரூ.9.04 கோடி தோராய மதிப்பீட்டில் வாடகை முறையில் பணியமர்த்த மன்றத் தீர்மானம் பெறப்பட்டுள்ள நிலையில், 01.12.2020 முதல் 28.02.2021 வரையிலான காலத்திற்கு கூடுதலாகவும் மற்றும் கொரோனா தடுப்பு பணிக்கென பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களின் பயன்பாட்டிற்கென Tavera, Xylo, Tata Sumo, Tata Indica, Tempo Traveller 01.07.2020 முதல் 150 நாட்களுக்கு அல்லது பணி முடியும் வரை ரூ.7.90கோடி தோராய மதிப்பீட்டில் வாடகை முறையில் பணியமர்த்த மன்றத் தீர்மானம் பெறப்பட்டுள்ள நிலையில், 01.12.2020 முதல் 28.02.2021 வரையிலான காலத்திற்கு கூடுதலாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனங்கள் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு கூடுதல் நாட்களுக்கு மற்றும் கூடுதல் செலவீனத்தில் வாடகை முறையில் பணியமர்த்தப்பட்டது.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/509/2020**

| வ. எ ண் | வாகனங்களின் வகை | வாடகை முறையில் பணியமர்த்தப்பட்ட காலம் | வாகனங்களின் எண்ணிக்கை | நாளொன்றிற்கான வாடகைத் தொகை | மொத்த தொகை | குறிப்புரை |
மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 18ல் (வார்டு – 79 முதல் 83 – வரை) தற்போது நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் நியமிக்கப்பட்ட ***Chennai Enviro Solution Private Limited*** **அவர்களுக்கு** ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு மேற்கண்ட நிறுவனம் மூலம் 2 வார்டுகள், 82 & 83 இல் மட்டும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, ஆனால் தற்பொழுது கொரோனா நோய் தொற்றின் இரண்டாம் அலை நோய் பரவலை முன்னிட்டு நோய் தடுப்பு மற்றும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட NULM பணியாளர்களை(16.05..2021 முதல் 15.07..2021 வரை) 61 நாட்களுக்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

**பகுதி - 18 ல் NULM திட்டத்தின் கீழ் வார்டு - 79, 80, & 81 இல் மட்டும் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை-413.**

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.402 /2021 நாள் 29.03.2021– ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் (NULM) 413 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 01.04.2021 முதல் 15.05.2021 வரை ஒன்றரை மாத காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.05.2021 – ல் நிறைவடைய உள்ளது. தற்பொழுது Covid – 19 Pandamic Period ஆக இருப்பதால் அவசியம் கருதி மண்டலம்-7, பகுதி – 18 ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து (16.05..2021 முதல் 15.07..2021 வரை) 61 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 413 துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-18 க்கு தேவை என கணக்கிட்டு 16.05.2021 முதல் 15.07.2021 வரையில் 61 நாட்களுக்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 18 | 413 | ரூ.391x413x61 (நாட்கள்) = ரூ .98,50,463/- |
| | | மொத்தம் | ரூ. 98,50,463/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் 7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 09.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 413 பணியாளர்களுக்கு 61 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.98,50,463/- (ரூபாய் தொண்ணுற்றி எட்டு இலட்சத்து ஐம்பதாயிரத்து நானூற்றி அறுபத்தி மூன்று மட்டும்) என 2 மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி - 18 ல் தற்பொழுது Covid – 19 Pandamic Period ஆக இருப்பதால் அவசியம் கருதி, 16.05.2021 முதல் 15.07.2021 வரை அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற **Chennai Enviro Solution Private Limited** என்கிற நிறுவனம் மீதம் உள்ள 3 வார்டுகளை Take Over செய்து துப்புரவு பணிகளை மேற் கொள்ளும் நாள் வரை ( Whichever is earlier) துப்புரவு பணிகளை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணியை தொடர்வதற்கு அதே 413 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 413 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம், 61 நாட்களுக்கு ஆகும் செலவு. ரூ. 98,50,463(ரூபாய் தொண்ணுற்றி எட்டு இலட்சத்து ஐம்பதாயிரத்து நானூற்றி அறுபத்தி மூன்று மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 210 – 100 - 601 கீழ் மேற்கொள்ளவும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 15.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ7ந.க.எண்.எஸ்2/00443/2021**

**தீர்மானஎண்.481/2021** **நாள்:18-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி– 19 - விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.05.2021 உடன் முடிவடைவது - அதே 475 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.05.2021 முதல் 15.07.2021 வரை பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 19, வார்டு – 84 முதல் வார்டு – 88 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.79 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 917 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி – 19ன்கீழ் உள்ள 84 முதல் 88 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,90,760 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம் -7. அம்பத்தூர், பகுதி – 19ல் 84 முதல் 88 வரையிலான 5 வார்டுகளில் தோராயமாக 94.190 மெ.டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 19ல் (வார்டு – 84 முதல் 88 – வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைதுறை மூலம் நியமிக்கப்பட்ட *Chennai Enviro Solution Private Limited* அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு மேற்கண்ட நிறுவனம் மூலம் வார்டு 85 இல் ஒரு வார்டில் மட்டும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் தற்பொழுது கொரொனா நோய் தொற்றின் இரண்டாம் அலை நோய் பரவலை முன்னிட்டு, நோய் தடுப்பு மற்றும் போர்கால அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட பணியாளர்களை 61 நாட்களுக்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பகுதி – 19, ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | - | 96 |
| 2) | பகுதி – 19ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | - | <u>475</u> |
| | மொத்தம் | - | <u>571</u> |

வார்டு – 85, 86 – ல், நிரந்தர துப்புரவு பணியாளர்கள் கடந்த நிதியாண்டில் 25 நபர்கள் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றும், 2 நபர்கள் காலஞ்சென்றும் மற்றும் 5 நபர்கள் பதவி உயர்வில் சென்ற நிலையிலும் NULM பணியாளர்கள் கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.403/2021, நாள். 29.03.2021 – ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் வார்டு 84, 86, 87 மற்றும் 88-இல் 475 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 01.04.2021முதல் 15.05.2021 வரை 45 நாட்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.05.2021 – ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி – 19ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து 61 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 571 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 96 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 475 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம் -7 பகுதி -19க்கு தேவை என கணக்கிட்டு தற்பொழுது Covid – 19 Pandemic Period ஆக உள்ளதால், அவசியம் கருதி 16.05.2021 முதல் 15.07.2021 வரையில் 61 நாட்களுக்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதி எண் | NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 19 | 475 | ரூ.391x475x 61 (நாட்கள்) = ரூ.1,13,29,225/- |
| | | மொத்தம் | ரூ.1,13,29,225/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 08.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 475 பணியாளர்களுக்கு 61 நாட்களுக்கு ஆகும் தோராய செலவு ரூ.1,13,29,225/- (ரூபாய் ஒரு கோடியே பதிமூன்று இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து இருநூற்று இருபத்தைந்து மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி -19ல் தற்பொழுது Covid – 19 Pandemic Period ஆக உள்ளதால், அவசியம் கருதி,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 7 அம்பத்தூர், பகுதி - 19 ல் 16.05.2021 முதல் 15.07.2021 வரை அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் - 7இல் குப்பைகளை அகற்ற Chennai Enviro Solution Private Limited என்கிற நிறுவனம் மூலம் மீதமுள்ள 4 வார்டுகளை Take Over செய்து துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை (Whichever is Earlier) தற்பொழுது கொரோனா நோய் தொற்றின் இரண்டாம் அலை நோய் பரவலை முன்னிட்டு நோய் தடுப்பு மற்றும் போர்கால அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணியை தொடர்வதற்கு அதே 475 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,

2) மேற்கண்ட 475 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம், 61 நாட்களுக்கு ஆகும்தோராய செலவு ரூ. 1,13,29,225/- (ரூபாய் ஒரு கோடியே பதிமூன்று இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து இருநூற்று இருபத்தைந்து மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

3) இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 210 – 10 – 06 – 01 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 15.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ7ந.க.எண்.எஸ்1/ 460 /2021**

**தீர்மானஎண்.482/2021** **நாள்:19-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி–20 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர் புறவாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.05.2021 உடன் முடிவடைவது - அதே 569 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.05.2021 முதல் 15.07.2021 வரை (61 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 20, வார்டு – 89 முதல் வார்டு 93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.03 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 26 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 260 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,59,4,38 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 20ல் (வார்டு – 89 முதல் 93 – வரை) தற்போது நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் நியமிக்கப்பட்ட ***Chennai Enviro Solution Private Limited*** **அவர்களுக்கு** ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு உள்ளது, ஆனால் தற்பொழுது, கொரோனா நோய் தொற்றின் இரண்டாம் அலை நோய் பரவலை முன்னிட்டு நோய் தடுப்பு மற்றும் போர்கால அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட NULM பணியாளர்களை16.05.2021 முதல் 15.07..2021 வரை ( 61 நாட்களுக்கு ) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

பகுதி **- 20** ல் **NULM** திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை-569.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.404 /2021, நாள். 29.03.2021– ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் (NULM) 569 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 01.04.2021 முதல் 15.05.2021 வரை ஒன்றரை மாத காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.05.2021 – ல் நிறைவடைய உள்ளது. தற்பொழுது covid –19 pandemic period ஆக உள்ளதால், மண்டலம்-7,

பகுதி – 20ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து 61 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது

இக்கருத்துக்களின் அடிப்படையில் 569 துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-20க்கு தேவை என கணக்கிட்டு 16.05.2021 முதல் 15.07.2021 வரையில் (61 நாட்கள்) ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 20 | 569 | ரூ.391 x 569 x 61 (நாட்கள்) = ரூ. 1,35,71,219/- |
| மொத்தம் | | | ரூ. 1,35,71,219/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் 7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 09.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 569 பணியாளர்களுக்கு 16.05..2021 முதல் 15.07..2021 வரை (61 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.1,35,71,219/-(ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஐந்து இலட்சத்து எழுபத்தி ஓராயிரத்து இருநூற்று பத்தொன்பது மட்டும்) என இரண்டு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் **-7**, பகுதி **- 20**ல் தற்பொழுது covid – 19 pandemic period ஆக இருப்பதால், அவசியம் கருதி, 16.05.2021 முதல் 15.07.2021 வரை (61 நாட்கள்) அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற Chennai Enviro private Limited மூலம் 5 வார்டுகளை Takeover செய்து துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை (Whichever be earlier) தற்பொழுது, கொரோனா நோய் தொற்றின் இரண்டாம் அலை நோய் பரவலை முன்னிட்டு நோய் தடுப்பு மற்றும் போர்கால அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணியை தொடர்வதற்கு அதே 569 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 569 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம், 16.05.2021 முதல் 15.07.2021 வரை 61 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.1,35,71,219/-( ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஐந்து இலட்சத்து எழுபத்தி ஓராயிரத்து இருநூற்று பத்தொன்பது மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

<u>ம.அ7ந.க.எண்.எஸ்1/ 460 /2021</u>

3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 210 –10 - 06 -01 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 15.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.4.சு.து.ந.க.எண்.சு3/3075/2021**

**தீர்மானஎண்.483/2021** **நாள்:19-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4 - சுகாதாரத் துறை - கோட்டம் -34 முதல் 48 வரையில் உள்ள வைரஸ் நோய் அறிகுறிகள் கண்டறிய கணக்கு எடுக்கும் பணி மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிகள் மேற்கொள்ள மகளிர் சுய உதவி குழுவின் மூலமாக (FSW) 995 நபர்களை தற்காலிக பணியாளர்களாக ஏப்ரல் 2021 முதல் ஜூன் 2021 வரை மூன்று மாதத்திற்கு (01/04/2021 முதல் 30/06/2021 வரை) நியமிக்கவும் மற்றும் இப்பணியாளர்களுக்கு போக்குவரத்து மற்றும் அலைப்பேசிக்கான செலவினத்தொகை மூன்று மாதத்திற்கு வழங்க நிர்வாக அனுமதி.**

ஆணையர் அவர்களின் 02.04.2020 நாளிட்ட வாய்மொழி உத்தரவில், மண்டலம்-4, சுகாதாரத் துறை, தண்டையார்பேட்டையில் கோட்டம் 34 முதல் கோட்டம் 48 வரை உள்ள கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள 4114 அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 1,69,432 வீடுகளை 1182 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு நியமிக்க அறிவுறுத்தப்பட்டது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.149/2021, நாள்.10.02.2021ல், மண்டலம்-4 தண்டையார்பேட்டை, கோட்டம்-34 முதல் கோட்டம்-48 வரை உள்ள குறுவட்டப் பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்கு 400 நபர்களை தற்காலிக பணியாளர்களாக 01/01/2021 முதல் 31/01/2021 வரை ஒரு மாத காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, ஆணையர் அவர்களின் 23.03.2021 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் கொரோனா பாதிப்பு தற்போது அதிகமாக பரவி வருவதால், தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிகள் மேற்கொள்ள FSW தற்காலிக பணியாளர்களை மீண்டும் பணியில் ஈடுபடுத்த அறிவுறுத்தியதை தொடர்ந்து, மண்டலம்-4க்காக 590 FSW தற்காலிக பணியாளர்கள் தேவைப்படுகிறது என மாநகர நல அலுவலர் (தலைமையிடம்) அவர்களுக்கு 25.03.2021 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

சிறப்பு அதிகாரி / மன்றத்தீர்மான எண். 409/2021, நாள். 31/03/2021ன்படி, ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 08/04/2021 நாளிட்ட செயல்முறை ஆணையில், கொரோனா தடுப்பு களப்பணியாளர்கள் 25/03/2021 முதல் 24/06/2021 வரை 3 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.15000/-ல் பணியமர்த்தப்பட்டதை, திருத்தம் செய்து மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் (NULM) பணிபுரிந்து வரும் கொசு ஒழிப்பு பணியாளர்கள் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச தினக்கூலி அடிப்படையில் கொரோனா தடுப்பு களப்பணியாளர்களையும் மாத ஊதியம் ரூ.12,121/-ல் பணியமர்த்த திருத்திய ஆணை வழங்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 15/04/2021 நாளிட்ட ஆய்வு கூட்டத்தில், கொரோனா பரவல் வேகமாக பரவி வருவதால் 995 FSW தற்காலிக பணியாளர்களை பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் -4 அவர்களின் 21.04.2021 நாளிட்ட குறிப்பில், மண்டலம்-4, தண்டையார்பேட்டை, கோட்டம் -34 முதல் கோட்டம்-48 வரை உள்ள பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிகள் மேற்கொள்ள

995 நபர்கள் FSW தற்காலிக பணியாளர்களாக தேவைப்படுகிறது என மாநகர நல அலுவலர் (தலைமையிடம்) அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

ஆணையர் அவர்களின் 04.05.2021 நாளிட்ட செயல்முறை ஆணையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலின் தாக்கம் மிக அதிகமாக தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ள காரணத்தினால் அதாவது நாளொன்றுக்கு 4000 நபர்களுக்கு மேல் நோயினால் பாதிக்கப்படும் நிலையில், இந்த பகுதிகளில் பணிபுரிந்து வரும் கொரோனா தடுப்பு பணியாளர்களை ஊக்கப்படுத்தும் விதமாக மண்டலம்-4ல் பணிபுரியும் FSW தற்காலிக பணியாளர்கள் அனைவரும் இருசக்கர வாகனத்தில் பயணித்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது, அவர்களின் பணி விவரங்களை அலைபேசி மூலம் உடனுக்குடன் உயர் அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டியுள்ளது. எனவே, பணியாளர்கள் அவர்களின் ஊதியத்துடன் சேர்த்து போக்குவரத்து மற்றும் அலைப்பேசிக்கென மாதம் ரூ.750/- வழங்க அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, கொரோனா தொற்று நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், மண்டலம்-4, தண்டையார்பேட்டை, கோட்டம்-34 முதல் கோட்டம்-48 வரை உள்ள பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் மண்டலத்தில் உள்ள 4114 அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 1,69,432 வீடுகளை 1182 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர குழுக்கள் மூலங்களின் மூலம் 995 FSW தற்காலிக பணியாளர்களாக நியமிக்கவும் மற்றும் இப்பணியாளர்களுக்கு போக்குவரத்து மற்றும் அலைப்பேசிக்கான செலவினத் தொகை வழங்கவும் சிறப்பு அலுவலர் (மன்றம்) அவர்களின் நிர்வாக அனுமதி ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| (அ) | மண்டலம்4. கோட்டம் 34 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகளுக்கும், நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பணிகளுக்கும் தேவையான (FSW) காய்ச்சல் களப்பணியாளர்கள் 995 நபர்கள் 01.04.2021 முதல் 30.06.2021 வரை பணி மேற்கொள்ள ஆணையும் மற்றும் இப்பணியாளர்களுக்கு போக்குவரத்து மற்றும் அலைப்பேசிக்கான செலவினத் தொகை மூன்று மாதத்திற்கு வழங்கவும், |
| (ஆ) | மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.12,121/- வீதம் 995 நபர்களுக்கு மூன்று மாதத்திற்கு என்ற அளவில் (12121 x 995 x 3 மாதம்) ரூ.3,61,81,185/- மற்றும் போக்குவரத்து மற்றும் அலைப்பேசிக்கான செலவினத் தொகை மூன்று மாதத்திற்கு (750 x 995 x 3 மாதம்) ரூ. 22,38,750/- ஆக மொத்தம் ரூ.3,61,81,185/- + ரூ. 22,38,750/- = ரூ.3,84,19,935/- (எழுத்தால் ரூபாய் மூன்று கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஐந்து மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவினம் செய்யவும், |
| (இ) | மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-70-12-03 லிருந்து செலவு செய்யவும், |

**ம.அ.4.சு.து.ந.க.எண்.சு3/3075/2021**

| | |
|---|---|
| (ஈ) | மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண்.20-21-07 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-70-12-03ல் ரூ.3,84,19,935/-ல் நிதி ஆலோசகர் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யவும், |

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 13.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**பொ.து.ந.க.எண்.இ9/13268/2021**

**தீர்மானஎண்.484/2021** **நாள்:19-05-2021**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை - திருமதி. சுசீலா (பணி எண். 695464) தூய்மை பணியாளர், கோட்டம்-69, பகுதி-16, மண்டலம்-6 அவர்கள் 15.05.2021 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-16, கோட்டம்-69ல் தூய்மை பணியாளராக பணிபுரியும் திருமதி.சுசீலா (பணியாளர் எண்.695464) அவர்கள் 15.02.2021 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் மற்றும் தன் குடும்ப சூழ்நிலை காரணமாகவும், தன்னால் தொடர்ந்து பணிக்கு வர முடியவில்லை என்றும், தன்னை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் 15.02.2021 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்.

திருமதி. சுசீலா, தூய்மை பணியாளர் அவர்கள் சமர்ப்பித்துள்ள மனுவின் மீது உரிய விதிகளின்படி ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும்படி மன்றச்செயலாளர் அவர்கள் தனது 23.02.2021 நாளிட்ட குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தனியர் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (FR III) துறை, நாள்: 11.12.1995ன்படி, அடிப்படை விதி 56(3)ன்படி, தனியர் குறைந்தபட்சம் 20 வருட பணிக்காலம் அல்லது 50 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும். தனியர் பெருநகர சென்னை மாநகராட்சியில் 20.04.1990 அன்று முதல் நிரந்தர தூய்மை பணியாளராக பணியமர்வு செய்யப்பட்டு கடந்த 30 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார். 01.07.1965 அன்று பிறந்த தனியர் 55 வயதினை கடந்துள்ளார். தன் விருப்ப ஓய்வில் செல்ல விதிகளின்படி 55 வயதினை கடந்தும் அல்லது 20 ஆண்டுகள் நிகர பணிக்காலத்தினை முடித்திருக்க வேண்டும்.

தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் தன் விருப்ப ஓய்வு கோரும் இப்பணியாளருக்கு அவரது பதவியில் 20.04.1990 முதல் பணிவரன் முறையும் மற்றும் 12.10.1991 அன்று தகுதிகாண்பருவம் அடைந்த பணியாளராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் வயது முதிர்வு ஓய்வு பெறும் நாள்: 30.05.2025 ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் 06.05.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் கடனாக செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ. 3,91,130/- (ரூபாய் மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து நூற்றி முப்பது மட்டும்) உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய பண்டிகை கால முன்பணம் ரூ. 5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நிலுவையில் உள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 11.05.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வட்டார இணை ஆணையர் அவர்களின் 13.05.2021 நாளிட்ட கடிதத்தில் திருமதி. சுசீலா (பணியாளர் எண்: 695464) தூய்மை பணியாளர், கோட்டம்-69, பகுதி-16, மண்டலம்-6 அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை மற்றும் தணிக்கை தடை மற்றும் தணிக்கை தடை சம்மந்தமான நிலுவைத்தொகை மற்றும் வேறு ஏதாவது பிடித்தங்கள், பின்னர் தெரியவரின் தனியருக்கு வழங்கப்பட இருக்கும் பணிக்கொடையில் இருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 15.05.2021 பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதித்து ஆணை வழங்கிட முதன்மை செயலர்/ ஆணையர் மற்றும் சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

<u>**பொ.து.ந.க.எண்.இ*9/13268/2021***</u>

**எனவே,** திருமதி. சுசீலா, (பணியாளர் எண்: *695464)* **தூய்மை பணியாளர்,** கோட்டம்-*69,* பகுதி-*16,* மண்டலம்-*6* அவர்களை *15.05.2021* **அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்க சிறப்பு அதிகாரி -மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும்** ஆணையரது 17.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன்விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி -மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**ம.அ.15.பொ.சு.து.ந.க.எண்.எச்1/433/2021**

**தீர்மானஎண்.485/2021** **நாள்:21-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -15ல் - கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு - 744 தற்காலிக பணியாளர்கள்- 25.03.2021 முதல் 24.06.2021 வரை மூன்று மாத காலத்திற்கு நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15ல் கொரனா வைரஸ் தடுப்பு பணிக்காக கோட்டம் 192 – முதல் 200 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா? எனக் கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய (Survey Workers) மொத்தம் 744 பணியாளர்கள் 25.03.2021 முதல் 24.06.2021 வரை மூன்று மாத காலத்திற்கு நியமனம் செய்து ஒரு நாளைக்கு ரூ.391/- என ஒவ்வொரு மாதமும் ஊதியம் வழங்க அனுமதி மற்றும் ஆணை வேண்டப்படுகிறது.

அதனடிப்படையில், மண்டலம்-15ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கோட்டம்-192 முதல் 200 வரை உள்ள பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய (Survey Workers) மொத்தம் 744 பணியாளர்களின் விவரம் பின்வருமாறு.

| **வ. எண்** | **வார்டு எண்** | **தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | 192 | 73 |
| 2 | 193 | 82 |
| 3 | 194 | 44 |
| 4 | 195 | 194 |
| 5 | 196 | 82 |
| 6 | 197 | 102 |
| 7 | 198 | 74 |
| 8 | 199 | 14 |
| 9 | 200 | 79 |
| | **மொத்தம்** | **744** |

மேற்கண்ட பணியானது அவசரம் மற்றும் அவசியம் கருதி 744 பணியாளர்களை (Survey Workers) 25.03.2021 முதல் 24.06.2021 வரை மூன்று மாத காலத்திற்கு மட்டும் தற்காலிகமாக ஒரு நாளைக்கு ரூ.391/- வீதம் ஒவ்வொரு மாதமும் ஊதியம் வழங்க சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-15ல் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக கோட்டம்- 192 முதல் 200 வரை உள்ள வீடுகளுக்கு சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் இது போன்ற ஏதேனும் உள்ளதா? எனக் கணக்கெடுக்கவும் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள வீடுகளின் பொருளாதார சுய விவரம் குறித்த கணக்கெடுக்கவும் 744 பணியாளர்களை (Survey Workers) 25.03.2021 முதல் 24.06.2021 வரை மூன்று மாத காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்த அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட 744 பணியாளர்களுக்கு (Survey Workers) ஊதியமாக ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 391/- வீதம் 92 நாட்களுக்கு 744 பணியாளர்களுக்கு ரூ.2,67,63,168/- (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்து ஏழு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து நூற்று அறுபத்தெட்டு மட்டும்) வழங்கவும்,

3. இப்பணிக்கான செலவீனத்தை கணக்கு குறியீட்டு எண்.20-21-07, கணக்கு தலைப்பு எண். 230-70-12-03 என்ற தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஊதியம் வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 19.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**சு.து.ந.க.எண். B1/3389/2021**

**தீர்மானஎண்.486/2021** **நாள்:21-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கொரோனா 2ம் அலை தீவீரமாகி வரும் நிலையில் - ஆக்ஸிஜன் பற்றாக்குறை காரணமாக தனியார் நிறுவனமான M/s Digikore Studios Pvt Ltd நிறுவனத்திடமிருந்து 1000 யூனிட் Oxygen Concentrators-9 Liters (9 LPM Flow capacity) கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி மற்றும் கொள்முதல் செய்ய அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

தமிழகத்தில், தற்போது கொரோனா தொற்றின் 2ம் அலை மிக வேகமாக பரவி வருகிறது. இந் நோய் தொற்று கடுமையாக பாதிப்பவர்களுக்கு ஆக்ஸிஜன் வழங்குவது மிகவும் அவசியமாகிறது. கொரோனா வைரஸ் தொற்றின் அதிக அளவிலான மக்களை பாதித்துள்ள நிலையில் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் கொரோனா சிகிச்சை மையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் வசதிகளுடன் கூடிய படுக்கைகள் கூடுதலாக தேவைப்படுகின்றது. தற்போது இதர மாநிலங்களில் கொரோனா நோயாளிகளுக்கு ஆக்ஸிஜன் வழங்குவதில் குறைபாடு ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தொற்று பாதிப்புள்ளானவர்களுக்கு தேவைப்படும் சமயத்தில், உடனுக்குடன் ஆக்ஸிஜன் வசதி தரும் பொருட்டு போதுமான அளவில் ஆக்ஸிஜன் கையிருப்பு வைத்திருப்பது அவசியமாகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள Covid Care Center மற்றும் மருத்துவமனைகளில் தற்போதுள்ள ஆக்ஸிஜன் கட்டமைப்புடன் கூடிய படுக்கை வசதிகள், எதிர்வரும் நாட்களில் கொரோனா தொற்று பரவலின் வீரியம் அதிகரிக்கும் பட்சத்தில் அதனை எதிர் கொள்ள போதுமான அளவிற்கு கட்டமைப்பு வசதிகள் அதிகப்படுத்தப்படல் வேண்டும். தற்போதுள்ள காலகட்டத்தில் இவ்விதமான கட்டமைப்புடன் கூடிய படுக்கை வசதிகள் ஏற்படுத்திட காலதாமதம் ஏற்படும். ஆகவே, கொரோனா பாதித்த ஆக்ஸிஜன் தேவைப்படுகின்ற முதல் நிலை நோயாளிகளுக்கு ஆக்ஸிஜன் வழங்க போதுமான அளவிற்கு ஆக்ஸிஜன் வசதி ஏற்படுத்தி தருவதற்கு 1000 யூனிட் Oxygen Concentrators-**9 Liters** (9 LPM Flow capacity) கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நோயின் தாக்கத்தினை குறைத்து தீவிர சிகிச்சைக்கு செல்வதை தவிர்க்கலாம்.

இந்நிலையில், M/s Digikore Studios Pvt Ltd., நிறுவனத்தார் 1000 யூனிட் Oxygen Concentrators-**9 Liters** (9 LPM Flow capacity) வழங்க முன் வந்துள்ளதாகவும், அதன் ஒன்றின் தோராய மதிப்பீடு ரூ.79,000 + 12% GST எனவும், இதில் 30% தொகை(ரூ.2,65,44,000) பணியாணை வழங்கும்போது முன்பணமாக வழங்கவும், 70% தொகை (ரூ.6,19,36,000) பொருள் இறக்குவதற்கு முன்னதாக வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020 மற்றும் நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries) /2020 நாள்.01.04.2020ன்படியும், கொரானா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்படுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(a) During natural calamities and emergencies declared by the Government;

இதனடிப்படையில் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக்கென விலைப்புள்ளி கோராமல் நேரடியாக M/s Digikore Studios Pvt Ltd நிறுவனத்தாரிடமிருந்து 1000 யூனிட் Oxygen Concentrators**-9 Liters** (9 LPM Flow capacity) கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதனை தொடர்ந்து M/s. Digikore Studios Pvt Ltd, நிறுவனத்தார் 1000 யூனிட் Oxygen Concentrators**-9 Liters** (9 LPM Flow capacity) வழங்க அளித்துள்ள விலைப்புள்ளி அடிப்படையில் 1000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய தோராய மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| Sl. No. | Product Name | Quantity Nos. | Unit Base Price (Rs) | GST 12%(Rs) | Unit price (Incl. GST.) Rs. | Total Amount (Incl. GST) Rs. |
|---|---|---|---|---|---|---|
| **01.** | **Oxygen Concentrators ( 9 LPM flow capacity)(9 Lt.) Make: Dedakj Model No:DE-2AW** | **1000** | **79,000** | **9,480** | **88,480** | **8,84,80,000** |

மேற்கண்ட அட்டவணையின் படி ஒரு எண்ணிக்கையிலான **Oxygen Concentrators-9 Liters ( 9 LPM flow capacity)** கொள்முதல் செய்ய ரூ. 88,480/- (Incl. GST @ 12 %) வீதம் 1000 எண்ணிக்கையில் வழங்க தெரிவித்துள்ள விலைப்புள்ளி தோராயமாக ரூ.8,84,80,000/- ஆகும்.

கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவைப்படும் சமயத்தில் உடனுக்குடன் ஆக்ஸிஜன் வழங்க வேண்டியுள்ள நிலையில் M/s Digikore Studios Pvt Ltd., நிறுவனத்தாரிடம் 1000 எண்ணிக்கையில் **Oxygen Concentrators -9 Liters ( 9 LPM flow capacity)** ரூ.**8,84,80,000**/- தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், M/s Digikore Studios Pvt Ltd நிறுவனத்தினர் கோரிய படி மொத்த தொகையில் 30% தொகை(ரூ.2,65,44,000) பணியாணை வழங்கும்போது முன்பணமாக வழங்கவும், 70% தொகை (ரூ.6,19,36,000) பொருள் இறக்குவதற்கு முன்னதாக வழங்க ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை கொரோனா தொற்றின் 2ம் அலை மிக வேகமாக பரவி வரும் நிலையில், இந் நோய் தொற்று கடுமையாக பாதிப்பவர்களுக்கு ஆக்ஸிஜன் வழங்குவது மிகவும் அவசியமாகியுள்ளதால், உடனடி தேவைக்காக **Oxygen Concentrators-9 Liters (9 LPM flow capacity)** 1000 எண்ணிக்கையில் M/s Digikore Studios Pvt Ltd, நிறுவனத்திடம் (ஒன்றின் விலை ரூ. 88,480/- (Incl. GST @ 12 %) மொத்தம் ரூ.**8,84,80,000**/- (ரூபாய் எட்டு கோடியே எண்பத்தி நான்கு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதிக்கும் மற்றும் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணியாணை வழங்க அனுமதிக்கும்,
2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக M/s Digikore Studios Pvt Ltd நிறுவனத்தின் மூலம் **Oxygen Concentrators -9 Liters (9 LPM flow capacity)** 1000 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய அனுமதிக்கும்,

3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ. **8,84,80,000**/- (ரூபாய் எட்டு கோடியே எண்பத்தி நான்கு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
4. மேற்கண்ட நிறுவனத்தினரிடம் பிணை வைப்பு தொகை பெறுவதில் இருந்தும் மற்றும் ஒப்பந்தம் செய்வதில் இருந்தும் விலக்கு அளிக்க அனுமதிக்கும்,
5. மேலும், M/s Digikore Studios Pvt Ltd நிறுவனத்தினர் கோரிய படி மொத்த தொகையில் 30% தொகை(ரூ.2,65,44,000) பணியாணை வழங்கும்போது முன்பணமாக வழங்கவும், 70% தொகை (ரூ.6,19,36,000) பொருள் இறக்குவதற்கு முன்னதாக வழங்க அனுமதிக்கும்,
6. இதற்கான செலவினம் மாநகராட்சி கோவிட் பணிக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் பிரிவு குறியீடு 30-32-05, கணக்கு எண். 230-70-12-01 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட *1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

**********

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1020/2021**

**தீர்மானஎண்.487/2021** **நாள்:21-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை- M/s, Vishal Surgical Equipments Co. Pvt Ltd., நிறுவனத்தார் ஒரு எண்ணிக்கையிலான ஆம்புலன்ஸ் வாகனம் நன்கொடையாக பெறப்பட்டுள்ளது-இவ்வாகனத்தை ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் பெயரில் பதிவு செய்யவும் இவ்வாகனத்தை பெருநகர சென்னை மாநகராட்சி, இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவும்- இவ்வாகனத்திற்கான ஓட்டுநர் நியமிக்கவும்- தேவையான எரிபொருள் வழங்கவும் அனுமதி.**

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 2020-ல் உலக சுகாதார நிறுவனம், "கொரோனா வைரஸ்" *(Corona Virus)* மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் *(Pandemic)* என அறிவித்ததை தொடர்ந்து தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியிலும் கடந்த ஆண்டு மார்ச்-2020 – லிருந்து கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று பாதித்த மக்களுக்கு சிகிச்சை அளித்து அத் தொற்றிலிருந்து மீட்டு எடுப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

இந்நிலையில் தற்போது கொரோனா வைரஸ் பரவல் 2-வது அலை தீவிரமாக உள்ளதால், கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட மக்களை அவர்களது வீட்டிலிருந்து கொரோனா சிகிச்சை மையத்திற்கு மற்றும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல 108 ஆம்புலன்ஸ் வாகனங்களின் பற்றாக்குறை காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 250 சிறப்பு ஆம்புலன்ஸ் *(Covid Special Ambulance)* வழங்கியும் மற்றும் 12 இருக்கைகள் கொண்ட பயணியர் வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தியும் கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

இந்நிலையில் *M/s Vishal Surgical Equipments Pvt Ltd* நிறுவனத்தாரிடமிருந்து பெறப்பட்டுள்ள 19.05.2021 நாளிட்ட மின்னஞ்சலில், கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணிக்கென பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தங்கள் நிறுவனமும் கைகோர்த்து செயல்பட விரும்புவதாகவும், தற்போதுள்ள சூழ்நிலையில் நோயின் தாக்கத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள ஆம்புலன்ஸ் பற்றாக்குறையினை கருத்தில் கொண்டு தங்கள் நிறுவனம் புதியதாக ஆம்புலன்ஸ் வாகனம் *(Maruti Eeco make)* கொள்முதல் செய்து நிரந்தர பதிவு செய்யதுள்ளதாகவும் இவ்வாகனத்தினை கொரோனா நோய் தொற்று பாதித்த மக்களை அழைத்துச் செல்வதற்கென பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நன்கொடையாக வழங்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் கொரோனா வைரஸ் பாதித்த மக்களுக்கு சிகிச்சை அளித்திட அழைத்துச் செல்வதற்கு *M/s Vishal Surgical Equipments Pvt Ltd* நிறுவனத்தார் நன்கொடையாக வழங்கவுள்ள ஆம்புலன்ஸ் வாகனம் பெரும் உதவியாக இருக்கும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, *M/s Vishal Surgical Equipments Pvt Ltd* நிறுவனத்தார் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நன்கொடையாக வழங்கவுள்ள புதிய ஆம்புலன்ஸ் *( Make: Maruti, Model : Eeco, Chassis No* MA3ERLF1S00933184) வாகனத்தினை ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் பெயரில் நிரந்தர பதிவு செய்யவும் மற்றும் வாகனத்திற்கான உரிய ஆவணங்களை பெற்ற பின் அதனை பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனையில் இருப்பு பதிவேட்டில் *(Asset Register)* பதிவு செய்யவும் வேண்டப்படுகிறது,

மேலும், இவ்வாகனத்திற்கான ஓட்டுநரை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நியமிக்கவும் மற்றும் இவ்வாகனத்திற்கு தேவையான எரிபொருள் வழங்கி பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் ஆணை வேண்டப்படுகிறது.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1020/2021**

எனவே,

1. *M/s Vishal Surgical Equipments Pvt Ltd* நிறுவனத்தாரிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்டுள்ள புதிய ஆம்புலன்ஸ் (*Make: Maruti, Model : Eeco, Chassis No* MA3ERLF1S00933184) வாகனத்தினை ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் பெயரில் நிரந்தர பதிவு செய்யவும்,*M/s Vishal Surgical Equipments Pvt Ltd* நிறுவனத்தாரிடமிருந்து இவ்வாகனத்திற்கான உரிய ஆவணங்களை பெற்ற பின் அதனை பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனையில் இருப்பு பதிவேட்டில் ( *Asset Register*) பதிவு செய்யவும் ,
2. இவ்வாகனத்திற்கான ஓட்டுநரை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நியமிக்கவும், மற்றும் இவ்வாகனத்திற்கு தேவையான எரிபொருள் வழங்கி பராமரிப்பு பணி மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 20.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1031/2021**

**தீர்மானஎண்.488/2021** **நாள்:24-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா அல்லது இதர காரணங்களால் இறந்தவர்களின் உடல்களை மயான பூமிகளுக்கு கொண்டு செல்வதற்கு மாநகராட்சியின் சார்பில் 20 எண்ணிக்கையிலான இலவச அமரர் ஊர்தி வாடகை மூலம் பணி அமர்த்துவதற்கு நிர்வாக அனுமதி.**

கடந்த ஆண்டு மார்ச் மாதம் *2020*-ல் உலக சுகாதார நிறுவனம், “கொரோனா வைரஸ்” *(Corona Virus)* மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் *(Pandemic)* என அறிவித்ததை தொடர்ந்து தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியிலும் கடந்த ஆண்டு மார்ச்-*2020* – லிருந்து கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று பாதித்த மக்களுக்கு சிகிச்சை அளித்து அத் தொற்றிலிருந்து மீட்டு எடுப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

மேலும், தமிழக அரசின் சார்பில் மருத்துவமனைகளில் இறந்தவர்களின் உடல்களை கொண்டு செல்ல இலவச அமரர் ஊர்தி வாகனங்களின் சேவை இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போதைய பேரிடர் காலத்தில் இறந்தவர்களின் உடல்களை மயானபூமிக்கு எடுத்துச் செல்வதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு கூடுதலாக அமரர் ஊர்தி பணியமர்த்துவது அவசியமாகிறது. இதற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று அல்லது இதர காரணங்களால் இறந்தவர்களின் உடல்களை மயான பூமிக்கு கொண்டு செல்வதற்கு மாநகராட்சி சார்பில் *20* அமரர் ஊர்தி வாகனங்கள் ஏற்பாடு செய்து, இந்திய செஞ்சிலுவை சங்கத்திடம் மாநகராட்சியின் சார்பில் வழங்கி இயக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வகை அமரர் ஊர்தி வாகனங்கள் மாநகராட்சியிடம் இல்லாத காரணத்தினால், *20* எண்ணிக்கையிலான அமரர் ஊர்தி வகை வாகனம் தனியாரிடமிருந்து வாடகைக்கு அமர்த்த வேண்டியுள்ளது. இது குறித்து அமரர் ஊர்தி வாகனம் வடகைக்கு தனியார் நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் அமரர் ஊர்தி வாகனத்தை நாளொன்றுக்கு *(12* மணி நேரத்திற்கு*)* ஒரு உதவியாளருடன் இயக்குவதற்கு ரூ.*5,500/-* வாடகை தொகையாக கோரியுள்ளார். தற்போதைய ஊரடங்கு அமலில் உள்ள காலத்தில் இந்த விலைப்புள்ளி ஏற்புடையதாக உள்ளது.

இதன்படி *20* எண்ணிக்கையிலான அமரர் ஊர்தி வாகனங்கள் தனியார் நிறுவனத்திடமிருந்து *30* நாட்களுக்கு வாடகைக்கு அமர்த்துவதற்கு ஏற்படுகின்ற தோராய செலவீனம் ரூ.*33,00,000/- (Exclu. GST) (20X*ரூ.*5500X30 =*ரூ.*33,00,000/.)* என கணக்கிடப்படுகிறது.

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி *1998*ல்-*16(a)*ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும், இப்பணி அவசர அவசியம் கருதி அமரர் ஊர்தி வாகனங்கள் வாடகைக்கு அமர்த்த வாகனங்களை வாடகை முறையில் வழங்கும் தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண் *40-41-01*ன் கீழ் கொரோனா பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் *230-70-12-04* என்னும் தலைப்பின் கீழ் *2021-22* ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1031/2021**

எனவே,

1. தற்போதைய பேரிடர் காலத்தில் இறந்தவர்களின் உடல்களை மயானபூமிக்கு எடுத்துச் செல்வதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று அல்லது இதர காரணங்களால் இறந்தவர்களின் உடல்களை மயான பூமிக்கு கொண்டு செல்வதற்கு மாநகராட்சி சார்பில் 20 அமரர் ஊர்தி வாகனங்கள் ஏற்பாடு செய்து, இந்திய செஞ்சிலுவை சங்கத்திடம் மாநகராட்சியின் சார்பில் வழங்கி மற்றும் இயக்கவும்,

2. அமரர் ஊர்தி வாகனத்தை நாளொன்றுக்கு (12 மணி நேரத்திற்கு) ஒரு உதவியாளருடன் இயக்குவதற்கு ரூ.5,500/- வாடகை கட்டணத்தில் 30 நாட்களுக்கு தோராயமாக ரூ.33,00,000/- (Exclu. GST) (ரூபாய் முப்பத்தி மூன்று லட்சம் மட்டும்) செலவீனத்தில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண் 40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-04 என்னும் தலைப்பின் கீழ் 2021-22 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

4. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி அமரர் ஊர்தி வாகனங்களை வாடகை முறையில் வழங்கும் தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/ 0381 /2021</u>**

**தீர்மானஎண்.489 / 2021** **நாள்:25-05-2021**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - 2020-2021-ஆம் ஆண்டிற்கு கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான வட்டி விகிதங்கள் (Interest) மற்றும் அபராத வட்டி (Penal Interest) விகிதம் நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டது - அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.</u>**

அரசாணை (நிலை) எண்.98 நிதி (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழுமம்)த்துறை நாள் *26.02.2021*-ன்படி, கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான வட்டி விகிதங்கள் *(Interest)* மற்றும் அபராத வட்டி *(Penal Interest)* விகிதம் 2020-*2021*-ஆம் ஆண்டிற்கு செயல்படுத்தும் பொருட்டு, ஆணை வழங்கப்பட்டுள்ளது.

*2020*-2021ஆம் நிதியாண்டில் அனுமதிக்கப்படும் அனைத்து கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கு இவ்வட்டி விகிதம் பொருந்தும் எனவும், இவ்வட்டி விகிதங்கள் 01.04.2020 முதல் நடைமுறைக்கு வருகிறது எனவும் 2021-*2022*-ஆம் நிதியாண்டிற்கான வட்டி விகிதங்கள் நிர்ணயிக்கப்படும் வரை கீழ்க்கண்டுள்ள வட்டி விகிதம் தொடரும் எனவும் மற்றும் சில நிபந்தனைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl. No. | | Class of Loan / Advance | Percent per annum for the year 2020 - 2021 |
|---|---|---|---|
| 1. | Loans to State owned Industrial / Commercial Undertakings / Corporations, etc. including Financial Corporations and all other Local Bodies and Municipal Corporations. | | |
| | (a) | Plan Schemes for development purposes | 10.80 |
| | (b) | Other Schemes | 10.80 |
| | (c) | For capital formation and development purposes | 10.80 |
| | (d) | For Working Capital Support | 12.80 |
| | (e) | For Ways & Means advances, advances including loans to cover cash deficits | 12.80 |
| | (f) | For Ways & Means advance to Tamil Nadu Civil Supplies Corporation Limited for Public Distribution System | 9.00 |
| 2 | Loans to Co-operative Institutions and Co-operative Banks like Land Development Bank | | 9.70 |
| 3 | Loans to Government Servants | | |
| | (i) | House Building Advance: | |
| | | (a) For loans upto Rs.50,000/- | 4.50 |
| | | (b) For loans from Rs.50,001/- to 1,50,000/- | 6.00 |
| | | (c) For loans from Rs.1,50,001/- to 5,00,000/- | 8.00 |
| | | (d) Above Rs.5,00,000/- | 9.00 |
| | (ii) | Conveyance Advance: | |
| | | (a) For purchase of Motor car | 10.50 |
| | | (b) For purchase of Motor Cycle / Scooter | 8.00 |
| | | (c) For purchase of Bi-cycle | 4.50 |
| | (iii) | Other personal Loans to Government Servants: | |
| | | (a) For purchase of Computer | 9.00 |
| | | (b) Others | 9.00 |
| 4. | Other items: | | |
| | Loans which are not covered in any specific category mentioned above | | 12.80 |
| 5. | Value of seized stock under Essential Commodities Act, 1955 | | 5.50 |
| 6. | Penal Interest | | 2.50 |

2. The above rates will be applicable for all loans and advances being sanctioned during the financial year 2020-2021 and shall deemed to have taken effect from 1st April 2020 onwards and till the new interest rates for 2021-2022 are fixed. However, the revision of rate of interest, intra-annually, is at the discretion of the Government, for which orders will be issued, if required.

3. The rates of interest are general and will not apply to cases where reduced rates of interest have been sanctioned specially by the Government or where loans have been sanctioned by the Government free of interest. The Government may also sanction Ways and Means advances at special rates of interest taking into account, the cost of borrowing of the Government.

4. The mobilization advances to Contractors for World Bank assisted Projects wherein the standard bidding documents provide for exemption from paying of interest are however exempted from payment of interest.

5. The penal interest:-

i) The penal interest on all overdue instalments of principal and interest will be at 2.50 per cent in addition to the normal rates of interest per annum. i.e. the penal interest is chargeable both on accumulated overdue of the Principal and interest for the period of overdue. [For example, normal rate of interest 9.50% + penal rate 2.50% = 12.00% chargeable]

ii) The penal interest is chargeable on the overdue installments of principal and interest from the due date of their payment to the date preceding the date of actual payment.

6. Except in the case of loans to Government Servants, interest in all cases unless specifically indicated otherwise should be paid every Calendar quarter on the outstanding balance.

7. Even at the stage of sanction of loan, in the sanction order, the period of repayment, rate of interest and schedule of repayment with dates shall be indicated. In case, it is a permanent loan, a specific mention of this fact should be made in the sanction order itself.

எனவே, அரசாணை (நிலை) எண்.98, நிதி (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழுமம்)த்துறை நாள்:26.02.2021ல் குறிப்பிட்டுள்ள வட்டி விகிதங்களும் மற்றும் நிபந்தனைகளும். 01.04.2020 முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 18.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.5வது.ந.க.எண்.ஆர்1/3818 /2021**

**தீர்மானஎண்.490 / 2021** **நாள்:25-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -5 - இரண்டாம் அலை - தொற்று நச்சு தன்மை (வைரஸ்) சமூக பரவலை தடுக்கும் பணி - 150 தன்னார்வலர்களை 16.04.2021 முதல் 15.07.2021 வரை மூன்று மாதங்களுக்கு பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

அரசாணை எண்.95, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்(ப்பி1) துறை, நாள் 13.03.2020ன்படி கொரோனா தொற்று நச்சு தன்மை (வைரஸ்) கோவிட்-19 என்று நோயாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்காய்ச்சல் இரண்டாம் அலை பல நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் உலகமெங்கும் அவசர நிலையினை பிரகடனப்படுத்தியும், கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் அறிவித்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா தொற்று நச்சு தன்மை (வைரஸ்) சமூக பரவலை தடுக்கும் பணி மற்றும் தொற்று நச்சு தன்மை (வைரசால்) பாதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் இருப்பிடத்தில் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய சுய உதவி குழு உறுப்பினர்களை (தன்னார்வலர்களை) கொண்டு முன்பு 15.02.2021 அன்றுடன் அவர்களது தேவையினை நிறுத்திக்கொள்ளப்பட்டது. இக்காரணத்தினால் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வெளியில் வருவதை கட்டுப்படுத்த முடிந்த காரணத்தினால் நோய் தொற்று கணிசமாக குறைந்தது.

தற்போது கொரோனா தொற்று நச்சு தன்மை (வைரஸ்) இரண்டாம் அலை பணிக்கென முதற்கட்டமாக வார்டு ஒன்றிற்கு பத்து தன்னார்வலர்கள் வீதம் 200 வார்டுகளுக்கு 2000 தன்னார்வலர்கள் அமர்த்திக்கொள்ள 12.04.2021 அன்று ஆணையரால் முடிவெடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஆணையர் ஆணை வழங்கியுள்ளார்,.

எனவே,

1. 5வது மண்டலத்திற்கு 49 முதல் 63 வரையிலான 15 வார்டுகளுக்கு 150 தன்னார்வலர்களை 5வது மண்டல அலுவலர் வாயிலாக முன்பு சேவை செய்த நபர்களை முன்னுரிமைக்கொண்டு 16.04.2021 முதல் 15.07.2021 வரை மூன்று மாதங்களுக்கு அமர்த்திக்கொள்ளவும்,

2. இத்தன்னார்வலர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச மதிப்பூதியமாக ரூ.391/- என்ற வீதத்தில் மாத மதிப்பூதியமாக ரூ.11,730/- என நிர்ணயம் செய்து அவர்கள் வருகை புரியும் நாட்களுக்கு ஏற்றவாறு மதிப்பூதியம் 5வது மண்டல உதவி வருவாய் அலுவலர் மூலம் வருகை சான்று பெற்று மண்டல அளவில் தீர்வு செய்ய 5வது மண்டல அலுவலருக்கு அனுமதி வழங்கியும்,

3. மேற்படி மூன்று மாதத்திற்கு, செலவினமாக ரூ.52,78,500/- (ரூபாய் ஐம்பத்து இரண்டு லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து ஐநூறு மட்டும்) யினை நிர்வாக செலவினமாக கோவிட்-19க்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 5வது மண்டல அளவில் மேற்கொள்ளவும்,(A/C code No:230-70-12-03)

**ம.அ.5.வ.து.ந.க.எண்.ஆர்1/3818 /2021**

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 21.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ. 6நக.எண். அ3/61/2021**

**தீர்மானஎண்.491/2021** **நாள்:25-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6-சுகாதாரத்துறை-கோட்டம்-64 முதல் 78 வரை கொரோனா வைரஸ் நோய் அறிகுறிகள் கண்டறிய கணக்கு எடுக்கும் பணி மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு தேவையான பணியாளர்கள் மகளிர் சுய உதவி குழுவின் மூலமாக 850 நபர்களை தற்காலிக பணியாளர்களாக 25.03.2021 முதல் 24.06.2021 வரை மூன்று மாதங்களுக்கு நியமித்து ஊதியம் வழங்க அனுமதி.**

ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் எடுத்த முடிவின்படி மண்டலம்-6, சுகாதாரத்துறை, கோட்டம்-64 முதல் கோட்டம்-78வரை உள்ள கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப்பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள 82329 வீடுகளை 1012 குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு மகளிர் சுயஉதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் நியமிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 08.04.2021 நாளிட்ட அனுமதியில் மண்டலம்-6, சுகாதாரத்துறை, கோட்டம்-64 முதல் கோட்டம்-78 வரை 15 கோட்டங்களில் 82329 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு 1012 செக்டரான குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனாநோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு தற்போது 850 நபர்களை 25.03.2021 முதல் 24.06.2021 வரை மூன்று மாதங்களுக்கு தற்காலிகப்பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.12,121/- வீதம் 850 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.1,03,02,850/- என்ற அளவில் மூன்று மாதங்களுக்கு ரூ.3,09,08,550/- என்று மதிப்பிடப்பட்டு மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் தற்காலிக பணியாளர்கள் நியமிக்க கீழ்கண்டவாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | கோட்டம் எண். | மொத்த வீடுகளின் எண்ணிக்கை | மொத்த செக்டார் எண்ணிக்கை | ஒரு மாத ஊதியம் ரூ. | மூன்று மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 64 | 9670 | 120 | 1454520 | 4363560 |
| 2 | 65 | 7549 | 76 | 921196 | 2763588 |
| 3 | 66 | 9527 | 90 | 1090890 | 3272670 |
| 4 | 67 | 4089 | 50 | 606050 | 1818150 |
| 5 | 68 | 8652 | 70 | 848470 | 2545410 |
| 6 | 69 | 4875 | 55 | 666655 | 1999965 |
| 7 | 70 | 9186 | 70 | 848470 | 2545410 |
| 8 | 71 | 3578 | 30 | 363630 | 1090890 |
| 9 | 72 | 4390 | 60 | 727260 | 2181780 |
| 10 | 73 | 2754 | 40 | 484840 | 1454520 |
| 11 | 74 | 4471 | 40 | 484840 | 1454520 |
| 12 | 75 | 2112 | 30 | 363630 | 1090890 |
| 13 | 76 | 4946 | 43 | 521203 | 1563609 |
| 14 | 77 | 3563 | 36 | 436356 | 1309068 |
| 15 | 78 | 2967 | 40 | 484840 | 1454520 |
| **மொத்தம்** | | **82329** | **850** | **1,03,02,850** | **3,09,08,550** |

**ம.அ. 6நக.எண். அ3/61/2021**

எனவே, மண்டலம்-6, திரு.வி.க.நகர், கோட்டம்-64 முதல் கோட்டம்-78 வரை உள்ள குறுவட்டப்பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு பணிகளுக்காக ஒரு குறுவட்டப் பகுதிக்கு ஒரு நபருக்கு தலா 100 முதல் 150 வரையிலுள்ள வீடுகள் என்ற வகையில் குறுவட்டம் ஏற்படுத்தி மண்டலத்தில் உள்ள 82329 குடியிருப்புகள் குறுவட்டங்களுக்கு தினசரி ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகள் மற்றும் கொரோனா நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் இதர மூலங்களின் மூலம் 850 நபர்களை 25.03.2021 முதல் 24.06.2021 வரை மூன்று மாதத்திற்கு தற்காலிக பணியாளர்கள் நியமிக்க சிறப்பு அதிகாரி அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

(அ) மண்டலம்-6, கோட்டம்-64 முதல் கோட்டம்-78 வரையுள்ள பகுதிகளில் கொரோனா நோய் அறிகுறிகள் கண்டறிந்து கணக்கு எடுக்கும் பணிகளுக்கும், நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பணிகளுக்கும், தேவையான மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் இதர மூலங்கள் மூலம் 850 நபர்களை 25.03.2021 முதல் 24.06.2021 வரை மூன்று மாத காலத்திற்கு தற்காலிக பணியாளர்கள் நியமிக்கவும்,

(ஆ) மேற்கண்ட பணிகளுக்கு ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் ரூ.12,121/- வீதம் 850 நபர்களுக்கு ரூ.1,03,02,850/- என்ற அளவில் மூன்று மாதங்களுக்கு ரூ.3,09,08,550/- (ரூபாய் மூன்று கோடியே ஒன்பது இலட்சத்து எட்டு ஆயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) என்ற மதிப்பீட்டில் செலவினம் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

(இ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண். 202107 மற்றும் கணக்கு குறியீடு எண். 230-701-203ல் ரூ.3,09,08,550/-லிருந்து செலவு செய்யவும்,

(ஈ) மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வரவு செலவு கணக்கு பிரிவு எண். 202107 மற்றும் கணக்கு குறியீடு எண். 230-701-203ல் ரூ.3,09,08,550/-யினை நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 24.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

ம.அ.8.ந.க.எண்.சி3/1681/2021

தீர்மானஎண்.492/2021 நாள்:26-05-2021

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-8, கோட்டம்-104ல் சாலைப் பணியாளராக பணிபுரியும் திருமதி. T.தனலட்சுமி (பணி எண்.686400) அவர்கள் 29.05.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8, கோட்டம்-104ல் சாலைப் பணியாளராக பணிபுரியும் திருமதி. T. தனலட்சுமி, (பணி எண். 686400) அவர்கள் தனக்கு உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் மற்றும் வலது கண்பார்வை திறன் குறைவு காரணமாக தன்னால் பணியினை சரிவர செய்ய இயலவில்லை என தெரிவித்து தன்னை தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களிடம் 01.03.2021 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்.

திருமதி. T. தனலட்சுமி, சாலைப் பணியாளர், அவர்கள் சமர்பித்துள்ள மனுவை பரிசீலனை செய்ததில், தனியர் சென்னை மாநகராட்சியில் கடந்த 18.01.1989 அன்று சாலைப் பணியாளராக பணியமர்வு செய்யப்பட்டு, தற்போது மண்டலம்-8, கோட்டம்-104ல் பணிபுரிந்து வருகிறார். அன்னார் 18.01.1989 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்து 702 நாட்கள் ஊதியமில்லா விடுப்பு நீங்கலாக 30 ஆண்டுகள் 05 மாதம் மற்றும் 04 நாட்கள் பணிபுரிந்துள்ளார். 26.11.1963 அன்று பிறந்த தனியர் 57 வயதினை கடந்துள்ளார். தன் விருப்ப ஓய்வில் செல்ல விதிகளின்படி 50 வயதினை கடந்தும் அல்லது 20 ஆண்டுகள் நிகர பணிக்காலத்தினை முடித்திருக்க வேண்டும். அதன்படி 20 ஆண்டுகள் தகுதிப்பணி நிறைவு செய்தும், 50 வயதினை கடந்துள்ளதாலும் தனியர் தன் விருப்ப ஒய்வில் செல்ல தகுதியுடையவராகிறார். தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவைகள் ஏதும் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தன் விருப்ப ஓய்வு கோரும் இப்பணியாளருக்கு அன்னாரது பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் அடைந்த பணியாளராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அன்னாருக்கு கடந்த 10.02.2021 அன்று போனஸ் நிலை ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலர் அவர்களின் 20.04.2021 நாளிட்ட அறிக்கையில் திருமதி. T. தனலட்சுமி, அவர்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் பெருநகர சென்னை மாநகராட்சி தொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்கு நிலுவை தொகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

மண்டலம்-8, கோட்டம்-104ல் சாலைப் பணியாளராக பணிபுரியும் திருமதி. T. தனலட்சுமி அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை (அ) தணிக்கைச் சம்மந்தமான நிலுவைத்தொகை மற்றும் வேறு ஏதேனும் நிலுவை இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றினை அன்னாருக்கு வழங்கப்படவிருக்கும் பணிக்கொடைத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 29.05.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 24.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண்.இ7/13439/2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/0451/2021**

**தீர்மானஎண்.493 / 2021** **நாள்:26-05-2021**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை – திருமதி. ஆர். எஸ்தர் உமாதேவி, பணிச்செவிலியர், அம்பத்தூர் மருத்துவ மண்டலம் - 7 (பாடி UCHC) அவர்கள் 31.05.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, அம்பத்தூர் மருத்துவ மண்டலத்தில் பணிச்செவிலியராக பணிபுரியும் திருமதி. ஆர். எஸ்தர் உமாதேவி அவர்கள் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தன்னால் பணியாற்ற இயலவில்லை எனத் தெரிவித்து 03.03.2021 நாளிட்ட கடிதத்தினை ஏற்று 31.05.2021 அன்று தன் விருப்ப ஓய்வு வேண்டி 03.03.2021 நாளிட்ட கடிதத்தின் மூலம் கோரியுள்ளார்.

திருமதி. ஆர். எஸ்தர் உமாதேவி அவர்கள் 20.12.1993 அன்று பணிச்செவிலியராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். இவருக்கு பணிச்செவிலியர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தியும், தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

மண்டல அலுவலர் – 7 அவர்களின் 14.02..2020 நாளிட்ட கடிதத்தில், தனியர் பணிப்புரிந்த காலமான 20.12.1993 முதல் 25.10.2010 வரை அம்பத்தூர் நகராட்சியில் ஆய்வு செய்ததில் தனியர் பெயரில் எவ்வித தணிக்கைத் தடை, முன் பணம் நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல மருத்துவ அலுவலர், அம்பத்தூர் மருத்துவ மண்டலம் அவர்களின் 07.04.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது நிலுவைத் தொகை, தணிக்கை தடை, குற்றவியல் நடவடிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பாளர் -2 மருத்துவ சேவைகள் துறை அவர்களின் 26.04.2021 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களின் 24.04.2021 நாளிட்ட குறிப்பில், தனியர் இந்நாள் வரை பணிப்புரிந்த காலத்தில் உள்ளாட்சி தணிக்கைத்துறை ஆவணங்களின்படி, தணிக்கைப்பத்திகள் நிலுவையில் ஏதும் இல்லை என தெரிவித்து, மேலும் 2019 – 2020 மற்றும் 2020 – 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளி வந்தவுடன் தணிக்கைதடை நிலுவை குறித்து பின்னர் தெரியவரின் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என நிபந்தனையுடன் தனியருக்கு சான்று அளிக்கப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 7 கூட்டுறவு சங்க செயலாளர் அவர்களின் 30.03.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் இக்கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என்றும், நிலுவைத் தொகை ஏதும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு சங்க 20.05.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் இக்கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 31.03.2021 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 26.03.2021 நாளிட்ட கடிதத்தில், மேற்படி தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.இ7/13439/2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/0451/2021**

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 59 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 27 ஆண்டுகள் 05 மாதங்கள் 11 நாட்கள் ஆகும். தனியரின் பிறந்த நாள் – 01.06.1962. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.05.2022 ஆகும்.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்:07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்:11.12.1995ன்படியும், தனியர் 27 ஆண்டுகள் 05 மாதங்கள் 11 நாட்கள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தனியரை தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில், திருமதி. ஆர். எஸ்தர் உமாதேவி, பணிச்செவிலியர், அம்பத்தூர் மருத்துவ மண்டலம் - 7 (பாடி UCHC) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, உள்ளாட்சி நிதி தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 31.05.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 24.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**பொ.து.ந.க.எண்.இ7/13565/2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/0464/2021**

**தீர்மானஎண்.494/2021** **நாள்:29-05-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - திருமதி. கே. லட்சுமி, நகர சுகாதார செவிலியர், கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் - 10 (சாலிகிராமம் ஆரம்ப சுகாதார நிலையம்) அவர்கள் 02.06.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் – 10, சாலிகிராமம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நகர சுகாதார செவிலியராக பணிபுரியும் திருமதி. கே. லட்சுமி அவர்கள் தனது குடும்ப சூழ்நிலை மற்றும் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தன்னால் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லை எனத் தெரிவித்து 05.03.2021 நாளிட்ட கடிதத்தினை ஏற்று 02.06.2021 அன்று தன் விருப்ப ஓய்வு வேண்டி 05.03.2021 நாளிட்ட மனுவினை சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு அளித்துள்ளார்.

திருமதி. கே. லட்சுமி அவர்கள் 27.04.1993 அன்று நகர சுகாதார செவிலியராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். இவருக்கு நகர சுகாதார செவிலியர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தியும், தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

மண்டல மருத்துவ அலுவலர், கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் அவர்களின் 22.03.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் பணிபுரிந்த இடங்களான கோயமுத்தூர் மாநகராட்சி, இராணிப்பேட்டை நகராட்சி மற்றும் தற்போது பணிபுரியும் கோடம்பாக்கம் மருத்துவ மண்டலத்தில் பணிபுரிந்த காலத்தில் தனியர் மீது எவ்வித முன்பண நிலுவைத் தொகை, தணிக்கை தடை, குற்றவியல் நடவடிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களின் 24.04.2021 நாளிட்ட குறிப்பில், தனியர் இந்நாள் வரை பணிப்புரிந்த காலத்தில் உள்ளாட்சி தணிக்கைத்துறை ஆவணங்களின்படி, தனியர் இராணிப்பேட்டை நகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதலில் வந்துள்ள காரணத்தால், பொது வைப்பு நிதி, குடும்ப நல சிறப்பு வைப்பு நிதி, கூட்டு ஆயுள் காப்பீட்டு திட்டம், ஓய்வூதியம், விடுப்பு சந்தா தொகை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. தனியர் இராணிப்பேட்டை நகராட்சியிலிருந்து மேற்காணும் தொகைகள் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. தணிக்கைத்தடை 2015-16, பத்தி எண். 53 நிலுவையில் உள்ள பத்தியை நீக்கம் செய்யப்பட வேண்டும். மேலும், 2019 – 2020, 2020 – 2021 மற்றும் 2021 – 2022 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளி வந்தவுடன் தணிக்கைதடை நிலுவை குறித்து பின்னர் தெரியவரின் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் தனியருக்கு சான்று அளிக்கப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்காணிப்பாளர் -2 மருத்துவ சேவைகள் துறை அவர்களின் 26.04.2021 நாளிட்ட குறிப்பில், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு சங்க 20.04.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் இக்கூட்டுறவு சங்கத்தில் நிலுவை தொகை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.இ7/13565/2021 &**

**ம.சே.து.ந.க.எண்.எப்5/0464/2021**

விழிப்பு அலுவலர் அவர்களின் 31.03.2021 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 24.03.2021 நாளிட்ட கடிதத்தில், மேற்படி தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 53 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 28 ஆண்டுகள் 12 நாட்கள் ஆகும். தனியர் சம்பளமில்லா விடுப்பு 23 நாட்கள் துய்த்துள்ளார். தனியரின் பிறந்த நாள் – 04.07.1967. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.07.2027 ஆகும்.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்:07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்:11.12.1995ன்படியும், தனியர் 28 ஆண்டுகள் 12 நாட்கள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தனியரை தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் திருமதி. கே. லட்சுமி, நகர சுகாதார செவிலியர், கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் – 10 (சாலிகிராமம் ஆரம்ப சுகாதார நிலையம்) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது மற்றும் தணிக்கைத்தடை 2015-16, பத்தி எண். 53 நிலுவையில் உள்ள பத்தியை நீக்கம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன், தணிக்கைதடை நிலுவை குறித்து பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 02.06.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 26.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/0952/2021**

**தீர்மானஎண்.495/2021** **நாள்:29-05-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - கொரோனா வைரஸ் தடுப்பு பணி - கொரோனா நோய் தொற்று பாதித்த மக்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல "108 Ambulance " வாகனம் பற்றாக்குறையாக உள்ள நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் Innova, Tavera, Xylo போன்ற வாகனங்களை உட்புறம் உரிய தடுப்புகள் ஏற்படுத்தி, Revolving Lamp-கள் பொருத்தி Covid Special Ambulance ஆக மாற்றி கொரோனா தொற்று நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல பயன்படுத்தியதற்கு நிர்வாக அனுமதி மற்றும் பின்னேற்பு அனுமதி.**

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 2020-ல் உலக சுகாதார நிறுவனம், "கொரோனா வைரஸ்" *(Corona Virus)* மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் *(Pandemic)* என அறிவித்ததை தொடர்ந்து தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியிலும் கடந்த ஆண்டு மார்ச்-*2020* –லிருந்து கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று பாதித்த மக்களுக்கு சிகிச்சை அளித்து அத் தொற்றிலிருந்து மீட்டு எடுப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

இந்நிலையில் , தற்போது கொரோனா வைரஸ் பரவல் *2*-வது அலை தீவிரமாக உள்ளதால், கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்ட மக்களை வீட்டில் இருந்து *Screening Center*, அல்லது *Covid Care Center*–க்கு அழைத்து செல்ல பெருநகர சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறை மூலம் *Tempo Traveller* மற்றும் *Tourister* அல்லது அதற்கு இணையான வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்தப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நோய் தொற்றின் தாக்கம் தீவிரமாக உள்ள நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல *"108 Ambulance "*வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கொரோனா வைரஸ் தொற்று அதிவேகமாக பரவி வரும் நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமான காரணத்தினால், *"108 Ambulance"* வாகனத்தின் தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தற்போதுள்ள *Ambulance* வாகனங்கள் போதுமானதாக இல்லாததால், கொரோனா நோய் தொற்று பாதித்த நோயாளிகளை உடனுக்குடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல பொது மக்களின் பயன்பாட்டிற்கு *" Ambulance "* வாகனங்களை வழங்க வேண்டி *Innova, Tavera, Xylo* போன்ற வாகனங்களை *Covid Special Ambulance* வாகனங்களாக மாற்றவும், இவ்வாகனங்களில், நோய் தொற்று பாதிக்கப்பட்ட மக்களை அழைத்து செல்லும் வகையில் வாகனத்தில் உட்புறம் உரிய தடுப்புகள் ஏற்படுத்தியும், *Revolving Lamp* -கள் பொருத்தியும் மற்றும் பொதுமக்கள் இவ்வாகனத்தினை ஆம்புலன்ஸ் வாகனம் என அறியும் வகையில் "கோவிட் மருத்துவ சிறப்பு அவசர ஊர்தி" என்ற *Sticker*-களை வாகனத்தின் நான்கு புறங்களில் ஒட்டியும் *Covid Special Ambulance* வாகனங்களாக பயன்படுத்த ஆணையர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதனை செயல்படுத்திட தனியார் வாடகை கார் நிறுவனங்களிடமிருந்து *Tavera Xylo0, Innova* வகை வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்தி *Ambulance* –களாக பயன்படுத்திட தீர்மானிக்கப்பட்டது.

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-*16(a)*ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும், இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதால் *Covid Special Ambulance* பணிக்குத் தேவைப்படும் *Innova . Tavera , Xylo* வகை வாகனங்கள் வாடகைக்கு அமர்த்த வாகனங்களை வாடகை முறையில் வழங்கும் தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டது இதில் கீழ்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது விலை புள்ளிகளை வழங்கியுள்ளனர்.

| Vehicle Type | Name of the Company | 10 Hours & 100 Kms. (Exclu. GST) | Extra Hour charges | Extra KM charges |
|---|---|---|---|---|
| Tavera, Xylo or Equivalent | M/s Jyothi Cabs | 2400 | 240 | 12 |
| | M/s KK Cabs | 2500 | 250 | 13 |
| | D.S.T. Travels | 2400 | 240 | 11 |
| | K.R.C. Travels | 2600 | 260 | 13 |
| | Sri Ragavendra Travels | 2800 | 280 | 11 |
| | Sri Chandya Travels | 2800 | 280 | 11 |
| | Hema Enterprises | 2400 | 240 | 13 |
| | Jessy cabs | 2600 | 260 | 13 |
| | Lakshmi Transit Drive Pvt Ltd | 2400 | 240 | 12 |
| | Sangeetha travels | 2900 | 290 | 15 |
| | Kumudha Travels | 2400 | 240 | 12 |
| | Sri Vasantham Travels | 2500 | 250 | 13 |
| **Innova** | m/s Jyothi Cabs | 2700 | 270 | 15 |
| | M/s KK Cabs | 2800 | 280 | 17 |
| | M/s DST Travels | 2700 | 270 | 14 |
| | M/s KRC Travels | 3000 | 300 | 20 |
| | M/s Ragavendra Travels | **3000** | **300** | **19** |
| | M/s Sri Chandya Travels | **3000** | **30** | **19** |
| | M/s Hema Enterprises | **2700** | **270** | **14** |
| | Ms Jessy Cabs | **2900** | **290** | **18** |
| | M/s Lakshmi Transit Drive Pvt Ltd | **2700** | **270** | **15** |
| | Sangeetha Travels | **3100** | **310** | **20** |
| | Kumudha travels | **2700** | **270** | **15** |
| | Sri Vasantha Travels | **2800** | **280** | **17** |

மேற்கண்ட அட்டவணையின்படி , திருவாளர்கள் *Jyothi Cabs, M/s DST Travels., M/s Hema Enterprises, M/s Lakshmi Transit Drive Pvt ltd. M/s Kumudha Travels* ஆகியோர் கீழ்கண்டவாறு ஒரே விலை புள்ளி வழங்கியிருந்தனர்.

| Vehicle Type | Name of the Company | 10 Hours & 100 Kms. (Exclu. GST) | Extra Hour charges | Extra KM charges |
|---|---|---|---|---|
| Tavera, Xylo or Equivalent | M/s Jyothi Cabs | 2400 | 240 | 12 |
| | D.S.T. Travels | 2400 | 220 | 11 |
| | Hema Enterprises | 2400 | 240 | 13 |
| | Lakshmi Transit Drive Pvt Ltd | 2400 | 240 | 12 |
| | Kumudha Travels | 2400 | 240 | 12 |
| Innova | M/s Jyothi Cabs | 2700 | 270 | 15 |
| | M/s DST Travels | 2700 | 270 | 14 |
| | M/s Hema Enterprises | 2700 | 270 | **14** |
| | M/s Lakshmi Transit Drive Pvt Ltd | 2700 | 270 | **15** |
| | Kumudha travels | 2700 | 270 | **15** |

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/0952/2021**

இந்நிலையில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் – 2021 பணிக்கென *Innova, Tavera , Tempo Traveller, Tata Indica. Tourister,* போன்ற வகை வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்த வாடகை கட்டணம் நிர்ணயிக்க வேண்டி, பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள், போக்குவரத்து துறை அதிகாரிகள், காவல்துறை (போக்குவரத்து துறை) அதிகாரிகள் ஆகியோர் கொண்ட குழு கூடி நடத்தப்பட்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் தற்போதைய சந்தை விலை மற்றும் காவல்துறை (போக்குவரத்து) ஆணையர் நிர்ணயித்துள்ள 2020-21 ஆம் ஆண்டிற்கான வாடகை கட்டணம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கூட்ட நடவடிக்கை குறிப்பில் தெரிவித்துள்ள வாடகை கட்டணத்தின் அடிப்படையிலும் பல்வேறு வகையான வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்த வாடகைத் தொகை கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

| Type Of Vehicles (Air-conditioned) | 10 Hours, &100 Kms (Exclu.GST) | Extra Hour charges (Exclu.GST) | Extra KM charges (Exclu.GST) | Remarks |
|---|---|---|---|---|
| **TAVERA, XYLO, TATA SUMO or equivalent** | 2200.00 | 220.00 | 9.00 | Rates approved by the committee consist of RTO's ,Police Officials and Tamilnadu Van owner Association Members |
| **INNOVA** | 2500 | 250.00 | 13.00 | |

திருவாளர்கள் *Jyothi Cabs, M/s DST Travels., M/s Hema Enterprises, M/s Lakshmi Transit Drive Pvt ltd. M/s Kumudha Travels* ஆகியோர் *Tavera, Xylo* அல்லது அதற்கு இணையான வாகனங்கள், மற்றும் *Innova* வகை வாகனங்கள் வாடகை முறையில் வழங்க தெரிவித்திருந்த விலை புள்ளியானது தேர்தல் பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தை காட்டிலும் கூடுதலாக இருந்ததால் இந்நிறுவனங்களை மேற்கண்ட அட்டவணையில் உள்ளவாறு விலைகுறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட திருவாளர்கள் *Jyothi Cabs, M/s DST Travels., M/s Hema Enterprises, M/s Lakshmi Transit Drive Pvt ltd. M/s Kumudha Travels* ஆகியோர் கீழ்கண்டவாறு ஒரே மாதிரியான விலை குறைப்பு வழங்கியுள்ளனர்.

| Vehicle Type | Name of the Company | 10 Hours & 100 Kms. (Exclu. GST) | Extra Hour charges | Extra KM charges |
|---|---|---|---|---|
| **Tavera, Xylo or Equivalent** | M/s Jyothi Cabs | 2200 | 220 | 9 |
| | D.S.T. Travels | 2200 | 220 | 9 |
| | Hema Enterprises | 2200 | 220 | 9 |
| | Lakshmi Transit Drive Pvt Ltd | 2200 | 220 | 9 |
| | Kumudha Travels | 2200 | 220 | 9 |
| **Innova** | M/s Jyothi Cabs | 2500 | 250 | 13 |
| | M/s DST Travels | 2500 | 250 | 13 |
| | M/s Hema Enterprises | 2500 | 250 | 13 |
| | M/s Lakshmi Transit Drive Pvt Ltd | 2500 | 250 | 13 |
| | Kumudha travels | 2500 | 250 | 13 |

மேற்கண்ட 5 நிறுவனங்களும் ஒரே மாதிரியான விலை புள்ளி வழங்கியிருந்த நிலையில் இந்நிறுவனங்களிடமிருந்து தேவைக்கேற்ப வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், இவ்வகை வாகனங்களின் கூடுதல் தேவையின்

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/0952/2021**

காரணமாக மேற்கண்ட விலை புள்ளியில் வாகனங்கள் வழங்க சம்மதிக்கும் இதர நிறுவனங்கள் மூலம் நாளொன்றிற்கு 250 எண்ணிக்கையில் வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்த தீர்மானிக்கப்பட்ட நிலையில் 12.05.2021 முதல் 235 எண்ணிக்கையில் அல்லது அன்றைய தேவைக்கேற்ப *Tavera, Xylo, Innova* வகை வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

அதன் அடிப்படையில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு *“Ambulance “* வாகனங்களை வழங்க வேண்டி *Innova, Tavera, Xylo* போன்ற வாகனங்களை *Covid Special Ambulance* வாகனங்களாக வாடகை முறையில் பணியமர்த்த, தேர்தல் பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென நடத்தப்பட்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை அடிப்படையாக கொண்டும், தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலை புள்ளியின் அடிப்படையிலும் வாடகை தொகை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு கீழ்கண்டவாறு தோராய மதிப்பீடு கணக்கிடப்பட்டது.

| Sl. No | Purpose | Type of Vehicle | Total No of vehicle | Date of Deployment | Total No of days (up to 30,06.2021) | Hire Charges per day per vehicle Exclu. GST) Rs. | Total Amount Rs. (Exclu .GST) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Tempravery Ambulance for shifting Covid patients to Hospitals | Innova | 84 Nos | 12.05.2021 | 50days | 3000/- (10 hrs 100 Kms+ Extra 2hrs 2500+ 250=3000) | 1,26,00,000/- |
| 2. | | Tavera , Xylo Or Equivalent Vehicle | 151 | 12.05.2021 | 50 days | 2640/- (10 hrs 100 Kms+ Extra 2hrs 2200+ 440=2640) | 1,99,32,000/- |
| **Total** | | | | | | | 3,25,32,000/- |
| **GST@5%** | | | | | | | 16,26,600/- |
| **Grand Total** | | | | | | | 3,41,58,600/- say 3,42,00,000/- |

மேற்கண்ட அட்டவணையின்படி *COVID*-19 தடுப்பு பணிக்கு பணியமர்த்தப்படும் *Innova, Xylo, Tavera* வகை வாகனங்கள் 235 எண்ணிக்கையில் *Covid*- மருத்துவ சிறப்பு அவசர ஊர்தியாக வாடகை முறையில் அமர்த்துவதற்கான தோராய செலவீனம் ரூ3,42,00,000/- (*Inclu.GST@5%*) என கணக்கிடப்பட்டுள்ளது. எனினும் அன்றைய தேதியில் தேவைக்கேற்ப பணியமர்த்தப்படும் வாகனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பட்டி தீர்வு செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட விலை விகிதத்தில் 12.05.2021 அன்று முதல் *Innova* வாகனங்கள் 84 எண்ணிக்கையிலும் மற்றும் *Tavera* அல்லது அதற்கு இணையான வாகனங்கள் 151 எண்ணிக்கையிலும் ரூ3,42,00,000/- (*Inclu.GST@5%*) (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்திரண்டு இலட்சம் மட்டும்) வாடகை முறையில் அமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.

இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண்40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-04 என்னும் தலைப்பின் கீழ் 2021-22 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/0952/2021**

எனவே,

1. கொரோனா வைரஸ் நோய் தொற்றின் தாக்கம் அதிகமாகி வரும் நிலையில் ஆம்புலன்ஸ் வாகனங்களின் பற்றாக் குறையின் காரணமாக 235 எண்ணிக்கையில் *Innova*, மற்றும் *Tavera*, *Xylo* அல்லது அதற்கு இணையான வாகனத்தினை 12.05.2021 முதல் 50 நாட்களுக்கு ரூ3.42 கோடி தோராய மதிப்பீட்டில் கோவிட் மருத்துவ சிறப்பு அவசர ஊர்தி வாகனங்களாக மாற்றி நோய் தொற்று பாதித்த மக்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல பயன்படுத்தியதற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும் இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதால், கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக்கென பல்வேறு வகையான வாகனங்களை வாடகை முறையில் அமர்த்த தனியே விலை புள்ளி கோராமல், தேர்தல் பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென நடத்தப்பட்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை அடிப்படையாக கொண்டும், தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலை புள்ளியின் அடிப்படையிலும் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு விலை நிர்ணயம் செய்ததற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

| **Type Of Vehicles (Air- conditioned)** | **10 Hours, &100 Kms (Exclu.GST)** | **Extra Hour charges (Exclu.GST)** | **Extra KM charges (Exclu.GST)** | **Remarks** |
|---|---|---|---|---|
| **TAVERA, XYLO, TATA SUMO or equivalent** | 2200.00 | 220.00 | 9.00 | Rates approved by the committee consist of RTO's ,Police Officials and Tamilnadu Van owner Association Members |
| **INNOVA** | 2500 | 250.00 | 13.00 | |

3. கீழ்கண்ட அட்டவணையில் உள்ள படி நாளொன்றிற்கு 250 எண்ணிக்கையில் அல்லது அன்றைய தேவைக்கேற்ப *Tavera*, *Xylo*, *Innova* வகை வாகனங்கள் 12.05.2021 முதல் 50 நாட்களுக்கு தோராய மதிப்பீடான ரூ.3.42 கோடி செலவீனத்தில் வாடகை முறையில் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதியும்,

| **Sl.No** | **Purpose** | **Type of Vehicle** | **Total No of vehicle** | **Date of Deployment** | **Total No of days (up to 30.06.2021)** | **Hire Charges per day per vehicle Exclu. GST) Rs.** | **Total Amount Rs. (Exclu .GST)** |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Tempravery Ambulance for shifting Covid patients to Hospitals | Innova | 84 Nos | 12.05.2021 | 50days | 3000/- (10 hrs 100 Kms+ Extra 2hrs 2500+ 250=3000) | 1,26,00,000/- |
| 2. | | Tavera , Xylo Or Equivalent Vehicle | 151 | 12.05.2021 | 50 days | 2640/- (10 hrs 100 Kms+ Extra 2hrs 2200+ 440=2640) | 1,99,32,000/- |
| **Total** | | | | | | | 3,25,32,000/- |
| **GST@5%** | | | | | | | 16,26,600/- |
| **Grand Total** | | | | | | | 3,41,58,600/- say 3,42,00,000/- |

4. 12.05.2021 அன்று 235 எண்ணிக்கையில் Tavera, Xylo, Innova வகை வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்தப்பட்ட நிலையில் இனி வரும் காலங்களில் (50 நாட்களுக்குள்) அன்றைய தேவைக்கேற்ப வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்தவும் அதற்கான பட்டித் தொகை தீர்வு செய்யவும்,
5. மேலும் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மேற்கண்ட விலை விகிதத்தில் வாகனங்கள் வாடகை முறையில் வழங்க நிறுவனங்களான திருவாளர்கள் Jyothi Cabs, M/s DST Travels., M/s Hema Enterprises, M/s Lakshmi Transit Drive Pvt ltd. M/s Kumudha Travels ஆகியோர் மூலமும் மற்றும் இவ்வகை வாகனங்களின் கூடுதல் தேவையின் காரணமாக மேற்கண்ட விலை விகிதத்தில் வாகனங்கள் வழங்க சம்மதித்த நிறுவனங்கள் மூலம் தேவைக்கேற்ப வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்த நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
6. இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண் 40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-04 என்னும் தலைப்பின் கீழ் 2021-22 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,
7. இனம் 1 முதல் 6 வரை ஏற்பின், இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண் 40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-04 என்னும் தலைப்பின் கீழ் ரூ.3,42,00,000/. நிதி ஒதுக்கீடு செய்து வழங்க, நிதி ஆலோசகர் அவர்களை கோர அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய குறிப்பில்,

**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.05.2021 நாளிட்ட மேற்குறிப்பில்,**

**"We can see the utility & reduce numbers if the cases reduce" என தெரிவித்துள்ளார்.**

முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 27.05.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

********